கல்கி

KALKI 3.9.89
ரூ. 2.50



மலையாளத்தில் அவார்டு; தமிழில் அலட்சியம்!

உங்கள் குழந்தைக்கு
அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தவறாது பின்பற்றுங்கள்.



இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008


Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/TSL/5112/TAM

கண்காட்சி ஸ்பெஷல்:

ஒரே இடத்தில் ஐயாயிரம் விநாயகர்கள்!



* பலரகப் பிள்ளையார்கள்

ஒன்றல்ல இரண்டல்ல — ஐயாயிரம் பிள்ளையார்கள். 'பூம்புகார்' நடத்திய 'விநாயகர் சதுர்த்தி' ஸ்பெஷல் கண்காட்சி! வெண்கலம், சந்தன மரம், தந்தம், நாட்டு மரம் ஆகியவற்றில் மட்டுமின்றி பேப்பர் மெஷ், மாக்கல், பத்திக், கலம்கரி என்று ஒன்றையும் விட்டு வைக்காமல், அத்தனை யிலும் பிள்ளையார்களாய்ச் செய்து குவித்து விட்டார்கள் — அதுவும் தவழும், நிற்கும், நடக்கும், நடனமாடும் போஸ்களில் மிகவும் ரசிக்கும்படி. பத்து ரூபாயிலிருந்து, பத்தாயிரம் ரூபாய் வரை விலை மாறுபடு கிறது. வெள்ளெருக்குச் செடியின் வேரில் செய்யப்பட்ட பிள்ளையாருக்கு சென்ட்டி மெண்டலாய் மதிப்பு அதிகமாம். அதை வீட்டில் வைத்துப் பூஜித்தால் சுபிட்சம் நிலவுமாம்.

அமிதாப் சென்குப்தா. இந்த வங்கா ளத்தைச் சேர்ந்த ஓவியர் சென்னையில் நடத்திய கண்காட்சி: ''இன்டீரியர்ஸ்''. ஆம், வீட்டின் உட்பகுதிகளை மனிதநட மாட்டமில்லாத சூழலில், ஓவியமாய்த் தீட்டி யிருந்தார்! மனிதர்கள் ஓவியத்தில் இடம் பெறவில்லையேயொழிய, அவற்றைப் பார்க்கும் போது, இதோ, இப்போதுதான் மனிதர்கள் அந்த இடத்தை விட்டு எழுந்து போயிருக்கிறார்கள் என்ற உணர்வையோ அல்லது, இதோ யாரோ உள்ளே நுழையப் போகிறார்கள் என்கிற உணர்வையோதான் ஏற்படுத்தின. ஏழையின் குடிசையையும் உள் நோக்கியிருந்தது குறிப்பிடத்தக்க அம்சம்.

* கார்க்கில் மாடர்ன் ஆர்ட் கண்ணன்



'கார்க்' என்பது முன்காலத்தில் டாக்டர் எழுதித் தந்த ''மிக்ஸ்சர்'' மருந்து அடங்கிய பாட்டிலை மூட உதவியது என்று தான் நாம் அறிவோம். கார்க் மரத்தை வெட்டி அப்படியே உபயோகிக்க முடியாது; அந்த மரத்திலிருந்து வழியும் பாலிலிருந்து தான் கார்க் தயாரிக்கப்படுகிறது என்கிற விஷயம் அண்மையில் நடந்த கார்க் கலைக் கண்காட்சிக்குப் போயிருந்த போதுதான் தெரிந்தது. (நடத்தியவர் ரமணி) கார்க்கை உபயோகித்துப் படைக்கப்பட்ட மாடர்ன் சிற்பக் கண்காட்சியில் பலரையும் கவர்ந்த, கோவர்த்தனகிரியைத் தாங்கிய கிருஷ்ண ரைப் படத்தில் பார்க்கிறீர்கள்.



* ஒரு கனவுக் காட்சி

சினிமாவில் கனவுக் காட்சிகள் படு ஜாலியாக இருக்கும். ஆனால் திருநெல்வேலி யைச் சேர்ந்த இளம் ஓவியர் ராஜன், சென்னை லலித் கலா அகாடமியில் நடத் திய கண்காட்சியில் 'கனவு' என்ற தலைப் பில் இடம்பெற்றிருந்த ஓவியங்கள் சிக்கலா கவே இருந்தன; சில பயமுறுத்தக் கூடச் செய்தன! ''கனவு என்பதே மனிதனின் ஆழ்மனத்தில் உறங்கும் விஷயங்களின் வெளிப்பாடுதானே?'' என்கிறார் ஓவியங் களை வரைந்த ராஜன்.

— மௌஷ்மி

மலையாளத்தில் அவார்டு: தமிழில் அலட்சியம்!

—ஒரு நடிகையின் ஆதங்கம்

கன்னடத்திலும், மலையாளத்திலும் சிறந்த நடிகைக்கான அவார்டுகளைப் பல முறை பெற்றிருக்கும் கீதா ஒரு தமிழ்ப் பெண். அவரது முதல் சினிமா அறிமுகம் என்பது தமிழ்ப் படத்தில்தான். அப்படியிருந்தும் ஏன் தமிழ்ப் படவுலகில் அவரால் ஒரு முன்னணி நட்சத்திரமாகப் பிரகாசிக்க முடியவில்லை? அதற்கான காரணங்களை அவரே இந்தப் பேட்டியில் கூறுகிறார்...

கேள்வி: உங்கள் சினிமா உலகப் பிரவேசம் என்பது நடிகையாக வேண்டும் என்ற உங்கள் ஆசையால் நிகழ்ந்ததா அல்லது தற்செயலாக நிகழ்ந்ததா?

கீதா: நான் சென்னை தி. நகரிலுள்ள குண்டூர் சுப்பையா பிள்ளை உயர்நிலைப் பள்ளியில் எஸ். எஸ். எல். சி. படித்துக் கொண்டிருந்த நேரம். அது 79 — ஆம் ஆண்டு. வழக்கமாக நான் தி. நகரிலுள்ள முப்பாத்தம்மன் கோயிலுக்குச் செல்வேன். அப்படி ஒருநாள் கோயிலில் என்னைப் பார்த்த கலைஞானம் அவர்கள், 'நீ நடிக்க வருகிறாயா? உன் அட்ரஸைக் கொடு...' என்றார். அவர் ஏதோ என்னை கலாட்டாதான் செய்கிறார் என்று நினைத்துப் பயந்து அலறி விட்டேன். அதனால், அவரிடமிருந்து தப்பித்தால் போதுமென்று என் பெரியம்மா வீட்டு முகவரியைக் கொடுத்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்துவிட்டேன். அன்று மாலையே அவர் என் பெரியம்மா வீட்டுக்கு வந்து விசாரித்திருக்கிறார். அவர்கள் என் வீட்டுக்குக் கூட்டிவர, ஒருவழியாக அப்பா — அம்மாவும் சமாதானமடைந்து ஒப்புதல் கொடுக்க, 'பைரவி' என்ற தமிழ்ப் படத்தில் அறிமுகமானேன். எல்லாமே தற்செயலானதுதான்.



கேள்வி: முதல் நாள் படப்பிடிப்பு அனுபவம் எப்படி இருந்தது?

கீதா: முதல் நாள் ஷூட்டிங் சுருளிராஜன் சாரோடுதான். சிரிக்கச் சொன்னார்கள். பயமாக இருந்ததே தவிர, சிரிக்க வரவில்லை. சுருளிராஜன் சார்தான் என்னைச் சிரிக்க வைத்துப் பயத்தைப் போக்கினார்.

கேள்வி: முதல் நாள் சிரிக்கக் கூடத் தெரியாமல் பயந்த நீங்கள் பிறகு எப்படிப் பல அவார்டுகளை வாங்கும் அளவுக்கு வளர்ந்தீர்கள்?

கீதா: பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது, பட்டதாரியாகி ஏதாவதொரு வேலைக்குப் போகலாம் — திருமணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளோடு வாழலாம் என்கிற சராசரி ஆசையில்தான் நான் இருந்தேன் என்றாலும் நடிக்க என்று வந்து விட்ட பிறகு, சும்மா இருந்துவிட முடியாதே! அதனால் படிப்படியாக என்னை நானே நடிப்புக்குத் தயார்படுத்திக் கொள்ள ஆரம்பித்தேன். எனது சுய ஆர்வத்தோடு டைரக்டர்களின் ஒத்துழைப்பும் பூரணமாகச் சேர்ந்





த்தால் அவார்டுகள் வாங்குகிற அளவுக்கு வளர்ந்தேன்.

கேள்வி: தமிழில் அறிமுகமான நீங்கள் தொடர்ந்து தமிழிலேயே பிரகாசிக்க முடியாமல் போனதற்கு என்ன காரணம்?

கீதா: அது எனக்கும் தெரியவில்லை. ஒரு வேளை, நானாகவே பலரிடமும் சென்று வாய்ப்புக் கேட்காமல் இருந்தது கூட ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் உண்மை எதுவென்று தெரியவில்லை.

கேள்வி: மலையாளம் — கன்னடம் என்று எப்படிச் சென்றீர்கள்?

கீதா: 'பைரவி' படத்தைப் பார்த்து விட்டு, 'ஹாம்பாஞ்ச்' என்ற தெலுங்குப் படத்தில் தான் அடுத்த வாய்ப்புக் கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்துதான் கன்னடம், மலையாளம் என்று தெலுங்குப் படவுலகையே மறக்கும் அளவுக்கு வாய்ப்புக்கள் வந்தன. அங்கும் நானாகச் சென்று யாரிடமும் சான்ஸ் கேட்கவில்லை.

கேள்வி: மலையாள — கன்னடப் படவுலகங்களுக்கும் தமிழ்ப் படவுலகுக்கும் என்ன. வித்தியாசம் காண்கிறீர்கள்?

கீதா: சினிமாக்காரர்கள் என்ற அளவில் எடுத்துக் கொண்டால் இங்குள்ளவர்களை விட அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள் — அதிக நேரம் உழைக்கிறார்கள் என்று சொல்லலாம். அதனால் வேலைகளும் சுலபமாக முடிந்துவிடும். நான் இதுவரை அங்கு ஒரு படத்திற்கு எட்டு அல்லது பத்து நாட்களுக்கு மேல் கால்ஷீட் கொடுத்ததேயில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! படப்பிடிப்பு என்று எடுத்துக் கொண்டால் அங்கு ஓர் யதார்த்தம் இருக்கும். ஒவ்வொரு பாத்திரமும் காட்சிச் சூழலும் வெகு இயல்பாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் மிகவும் கவனம் செலுத்துகிறார்கள். சம்பந்தா சம்பந்தமில்லாமல் பாடல் காட்சிகளோ, கனவுக் காட்சிகளோ, ஆடை ஆபரணங்களோ அங்கு சுத்தமாகவே இல்லையென்றும் சொல்லலாம். கதையம்சம் என்று எடுத்துக் கொண்டாலும் தமிழில் காதல் அல்லது பழி வாங்குதல் இல்லையென்றால் குடும்பப் பிரச்னை என்று மிகக் குறுகிய எல்லைக்குள்ளேயே முடிந்துவிடும். அங்கு அப்படியில்லை. பல்வேறு சமூகப் பிரச்னைகளையும் கதையாக எடுக்கிறார்கள். அந்த நிலை தமிழில் தோன்றியிருப்பது மிகச் சமீபத்தில்தான்.

கேள்வி: 'பைரவி' படத்திற்குப் பிறகும் தமிழில் நீங்கள் நடிக்காமல் இல்லையே? அப்படியிருந்தும் நீடிக்காமல் போனதற்கு என்ன காரணம்?

கீதா: நினைத்தாலே இனிக்கும், கலியுகம், கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்று நான் சில தமிழ்ப் படங்களில் நடித்திருந்தாலும் தொடர்ந்து நீடிக்க முடியாமல் போனதற்கு. ஒருவேளை எனக்குத் தமிழில் அதிர்ஷ்டம் இல்லாமல் போனதுதான் காரணமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் இங்கு எத்தனையோ பேர் நடிகைகளாக இருக்கும் போது நான் எப்படி இல்லாமல் போக முடியும்? தமிழில் திறமை மட்டும் போதாது. குருட்டு அதிர்ஷ்டமும் வேண்டும்! ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். தற்போது 'நியாயத் தராசு' என்று வெளியாகியிருக்கும் தமிழ்ப் படத்தின் மூலம், 'பஞ்சாக்னி' என்கிற மலையாளப் படம்தான்.

அதில் நான்தான் கதாநாயகி. அப்படத்திற்காக வடகொரியாவிலிருந்து சிறந்த நடிகைக்கான அவார்டைப் பெற்றேன். ஆனால், அதையே தமிழில் 'நியாயத் தராசு' என்று எடுத்த போது, என்னை நடிக்கக் கூப்பிட வேண்டும் என்று நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை என்கிற சூழ்நிலையிலும் என்னிடம் வந்து, 'அப்படத்தில் இரண்டாவது ஹீரோயினாக நடிக்க வருகிறாயா?' என்று கேட்டார்கள். நீங்களே யோசித்துப் பாருங்கள்... அப்படி அழைத்தது எனக்கு எத்தகையதோர் அவமானம் என்று. பிறகு எப்படி நான் தமிழில் நடிக்க முடியும்?

கேள்வி: அதற்கான காரணத்தைத்தான் கேட்கிறேன்.

கீதா: காரணம் என்று எதைச் சொல்வது? இங்கெல்லாம் எந்தக் கேரக்டராக இருந்தாலும் பாப்புலராக இருக்கும் ஒரு நடிகையைப் போட்டால்தான் படம் ஓடும் என்கிற பொதுவான அபிப்பிராயம் இருக்கிறது. இதையே வேறு மாதிரி சொன்னால், கேரக்டரை விட — திறமையை விட இங்கு பாப்புலாரிட்டிக்குத்தான் முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆனால், மலையாளத்தில் — கன்னடத்தில் அப்படியில்லை; கேரக்டர்களுக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. இதுவொரு முக்கியமான காரணமாக இருக்கலாம். இப்போது நான் பாலசந்தர் சாரின் 'புதுப்புது அர்த்தங்கள்' படத்தில் நடித்திருக்கிறேன். விரைவில் வெளிவரப் போகும் அப்படம் எனக்கும் இங்கே ஒரு பாப்புலாரிட்டியைத் தரலாம். அதன் பிறகு தொடர்ந்து வாய்ப்புக்களும் கிடைக்கலாம்.

கேள்வி: பாலசந்தருக்கு மட்டும் எப்படி உங்களை நடிக்க வைக்கத் தோன்றியது?

கீதா: இங்கும் பாலசந்தர் சார் மாதிரி கேரக்டர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் டைரக்டர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவருடைய 'நினைத்தாலே இனிக்கும்' படத்தில் எனக்குச் சரியான ரோல் தரப்படவில்லை என்று அவரே கருதினாரோ என்னவோ, அவருடைய 'இரு கோடுகள்' படத்தைக் கன்னடத்தில் எடுத்த போது தமிழில் ஜெயந்தி நடித்த ரோலை எனக்குக் கொடுத்தார். அந்தப் படம் அங்கே பிரமாதமாக ஓடியது. அதன் மூலம் அவருக்கு என்மேல் முழு நம்பிக்கை வந்திருக்குமென்று கருதுகிறேன்.

கேள்வி: இதுவரை நீங்கள் நடித்த கேரக்டர்களில் உங்களுக்குப் பிடித்த கேரக்டர் எது?

கீதா: எல்லாக் கேரக்டர்களுமே எனக்குப் பிடித்தகேரக்டர்கள்தாம். இல்லையென்றால் நடித்திருப்பேனா? எந்தக் கேரக்டராக இருந்தாலும் அதில் நமது திறமையைக் காட்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கேள்வி: அப்படியானால் கதாநாயகியல்லாத ரோலிலும் நடிக்கச் சம்மதிப்பீர்களா?

கீதா: இப்போது நான் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்தாலும் கூட இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு இப்படிக் கதாநாயகியாகவே இருந்துவிட முடியும்? மீறிப் போனால் இன்னும் நான்கைந்து ஆண்டுகள்தான். பிறகு முடியாது. அந்த நிலையில் வெறும் எஸ். எஸ். எல். சி. மட்டுமே படித்த நான் வேறு எந்த வேலைக்குப் போக முடியும்? தொடர்ந்து நடிக்கத்தான் வேண்டும்.

கேள்வி: டைரக்டர்கள் விஷயத்தில் எப்படி? இன்னாருடைய டைரக்ஷனில் நாம் ஒரு படமாவது நடிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறதா?

கீதா: ஒவ்வொரு டைரக்டரிடமும் ஒவ்வொரு திறமை இருக்கவே செய்யும் என்பதால் அனைவர் டைரக்ஷனிலும் நடிக்கவே ஆசை. இருப்பினும் சமுதாய நோக்கோடு எடுக்கப்படும் படங்களில் நடிப்பதில்தான் எனக்குக் கொள்ளை ஆசை.

பேட்டி: **இளங்கோவன்**

அட்டை வண்ணப்படம்: **ஹரீஷ்**



எங்கள் ஊரில் சுதந்திர தினத்தன்று அந்தந்தத் தெருக்களில் உள்ள உற்சாகமான மாணவர்கள் கொடியேற்றி மாலையில் ஏதாகிலும் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதுண்டு. இந்த வருடமும் அதே போல் ஒவ்வொரு தெருவிலும் சுதந்திர தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் ஒரு தெருவில் உள்ள இளைஞர்கள் மட்டும் வித்தியாசமான முறையில் கொண்டாடினார்கள். எங்கள் ஊரில் அந்த வட்டாரத்தில் உள்ள ஒரு பிச்சைக்காரியின் பத்து வயது மகனுக்குப் புது உடைகள் தைத்துத் தந்து அன்று அவனைக் குளிக்கச் செய்து, அந்த ஆடையை அணியச் செய்து அந்தச் சிறுவனையே கொடியேற்றச் செய்தார்கள்!

— விமோ, நெல்லிக்குப்பம்.

ஐ.டி.பி.ஐ.

முதலீட்டு வைப்புக் கணக்குத் திட்டம்




- கம்பெனிகள், பங்குடமை நிறுவனங்கள், தனிநபர் மற்றும் இந்து கூட்டுக் குடும்பங்களுக்கு, வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு எண்-32 AB-ன் கீழ் ''வியாபாரம் அல்லது தொழிலிலிருந்து வருமானம்'' எனும் தலைப்பில் கணக்காக்கப்படும் வருமானத்தின் மீது செலுத்த வேண்டிய வரியில் சலுகை.
- இத்திட்டத்தில் செலுத்தப்படும் வைப்புகள் வரிக்கு இலக்காகும் வருமானத்திலிருந்து 20% வரை தள்ளுபடிக்கு உட்படும்.
- இத்திட்டத்தில், வைப்புகள், வரிகொடுப்போரின் கணக்கு ஆண்டு முடிந்த 6 மாதத்திற்குள் அல்லது வரி மொழி சமர்ப்பிப்பதற்குள், இவையில் எது முதன்படியோ அதற்குள் செலுத்தப்பட வேண்டும்.
- வைப்புகள் அஞ்சல் மூலம் அனுப்பலாம்.
- முதலீடு செய்யப்பட்ட வைப்புகள் மீது ஆண்டொன்றுக்கு 10% வீதம், வரி கழிக்கப்படாமல், வட்டி ஏப்ரல் 1-ம் தேதி வைப்புக்காரரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். இவ் வட்டித் தொகையை வங்கியிலிருந்து எடுப்பதற்கு எவ்விதத் தடையுமில்லை.
- முதலீடு செய்த ஒரு ஆண்டுக்குப் பின், வைப்புத் தொகையை தொழில் அல்லது வியாபாரத்திற்குத் தேவையான இயந்திரங்கள், கம்ப்யூட்டர் போன்றவைகளை வாங்கப் பயன் படுத்தலாம்.
- வெளியூர்க் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவற்றை மாற்றுவதற்கான செலவை ஐடிபிஐ ஏற்றுக் கொள்ளும். காசோலை ஐடிபிஐக்குக் கிடைக்கும் நாள் வைப்புக் கணக்கின் முதல் நாளகக் கருதப்படும்.
- Demand Draft-கள் வாங்கிய தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஐடிபிஐ-ல் பெறப்பட்டால்Draft வாங்கிய தேதிமுதல் வைப்புக் கணக்குத் தொடங்கப்படும்

Sobhagya-B/89 TAM

இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் பாங்க் ஆப் இந்தியா

ஐடிபிஐ டவர், கஃப் பரேட், கொலாபா, பம்பாய்-400 005.

"அம்மா, என்னை என்ன செய்யப்போறே?"



'தியேட்டர் எஃபெக்ட்!'

○○ வீட்டில் எல்லோரும் 'பாசப் பறவைகள்' திரைப் படத்தை வீடியோவில் பார்த்துக் கொண்டிருந்தோம். எனது மாமாவும் எங்களுடன் இருந்தார். அவர் கிராமத்தில் இருப்பவர். கிராமத்தில் உள்ள பழைய திரை அரங்குகளிலேயே சினிமா பார்த்துப் பழக்கப்பட்டவர். "தியேட்டரில் உட்கார்ந்து படம் பார்க்கின்ற எஃபெக்ட் இல்லை," என்று அடிக்கடி கூறிக் கொண்டேயிருந்தார். திடீரென்று, "ஆஹா இப்பொழுது தியேட்டர் எஃபெக்ட் வந்து விட்டது" என்று சொல்ல, நாங்கள் ஒன்றும் புரியாமல் அவரைப் பார்க்க, அவர் உட்கார்ந்திருந்த சோபாவில் இருந்து ஒரு மூட்டைப் பூச்சியை எடுத்துக் காண்பித்து, "இப்பொழுது தியேட்டர் எஃபெக்ட் இருக்கிறது," என்றாரே பார்க்கலாம்! வெட்கங் கலந்த எங்கள் சிரிப்பு அலை ஓய வெகு நேரமாயிற்று.

— கிரிஜா ராமச்சந்திரன்,
பெங்களூர் — 3

"என்னை என்னம்மா செய்வாய்?"

○○ "இரண்டு குழந்தை போதுமே" என்ற விளம்பரம் வந்து கொண்டிருந்த நேரம் அது. என் மூன்றாவது மகன் (5 வயது) மிகவும் சோகமாகவும், சரியாகச் சாப்பிடாமலும் அமர்ந்திருந்தான். "என்னப்பா ஒரே டல்லா இருக்கியே, உடம்பு சரியாயில்லையா?" என்று கேட்டேன். அவன் டக்கென்று, "என்னை என்னம்மா பண்ணப் போறீங்க?" என்று கேட்டவுடன், "ஏம்பா, திடீர்னு இப்படிக் கேட்கிறே?" என்று கேட்டேன்: அதற்கு அவன், ரொம்பப் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு, "டீ.வி.யில் இரண்டு குழந்தை. போதும் என்று சொல்றாங்களே, அதான் என்னை என்ன பண்ணப் போறேன்னு கேட்டேன்?" என்றான். பிறகு அவனைச் சமாதானப்படுத்துவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

— எஸ். கமலா தேவி, சென்னை — 6.

'ஆன்ட்டி ஏன் அப்படி?'

○○ எங்கள் குழந்தை மூன்றரை வயது நந்தாவிற்கு டீ.வி.யில் விளம்பரங்களைப் பார்ப்பதென்றால் ஒரே குஷி! ஒரு நாள், குளிப்பதற்கு உபயோகிக்கும் சோப் விளம்பரம் ஒன்றை உன்னிப்பாகக் கவனித்து ரசித்து விட்டுக் கேட்டான்: "அம்மா இந்த ஆன்ட்டி மாத்திரம் ஏன் பாத்ரூம் கதவைச் சாத்தாமல் குளிக்கிறாங்க?" என்று. நான் அவனுக்குப் பதில் கூற முடியாமல் திகைத்து நின்றேன்.

— சுபா பாலசுப்ரமணியன்,
திருவனந்தபுரம்.


வருந்தியதன் விளைவு!

○○ எங்கள் பாட்டிக்கு டீ.வி., வீடியோ என்று தெரியுமே தவிர, விவரமாக எதுவும் தெரியாது. ஒரு நாள் வீடியோவில் "புதிய பறவை" படம் பார்த்துக் கொண்டிருந்தோம். அதில் கடைசியில் சிவாஜி அழுது கொண்டு வாக்குமூலம் கொடுக்கும் காட்சியில் கரண்ட் கட் ஆகி விட்டது. இரண்டு மூன்று முறை கட் ஆகிப் பிறகு கால் மணி கழித்துக் கரண்ட் வந்தவுடன், சிவாஜி மிகவும் சோகமாக அழுது கொண்டிருந்தார். திடீரென்று அதைப் பார்த்துப் புரியாத பாட்டி, "சிவாஜி ஏன் இப்படி அழுகிறார்?" என்று கேட்க, என் தம்பி "பாட்டி, இரண்டு மூன்று முறை தடங்கல் வந்ததினால் தடங்கலுக்கு வருந்தி, வருந்தித் தாங்க முடியாமல் அழுகிறார்," என்று கூற, பாட்டியும் உண்மை என்று நினைத்துக் கொண்டு "ஓஹோ பாவம்!" என்று கூறினார். எங்களால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை!

— ஜெ. குமார், சீர்காழி.

இதோ ஒரு யோசனை!

○○ என் வீட்டுக்கு அருகில் இருக்கும் ஏழைச் சிறுவன் ஒருவன் என்னிடம் வந்து, "அக்கா, நோட்டு, புத்தகம் வாங்கணும். ஆனால் யாரிடமும் யாசகம் கேட்க விருப்பமில்லை. நானே லீவு நாளிலே சம்பாதிக்கிற மாதிரி ஒரு யோசனை சொல்லுங்களேன்," என்றான். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் டீ.வி.யில் தமிழ்த் திரைப் படம் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு ஒரு திடீர் ஐடியா உதயமாயிற்று! "ஏன் தம்பி ஞாயிறு அன்று மட்டும் சுண்டல், முறுக்கு, சாக்லேட், கடலை மிட்டாய் போன்ற தின்பண்டங்களை டீ.வி.யில் சினிமாப் பார்த்



துக் கொண்டிருப்பவர்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று வியாபாரம் செய்ய லாமே,'' என்றேன். அவனும் அதற்குச் சம்மதித்து, மறு வாரம் வியாபாரத்தை ஆரம்பிக்க, ஒவ்வொரு ஞாயிறும் தின் பண்டங்களைக் கொண்டு சென்று வீடு விடாகக் கொடுக்க ஆரம்பித்ததும் நல்ல வரவேற்பு இருந்தது. இப்போதும் அதை விடாமல் செய்து, தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறான் அந்தப் புத்திசாலிச் சிறுவன்!

— என். தங்கம், ஆவடி.

''சபாஷ், சரியான போட்டி!''

○○ கடந்த 11.8.89 அன்று ஒலியும் ஒளியும் நிகழ்ச்சியில், ''சபாஷ் சரியான போட்டி!'' என்ற குரல் ஒவ்வொரு பாட லின் ஆரம்பத்திலும் ஒலிக்க, போட்டி போடும் பாடல்களாகவே ஒளிபரப்பினார் கள். இது நடந்து கொண்டிருக்கும் போது, என் அம்மா செகண்ட் சானலுக்கு மாற்ற, மீண்டும் முதல் சானலுக்கு என் பத்தினி கோபத்துடன் மாற்ற, சற்று நேரம் இந்தச் 'சானல் மாற்று வைபவம்' நடந்தது. உடனே நான் ''சபாஷ் சரியான போட்டி!'' என்று கத்தவும் ஒரே சிரிப்புத்தான். என் அம்மா வும், மனைவியும் அதில் சேர்ந்து கொண் டார்கள் என்பதுதான் விசேஷம்!

— ஆர். பாலாஜி, சென்னை – 24.

''இதை மட்டும் ரசிக்கலாமா?''

○○ என் நண்பன் வீட்டில் டீ.வி. பார்த் துக் கொண்டிருந்தேன். ''ஒலியும் ஒளியும்'' நிகழ்ச்சி. அதில் ஹீரோ தன் காதலியைத் துரத்திப் பிடித்து விளையாடும் காட்சி! அதற்குத் தகுந்தாற்போல் பாடல்! இதைத் தன் பெற்றோருடன் பார்த்துக் கொண் டிருந்த பதினைந்து வயதுச் சிறுவன், தன் தாயாரைப் பார்த்து, ''நானும் அக்காவும் ஓடிப் பிடித்து விளையாடினால் 'இரண்டு பேருக்கும் கடாவாட்டம் வயசு ஆகிறது! இது என்னடா அசிங்கமான விளை யாட்டு'ன்னு திட்டுவியே, இப்பொழுது அந்தப் படத்தில் அவர்கள் இரண்டு பேரும் ஓடித் துரத்திக் கொண்டு விளையாடுவதை மட்டும் ரசிக்கிறியே!'' என்றானே பார்க்க லாம், எல்லோரும் சிரித்து விட்டோம்!

— மந்தைவெளி. சீனிவாசன்,
சென்னை – 28.

பந்தயமும் பஞ்சுவும்!

○○ எதற்கெடுத்தாலும் பந்தயம் கட்டும் என் நண்பன் பஞ்சாபகேசனுக்கு(பஞ்சு)ச் சரியாகப் பாடம் கற்பிக்க நானும் இன் னொரு நண்பர் சேகரும் ஒரு திட்டம் தீட்டி னோம். பஞ்சு சினிமாப் பைத்தியம். வாரா வாரம் வெள்ளி இரவு ஒளியும் ஒலியும் ஒசியில் பார்க்கத் தவறாமல் என் வீட்டுக்கு வந்து விடுவான். அந்த வெள்ளியும் அதே போல் வந்தான். ''வைத்த பாட்டையே திருப்பி வைக்கிறார்கள்'' என்று டீவிகாரர் களைத் திட்டிக் கொண்டே பார்த்து ரசித் தான். மறு நாள் ஆபீஸில் ''நேற்று சம்சார சங்கீதத்தில் சிம்பு தூள் கிளப்பிட்டான், இல்ல பஞ்சு?'' என்றான் சேகர். பஞ்சுவோ, ''நேற்று அந்தப் படம் வரவே யில்லை'' என்று வாதிட, ஆயிரம் ரூபாய் பந்தயம் கட்டினான் சேகர். ஓ.கே. சொன்ன பஞ்சு, ஒவ்வொருவரிடமும் போய்க் கேட்க, எல்லாரும் சம்சார சங்கீதம் பார்த்ததாகச் சொல்லக் குழம்பிய பஞ்சு கடைசியாக என்னிடம் வந்தான். ''சாரி பஞ்சு. நேற்று நாம் பார்த்தது இரண்டு வாரங்களுக்கு முன்பு வி.சி.ஆரில் ரெகார்ட் பண்ணின ஒலியும் ஒளியும். உங்கிட்டச் சொல்ல மறந்துட்டேன்'' என்றேன். பஞ்சு முகத்தில் ஈ ஆடவில்லை. அதன்பின் பந்த யம் என்றாலே காததூரம் ஓடுகிறான்!

— விஜு வர்ஷித், நெய்வேலி – 3.

''பெண்களுக்கு ஏது சந்தேகம்?''

○○ எங்கள் ஊரில் இண்டேன் கியாஸ் கம்பெனியிலிருந்து, சிக்கனமாக கியாஸை எப்படி உபயோகிப்பது என்பது பற்றியும், பாதுகாப்புமுறைகளைப்பற்றியும்வீடியோப் படம் மூலம் விளக்கினார்கள். படம் முடிந் ததும், வாடிக்கையாளர்களுக்குக் கியாஸ் உபயோகிப்பதில் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் கேட்டு விளக்கம் பெறலாம் என்றார் அவர். ஒரு சில ஆண்கள் தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொண்டனர். விளக்கம் கொடுத்த அந்த அதிகாரி பெண் கள் பகுதியைப் பார்த்து, ''உங்களுக்கு எதுவும் சந்தேகம் கிடையாதா?'' என்றார். உடனே ஆண்கள் பகுதியிலிருந்த ஒரு தமாஷ் பேர்வழி, ''அவர்கள் (பெண்கள்) சமையல் செய்தால்தானே சந்தேகம் வரு வதற்கு?'' என்று போட்ட போடு, அனை வரையும் சிரிப்பில் ஆழ்த்தி விட்டது.

— சீர்காழி ஸ்ரீராம், தென்பாதி.

முக்தியடைய விரும்பும் ஸ்திரிகளுக்கு சுலபமான வழி



‘‘நீ உன் புருஷனை வழிபடு, நான் அவனிடமிருந்து அதை ஏற்றுக் கொள்கிறேன்’’ என்று பகவான் கூறியுள்ளார்.

புருஷனை மகிழ்விக்க எங்கள் சுவையான இனிப்புக்களை வாங்கிக் கொடுங்கள்.

திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய், சீர்முறுக்கு, அதிரசம், திரட்டுப்பால் ஆகியவற்றை தயாரித்துக் கொடுக்கிறோம்.




தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்னாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், சென்னை-600020.
அடையாறு,
போன்: 412557

சாரதி


வீண் அவதூறு
வீண் அவதூறு


மிரட்ட தண்ணிப்பாம்பு விட்டெறிஞ்சது தப்பாப்போச்சு!..
வீண் குற்றச் சாட்டுகள்
ராமராவ் பதில்கள்


தேவாரம்
கள்ளச் சாராய ஒழிப்பு
தேவாரம் வர்றாரு நெச்சித்தேன்!



கல்கி

1989 செப்டம்பர் 3
மலர் 48 இதழ் 5
சுக்ல ஆவணி 18



ஒரு திரைப்படம் கற்பிக்கும் பாடம்!

நான்கு அகாதமி பரிசுகளைப் பெற்ற ஹாலிவுட் திரைப்படம் "பிளட்டூன்." சென்னையில் ஐந்தாறு வாரங்கள் ஓடியது. வியட்நாம் போரில் விருப்பமின்றிப் போரிட்ட அமெரிக்க வீரர்கள், எப்படி நாளாவட்டத்தில் அந்நாட்டு மக்களிடம் அனுதாபம் கொள்வதை விட்டு, அசுரத்தனமாக நடந்து கொள்ள ஆரம்பித்தார்கள்; வெறுப்பிலும் விரக்தியிலும் தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக் கொள்ள ஆரம்பித்தார்கள்; கஞ்சாப் பழக்கத்துக்கு அடிமையாகிச் சீரழிந்தார்கள் என்பதையெல்லாம் விளக்கியது பிளட்டூன். ஒரு நாட்டின் வீரர்கள், தாய்நாட்டுக்காக அன்றி, வேறு ஒரு தேசத்தின் உள்நாட்டு யுத்தத்தில் ஆட்சித் தலைவர்களால் சிக்க வைக்கப்படுவதில் உள்ள அபாயங்களைத் துல்லியமாகச் சித்திரித்துக் காட்டியது. பிளட்டூன் திரைப்படம் கற்பிக்கும் பாடத்தை ராஜீவ் காந்தி அன்றே உணர்ந்திருந்தால் இந்தியா — இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டிருக்கவே மாட்டார். நமது படைகளை இலங்கைக்கு அனுப்பச் சம்மதித்திருக்கவே மாட்டார். நடக்கக் கூடாதது நடந்து விட்டது!

'எதற்காகச் சாகிறோம்? யாருக்காக? எந்த லட்சியத்துக்காக?' என்று தெரியாமல் தான் அமெரிக்க வீரர்கள் வியட்நாமில் செத்து மடிந்தார்கள். அதனால் அவர்களைப் பெற்றெடுத்த அமெரிக்க மக்கள் மனக்கசப்பும், துயரும் சொல்லி முடியாத அளவுக்கு அடைந்தார்கள். ஈழத்தில் இருக்கும் நமது படை வீரர்களும் இந்த நிலையில்தான் உள்ளனர் என்பதோடு இதைவிடவும் மோசமான நிலையிலும் இருக்கின்றனர்! எப்படியெனில், அமெரிக்க வீரர்களாவது எதிரியை முழு மூச்சுடன் தாக்க முடிந்தது. இங்கே நமது வீரர்களோ, அமைதிப்படை என்ற பெயரைத் தாங்கிக் கொண்டிருப்பதால், விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைப் பறிக்கத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும், தற்காப்புக்காகத்தான் திருப்பித் தாக்க வேண்டும் என்ற நிலை. எனவே, துரிதமான முன்னேற்றம் காண முடியவில்லை.

இதற்கிடையில் புலிகள் பதுங்குவதும் பாய்வதுமாக இருக்கிறார்கள். சமாதானக் கொடி உயர்த்தியபடியே தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள். பேச்சு வார்த்தை என்று பாவலா காட்டியவாறே தலைவர்களைப் படுகொலை செய்கிறார்கள். அப்பாவி மக்களைப் பாதுகாப்புக் கவசமாக்கிக் கொண்டு இந்திய வீரர்களைத் தாக்குகிறார்கள். தற்காப்புக்காக இவர்கள் திருப்பித் தாக்கும்போது, சாமானிய மக்களையும், இந்திய வீரர்கள் சுட்டுத் தள்ளுவதாகப் பழி சுமக்க நேரிடுகிறது. ஆத்திரம் அடைந்து அமைதிப் படையினர் சாமானிய மக்களைக் கொன்று குவித்ததாகவும், பெண்களை மானபங்கப் படுத்தியதாகவும் சில செய்திகள் அவ்வப்போது வரத்தான் செய்கின்றன. வியட்நாமில் அமெரிக்க ராணுவத்தினரின் அனுபவத்தை வைத்துப் பார்க்கும் போது, இத்தகைய செய்திகளை முழுவதுமே கட்டுக்கதை என்று ஒதுக்கி விடுவதற்கும் இல்லை.

தமிழர் வாழ் பகுதிகளில் தேர்தல் நடந்தது, வரதராஜப் பெருமாளின் ஆட்சி அமைந்தது ஈழத் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தது போன்ற அமைதிப் படையின் சாதனைகள் ஒருபுறமிருந்தாலும், வேதனைகளுள் ஒன்று, ஜே. வி. பி. என்ற சிங்களப் பயங்கரவாதிகளின் இயக்கம் தீவிரமடைந்திருப்பதாகும். அமைதிப்படையை ஆக்கிரமிப்புப் படையாகக் கருதும் இவர்கள், இலங்கை மண்ணிலிருந்து அமைதிப் படை வாபஸாக வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே அராஜகச் செயல்களில் இறங்குகிறார்கள். பெரிய தலைவேதனையாக விளங்கும் இவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்காகவேதான் பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் பயனற்ற ஒரு பேச்சு வார்த்தை நடத்திப் பார்த்தார்; அமைதிப் படையை வாபஸ் பெறுமாறு இந்தியாவைக் கேட்டுக் கொண்டுமிருக்கிறார்.

இந்தக் கோரிக்கையைப் பகுதி அளவில் ஏற்றுள்ள இந்தியா, படிப்படியான வாபஸ் என்பதைச் சீக்கிரமே முழுமையான வாபஸாகச் செயலுருக் கொடுத்து, அதனால் எல்லாத் தரப்பிலும் ஏற்படக் கூடிய நல்லெண்ணத்தைச் செல்வாக்காக உருமாற்றிக் கொள்ள வேண்டும். இலங்கை முழுவதும் அமைதி நிலவ அரசியல் ரீதியில் அரும்பாடு படவேண்டும். அதிகாரப் பங்கீட்டுக்கு இலங்கை அரசிடம் பாரத அரசு வற்புறுத்தும் போதே, ஜனநாயகப் பாதைக்குத் திரும்பப் போராளிகளை வற்புறுத்தும் பணிக்குத் தமிழகத் தலைவர்கள் பலரது உதவியையும் கோரிப் பெற வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

தொழில் வளர்ச்சிக்குத் தோரணம் கட்டுவோம்!

'தமிழ்நாடு தொழில் துறையில் மூன்றாவது இடத்தில் இருந்தது; இப்போது பதின்மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது' என்று, எதிர்க்கட்சியில் இருந்த போது கருணாநிதி, அன்றைய ஆட்சியாளர்களைக் குற்றம் சாட்டினார். சரி, இவர் தேர்தலில் வென்று ஆட்சியைப் பிடித்து முதல்வராக வந்ததோடு, தொழில் துறையையும் கையில் வைத்திருக்கிறாரே, என்ன செய்துவிடப் போகிறார் என்று எல்லாரும் எதிர்பார்த்தார்கள்.

சில மாதங்கள் முன்பு, தமிழகத்தில் உள்ள தொழிலதிபர்களை எல்லாம் அழைத்து, தம்மைச் சந்தித்து மனம் விட்டு உரையாட ஒரு கூட்டம் கூட்டினார். ''ஓகோ, அவ்வளவு தான் போலிருக்கிறது!'' என்று நினைத்தோம். இம்மாதம், இரண்டாவது கூட்டத்தைக் கூட்டியது மட்டுமல்ல; அதில் டாடா, பிர்லா முதலிய பெரும் தொழிலதிபர்களும் கூடப் பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்தார் முதல்வர். இஞ்சினியரிங் தொழில் அதிபர்கள் கூட்டமைப்பின் மாநாட்டுக்காக இங்கே வந்தவர்கள், இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டுவிட்டு, 'இப்படி ஒரு முதலமைச்சரின் சந்திப்பை வேறு எந்த மாநிலத்திலும்கண்டதில்லை!' என்றுவியந்து போய்ப் பாராட்டினார்கள் என்ற செய்தி வந்தது. அடுத்து, தொழில் துவங்க ஊக்குவிக்கும் முழுப்பக்க விளம்பரங்கள் செய்தித்தாள்களில் எல்லாம் வந்ததைப் பார்த்ததும், 'ஜரூராக ஏதோ நடக்கிறது!' என்று தோன்றியது.

உடனே, தொழில்துறைச் செயலர் கே.ஏ. நம்பியார் அவர்களிடம் பேட்டிக்கு நேரம் ஒதுக்க முடியுமா என்று கேட்டோம். ''நீங்கள் நாளையே உங்கள் கேள்விகளுடன் என்னைச் சந்திக்கலாம்!'' என்றார் நம்பியார். இதோ பேட்டி:

கல்கி: முதலமைச்சர் கருணாநிதி, தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சியில் அதீத அக்கறை காண்பித்திருக்கிறாரே, குறிப்பாக அப்படி என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார் முதல்வர்?

நம்பியார்: முதல்வரின் தலையாய நோக்கமே, எப்படியாவது, தமிழகம் தான் இழந்து விட்ட மூன்றாவது இடத்தை மறுபடி பிடிக்க வேண்டும் என்பதுதான். அவர் முக்கியமாகக் கருதும் மற்றொரு அம்சம் — இளம் வயதினரிடையே உள்ள வேலையில்லாப் பிரச்னை. வறுமை ஒழிப்புக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் தீவிரத்தைக் குறைப்பதற்கும், மாநிலத்தைத் தொழில்மயமாக்குவதுதான் பிரதான வழி என்று முதல்வர் நம்புகிறார்.

கல்கி: தொழில் துறையில் பின்தங்கிய தாலுகா என்று எந்த அடிப்படையில் தீர்மானிக்கிறீர்கள்?

நம்பியார்: தொழில் துறையில் பின்தங்கிய இடம் என்று நிர்ணயிக்க இரண்டு அளவுகோல்கள் உண்டு. நடுத்தர மற்றும் பெரிய தொழிலகங்களில் உண்மையாகச் செய்யப்பட்டுள்ள (ஹிஸ்டாரிகல் அல்லது ஒரிஜினல் இன்வெஸ்ட்மெண்ட்) முதலீடு, பதினைந்து கோடி ரூபாய் என்று அடிப்படையாக ஒரு தொகை வைத்திருக்கிறோம். இதற்கு மேல் செய்யப்பட்டிருந்தால், அந்தத் தாலுகாவைப் பின்தங்கிய தாலுகாவாக எடுத்துக் கொள்ளுவதில்லை. இரண்டாவது, 1981 சென்சஸ் அறிக்கையின் அடிப்படையில் (சமீபத்திய திருத்தங்களைச் சேர்த்துக் கொண்டு) ஒரு குறிப்பிட்ட தாலுகாவில் இருக்கும் தொழிற்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை, மாநில சராசரிக்குக் கீழே இருந்தால், அதைப் பின்தங்கிய தாலுகா என்கிறோம். இவற்றை தொழில் தொடங்க உகந்த இடங்கள் எனக் கூறி சலுகைகள் அறிவிக்கிறோம்.

கல்கி: முன்பு 35 இடங்களே இம் மாதிரி தொழில் தொடங்க உகந்த இடம் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இப்போது உங்கள் விளம்பரங்களில் பார்த்தால் 105 என்று இருக்கிறதே! ஒரேயடியாக மூன்று மடங்கா ஆக முடியும்?

நம்பியார்: முந்தைய பதிலில் உள்ள



* கே. ஏ. நம்பியார்: தொழில் துறைச் செயலர்



* முதல்வர் கூட்டிய தொழிலதிபர்கள் கூட்டம்...

அடிப்படைகளைக் கவனியுங்கள். அப்படி இருவிதமாக நிர்ணயித்திருப்பதால் இது மும் மடங்கு அதிகரித்திருப்பது புரியும். ஒன்பது துறைகளில் முதல்வர் அதிகக் கவனம் செலுத்த வேண்டும், கூடுதலான சலுகை காண்பிக்க வேண்டும் என்றார்.

கல்கி: அந்த ஒன்பது துறைகள் என்னென்ன?

நம்பியார்: 1. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள். 2. மருந்துகள். 3. சூரிய ஒளியால் இயங்கும் சாதனங்கள். 4. ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள். 5. மாசுக் கட்டுப்பாட்டு இயந்திரங்கள். 6. அம்பாசமுத்திரம், மதுரை, முசிறி, கும்பகோணம், பண்ருட்டி, செங்கல்பட்டு — தாலுக்காக்களில் சணல் தொழில். 7. ஸ்போர்ட்ஸ் உபகரணங்கள். 8. உணவுப் பண்டங்கள் பதப்படுத்துதல். 9. வீடு கட்டும் தொழிலுக்கான அலுமினிய மற்றும் பி.வி.ஸி. ரக சன்னல்கள், கதவுகள் சன்னல் சட்டங்கள். இது தவிர, எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தோல் துறைகளில் மாநிலத்தில் எங்கே தொழில் தொடங்கினாலும் அதிகப்படியான சலுகைகள்!

கல்கி: இப்படிச் சகட்டு மேனிக்குத் தொழில் தொடங்க ஊக்குவித்து விட்டு, பவர்கட், தண்ணீர்த் தட்டுப்பாடு இவை எல்லாம் தொழில்களைப் பாதிக்குமானால் என்ன செய்வீர்கள்? சென்னையைத் தாண்டி விட்டால் இவை பெரிய பிரச்னையாக இல்லை என்று முதல்வர் சொல்லியிருக்கிறாரே? வெளியூர்களில் 'பவர் கட்'டும், தண்ணீர்ப் பிரச்னையும் இன்னும் மோசமாய் இருக்கிறதே?

நம்பியார்: முதலாவது, சென்னைக்கு வெளியே, தொழில் தொடங்கத் தேவையான தண்ணீர் கிடைக்க மிகப் பெரிய அளவில் தட்டுப்பாடு இல்லை என்றுதான் முதல்வர் சொல்லியிருக்கிறார். இரண்டாவது, நீங்கள் குறிப்பிட்ட மின்சாரத் தட்டுப்பாடு. அவரது அரசு, இந்த விஷயத்தில் தனிப்பட்ட சில முயற்சிகளை மேற்கொண்டு, நிலைமையை மாற்ற முயன்று வருகிறது. அதற்கான கட்டங்களில் முதற்படியாக, சென்ற ஆண்டு மின்துறைக்கு ஒதுக்கிய 350 கோடிக்குப் பதிலாக, இந்த ஆண்டு 460 கோடி — அதாவது சுமார் 30 சதவிகிதம் கூடுதலாக — ஒதுக்கியிருக்கிறார். வட சென்னை மின் நிலையத் திட்டச் சிக்கலை விடுவித்து, வேலைகள் தொடங்க வைத்திருக்கிறார். 93ல், இதிலிருந்து 630 மெகாவாட் மின்சாரம் கிடைக்க வழி இருக்கிறது. முழுதும் பூர்த்தியானால் 2050 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். மேட்டூர் மின் திட்டத்தில், கூடுதலாக 210 மெகாவாட் கிடைக்க வகை செய்திருக்கிறார். தூத்துக்குடி மின் நிலையத் திட்டத்தின் மூலம் 470 மெகாவாட் இரண்டாண்டுகளுக்குள் கிடைக்க ஏற்பாடுகள் ஆகியிருக்கின்றன. அது போலவே நெய்வேலியும்...

கல்கி: தொழிலகங்கள் தொடங்க நிலம் ஒதுக்கும் போது ஊழல்கள், பாரபட்சம் — இவை உ[illegible] வழியில்லையா? இதை எப்படித் தவிர்ப்பீர்கள்.

நம்பியார்: அதற்கு இடம் கொடுக்காதபடி செய்ய முடியும். தொழிலதிபர்கள் இடத்தைத் தேர்ந்தெடுத்து விட்டு, தமக்குத் தேவையான நிலம் இத்தனை ஏக்கர்கள் என்று விண்ணப்பித்து விட்டால், அதை முறைப்படி பரிசீலித்து, அவ்வளவு நிலம் உண்மையில் தேவைப்படும் என்று எங்களுக்குத் திருப்தி ஏற்படும் பட்சத்தில், நில ஆர்ஜிதச் சட்டப்படி மாவட்ட கலெக்டர் மூலமாக அதைக் கையகப்படுத்தி, தொழிலதிபரின் செலவில் அதை அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்கிறோம். இரண்டாவதாக, **SIPCOT, SIDCO** இரண்டுமே அரசு நிலத்தை எடுத்து அபிவிருத்தி செய்து சாலைகள் அமைத்து, சாக்கடை வசதிகள் செய்து கொடுத்து, தண்ணீர் ஏற்பாடு செய்து இவற்றை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒரு தொகையை நிர்ணயம் செய்து, பிறகு விளம்பரம் கொடுக்கிறார்கள். விண்ணப்பங்கள் வந்ததும் அவற்றை ஒரு கமிட்டி ஆராய்ந்து, விண்ணப்பம் முறையானதாகவும், நியாயமானதாகவும் இருந்தால் மட்டுமே அவருக்கு நிலம் ஒதுக்கப்படுகிறது. இதில் ஊழல் நுழைய வழியே இல்லை.

கல்கி: ஏன் இல்லை? நிலம் குறைவாக இருந்து, விண்ணப்பங்கள் அதிகமாக இருந்தால் 'பிரஷர்' பிறகு 'பிரைபரி' எல்லாம் வராதா?

நம்பியார்: வராது! 25 சதவீத நிலத்தை எதிர்கால வளர்ச்சிக்கு என்று கூடுதலாகத்தான் எடுத்து அபிவிருத்தி செய்வோம். அதனால் தேவையான நிலம் கைவசம் இருக்கும். லஞ்ச ஊழல் பிரச்னைக்கு வழியே இல்லை.

கல்கி: நலிவுற்ற தொழில்கள் பற்றி உங்கள் கொள்கை என்ன? ஏதாவது

திட்டங்கள் வைத்திருக்கிறீர்களா?

நம்பியார்: இந்த அரசு, ஏற்கெனவே நிதித் துறையில் பழுத்த அனுபவசாலியான ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. எம்.ஜி. பாலசுப்பிரமணியத்தைத் தலைவராகக் கொண்ட ஒரு நிபுணர் குழுவை அமைத்து, தொழில்கள் நலிவுக்கான காரணத்தை ஆராயச் சொல்லியிருக்கிறது. அவற்றை உயிர்ப்பிக்க அரசு என்ன செய்ய வேண்டும் என்று பரிந்துரைகள் சொல்லக் கேட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி ஜூன் 89ல்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் பரிந்துரைகள் கிடைத்ததும், இந்த விஷயத்திலும் அரசு கவனம் செலுத்தும்.

கல்கி: ஆரம்ப சூரத்தனம் என்கிற மாதிரி, தொழில்மயமாக்க வேண்டும் என்ற சூட்டில், எல்லாரும் தொழிற்சாலைகளைத் தொடங்கி விடுவார்கள். அப்புறம் போகப் போக உற்சாகம் இழந்து தொழில் நலிவுற்றுப் போனால் என்ன செய்வீர்கள்? அதைத் தவிர்க்க ஏதாவது யோசனைகள் செய்தீர்களா?

நம்பியார்: அம் மாதிரி சூழ்நிலையில், அரசு எந்த விதத்தில் செயல்பட வேண்டும் என்று மேற்படி கமிட்டி ஆராயப் போகிறதே! அதன் பரிந்துரைகள், யோசனைகள் என்னவோ அவற்றைச் செயல்படுத்த அரசு நிச்சயம் முயலும். சாதாரணமாக, ஒரு தொழில் நலிவுறக் காரணமாய் இருப்பது நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதுதான். இதற்கு நாங்கள் வங்கிகளிடம் பேசி வருகிறோம். அபாய எச்சரிக்கை முறை போல எங்களை முன்கூட்டியே ஜாக்கிரதையாக இருக்கச் செய்யும் வழிகளைச் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

கல்கி: மத்திய அரசிடமிருந்து எந்த வகை உதவி எதிர்பார்க்கிறீர்கள்?

நம்பியார்: ஆன்ஸிலரி இண்டஸ்ட்ரி எனப்படும் சார்புத் தொழில் வளர வேண்டுமானால், மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனங்கள் உருவாவது அவசியம். இந்த விஷயத்தில் மத்திய அரசு, மாநில அரசுடன் ஒத்துழைக்கலாம். மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டிய தொழிலகங்களுக்கு, தாமதம் இன்றி அனுமதி வழங்க முன் வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். முதல்வரும் இந்த விஷயத்தில் மத்திய அரசுடன் தொடர்பு வைத்துக் கொண்டு வருகிறார். அவ்வப்போது நினைவூட்டியும், விவாதித்தும் வருகிறார்.

கல்கி: தொழில் துறையில் தமிழ்நாடு நிச்சயம் முன்னேற முடியும் என்று நம்பிக்கை ஊட்டும் அளவுக்கு வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?

நம்பியார்: தொழில்களுக்கான நீண்டகாலச் செயல்பாடுகள் திட்டக் கமிட்டி என்ற உயர் மட்டக் குழு ஒன்றை முதல்வர் அமைத்திருக்கிறார். இந்தக் குழு ஒவ்வொரு மாதமும் கூடி விவாதிக்கிறது. இதற்கு முதல்வர்தான் தலைமை வகிக்கிறார். இன்று காலை கூட (ஆகஸ்ட் 14) இந்தக் கூட்டம் நடைபெற்றது. தொழில் துறையில் கவனிக்கப்பட வேண்டிய எல்லா நிகழ் கால எதிர்காலப் பிரச்னைகளையும் இந்தக் குழு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளுகிறது. இப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யக் கூடாது என்று, அப்போதே வழிமுறைகள் தீர்மானிக்கப்படுகின்றன. முடிவுகள் எடுக்கப்பட்டு, உத்தரவுகள் கொடுக்கப்பட்டு விடுகின்றன.

இப்போதைய அரசு வந்த பிறகு, ஒரு புதிய சிந்தனை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. 1971–72ல் தமிழ் நாடு அரசு உருவாக்கிய கூட்டுத் துறை (ஜாயிண்ட் செக்டார்) எப்படி இந்தியா முழுக்க முன்னுதாரணமாகக் கொள்ளப்பட்டதோ, அது போல, இப்போது டிட்கோ ஒரு புதிய அசோசியேட் செக்டார் திட்டம் உருவாக்கியிருக்கிறது. இந்த திட்டத்தின்படி அரசு (டிட்கோ) பதினோரு சதவிகிதமும், தொழில் முனைவரான அசோசியேட் செக்டார் 40 சதவிகிதமும், மீதி 49 சதவிகிதம் நிதி நிறுவனங்களும் முதலீடு செய்யும்.

இப்போது கிரானைட் கற்கள் தொழிலைச் சீரமைத்தது முதல்வர்தான். தென் ஆர்க்காட்டில் கிடைக்கும் குன்னம் வகை, உலகப் பிரசித்தி பெற்றது. விலை உயர்வானது. கிரானைட் தொழிலைச் சீரமைத்ததில் கிரானைட் எடுக்கும் பகுதிகளைச் சுற்றி அதிகபட்ச வேலை வாய்ப்பு உண்டாகியிருக்கிறது. நஷ்டத்தில் இயங்கி வந்த, வருடக்கணக்காக மூடிக் கிடந்த கிருஷ்ணகிரி கிரானைட் ஒர்க்ஸ், விருத்தாசலம் ஸ்டோன்வேர் பைப்ஸ், அம்பத்தூர் வெர்மிக்யுலேட் பிளாண்ட் எல்லாம் இப்போது குறைகள் களையப்பட்டு, லாபத்தில் இயங்க ஆரம்பித்திருக்கின்றன.

தமிழ் நாடு நியூஸ்பிரிண்ட் தொழிற்சாலை இதுவரை 241 கோடி நஷ்டத்தில் நடந்து கொண்டிருந்தது. இப்போது முதல்வரின் தனிப்பட்ட அக்கறையில், குறைகள் என்னென்ன, எங்கே சீராக்க வேண்டும் என்று கண்டுபிடிக்கப்பட்டு லாபம் காண்பிக்கத் தொடங்கி இருக்கிறது. இவை எல்லாமே நம்பிக்கை தரும் நடவடிக்கைகள்.

கல்கி: கடைசியாக ஒரு கேள்வி: முதல்வரை நீங்கள் தேவையான போது சந்திக்க முடிகிறதா? விவாதிக்க முடிகிறதா?

நம்பியார்: இதில் சந்தேகமே வேண்டாம். எப்போது பார்க்க வேண்டுமானாலும், தடை எதுவுமின்றிப் பார்த்துப் பேசி, விவாதிக்க முடிகிறது. சில சமயங்களில் முன்னறிவிப்புக் கூடக் கொடுக்க முடிவதில்லை. அப்படியும் நேரடியாகச் சந்தித்து உரையாட முடிகிறது.

பேட்டி, கட்டுரை: **சாருகேசி**

புகைப்படங்கள்: **யோகா.**

தமிழக அரசு செய்தித் துறை

பயனுள்ள பயிற்சி முறை உங்களுக்காக

நீங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற விருப்பம் உடையவரா?

ஓரளவு கல்வித்தகுதியிருந்தும், உங்களால் மற்றவர்களிடம் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசமுடியவில்லையா?

ஆங்கில மொழியில் போதிய பயிற்சியின்மையினுல் உங்களது முன்னேற்றம் தடைபடுகிறதா?

மற்றவர்கள் பேசுவதை ஓரளவு புரிந்து கொண்டாலும், அவர்களிடம் ஆங்கிலத்தில் பேசினுல் ஏதாவது தவருகப் பேசிவிடுவோமோ என்று தயக்கமாக இருக்கிறதா?

ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் பல வழிகளில் முயன்றும், பல புத்தகங்களைப் படித்தும் நீங்கள் எதிர்பாரக்கும் முன்னேற்றம் ஏற்படவில்லையே என்று வேதனைப் படுகிறீர்களா?

கவலையை விடுங்கள் ....
இதோ ஒரு பயனுள்ள பயிற்சி முறை உங்களுக்காக.

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப்புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் அளிக்கும் ஓர் எளிய பயிற்சி முறையை நீங்கள் மேற்கொண்டால் தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாடவும், இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதவும் உங்களால் முடியும்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். நேர்முகப்பயிற்சி பெற விரும்புவோருக்கு தனிவகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இப்பயிற்சியில் சேர்ந்து பயன் பெற வேண்டும் என்ற உங்களது விருப்பத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதி கீழ்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.


இப்பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்ப மனுவையும், மற்ற விபரங்களையும் உடனே அனுப்பி வைக்கிறேம்.

ஆங்கிலத்தில் பேச வேண்டும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற உங்களது நீண்ட நாளைய விருப்பம் நிறைவேற இன்றே உங்கள் முயற்சி துவங்கட்டும்.

நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

விவேகானந்தா கல்வி நிலையம்
த.பெ.எண். 4986,
9, மேட்லி ரோடு, தி.நகர்,
சென்னை-600 017.

NAGA



மனிதன் மாறிவிட்டான்

எவனோ செய்த பழிக்குப் பலிகடா ஆகும் அந்தப் பட்டதாரிக்குப் பரிகாரம் தேடிக் கொள்ளக் கைக்கெட்டிய தூரத்தில் பலமான ஆதாரம் இருந்தாலும், அந்தத் திசையில் கவனம் செலுத்த விடாமல் கதாசிரியர் காபந்து பண்ணியிருக்கிறார். உதாரணத்துக்கு ஒன்று: வேலைக்குச் சேர்ந்த கொஞ்ச நாளிலேயே முதலாளியின் நல்லெண்ணத்துக்கு ஆளாகி, தங்கை கல்யாணத்துக்காக இருபத்தையாயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டு பெற்றோரிடம் ஒப்படைக்கிறார் மோகன். அதே நேரத்தில் இவரையே ஒற்றியெடுத்த அந்த வில்லனிடம் இருபத்தையாயிரத்தைப் பறிகொடுத்த ஒருவன் கொலை வெறியோடு இந்த அப்பாவியைத் தாக்கி, குறுக்கிட்ட அப்பாவையும் கொலை செய்து விடுவதாய் மிரட்டிக் கத்தியை ஓங்க, குலைநடுங்கிப் போன தாயார் பெட்டியிலிருந்த அந்த இருபத்தையாயிரத்தை ஒப்படைக்க, பெற்றோரும் மற்றோரும் ஏன், முறைப் பெண்ணும் கூட இவன்தான் உண்மையில் மோசக்காரன் என்று பழி சுமத்தி வீட்டை விட்டுத் துரத்த, அவமானத்தால் கூனிக் குறுகிப் போய் வெளியேறுகிறார் அவர். ஏன், உதவி செய்த அந்த நல்லவரை நேருக்கு நேர் அழைத்து வந்து நிறுத்தித் தான் நிரபராதி என்று நிரூபிக்க முடியாதா? செய்யவில்லை!

படம் முழுக்க அப்பாவியாய், யாரோ செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம் பழியேற்றுப் பொருமும் வேதனைப் பாத்திரமாய் வரும் மோகனின் திகைப்பும் வேதனையும் ஐயோ பாவத்தை அள்ளிக் கொண்டு போவதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். அவருடன் படித்த இன்ஸ்பெக்டர் ராஜா அவரை அடையாளம் கண்டு கொண்டு ஆறுதல் சொல்கிறாரே அந்தமட்டில் புண்ணியம். குத்துப்பட்டு இறந்த வில்லன் உத்தமனைத் தான் என்று நம்பிக் கொண்டு ஊரும் உறவும் இறுதி மரியாதை செய்து எரியூட்டும் வரை ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கடைசியில் அப்பா வினு சக்ரவர்த்தியை மட்டும் முடக்கி, 'நான் என்னைப் போல் இன்னொருவன் இருப்பதாய்ச் சொன்ன போதெல்லாம் நம்பலையே அப்பா, இப்பவாவது நம்பறீங்களா?' என்று கேட்டுத் தழுதழுக்கும் போது மனசைத் தொட்டு விட்டுப் போகிறார்.

ஜனகராஜ் ஊருக்கு வெளியே பலவிதமான அவதாரங்களில் கையேந்தி நிதி திரட்டி, கோட்டும் சூட்டுமாய் டாக்ஸியில் வந்து இறங்கும் புதுமை பண்ணி அவருக்கே உரிய கலகலப்பூட்டினாரோபிழைத்தோம். ஆனால் எம்.ஏ. பட்டதாரியான அவர் எங்கும் வேலை கிடைக்காததால் இந்தத் தொழிலில் இறங்கியதாய் ஒரு சமுதாயப் பிரச்னை ஊட்டப் பார்ப்பது ஜனகராஜ் கேரக்டருக்குப் பொருந்தாமல் கசக்கிறது.

பிளேடு வினு சக்ரவர்த்தியின் அறுவை குபீர் சிரிப்புக்கு ஒத்தாசை. அவருடைய அழுத்தம் திருத்தமான வசன வயணத்தில் அசத்தி விடுகிறார். ஒரு தபால்காரர் அவரது அறுவைக்குப் பயந்து, ஊரை விட்டே மாற்றிக் கொண்டு போய் விட்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

'இதெல்லாம் பொம்பிளைங்க சமர்சாரம்' சித்ராவைக் கதாநாயகி ஆக்கியிருக்கிறார்கள். 'மாமா மாமா...' என்று முறைமாப்பிள்ளை மோகனோடு அப்படி இழையோ இழையென்று இழைந்த அவர் கடைசியில் அவரை நம்பத் தயாரில்லை என்கிற மாதிரி பேருக்குக் கூட விசாரிக்காமல் — சொல்லிக் கை கழுவி விட்ட போது 'ப்பூ' ஆகி விடுகிறார்.


கொங்குத் தமிழ் பேசிக் கொண்டாட்டமாகத்தான் தோற்றம் தருகிறார் மணிவண்ணன். தம்மிடம் வேலை பார்க்கும் மோகனிடம் மானாவாரியான மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த அந்த மாமனிதர், தன் கூட்டாளியிடம் பணம் வாங்கிக் கொண்டு கூட்டிக் கொடுக்கப் பெண்ணைக் கூட்டி வராதவன் மோகன்தான் என்பதாக நம்பிக் குடித்து விட்டு அடித்து விரட்டி விட்டார் என்றால் அந்தக் குளறுபடி ஏற்றுக் கொள்கிற மாதிரியா இருக்கிறது?

தேர்ந்த டைரக்டரின் கைவண்ணம்தான். கதையோட்டமும் காட்சி மாற்றங்களும் ரேஸ் குதிரை வேகம்தான். இசையும் காமெராவும் கூடச் சுகம்தான். இவை மட்டும் போதுமா?

பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்லணும் சாமி!

— பி. எஸ். எஸ்.

என் கண்ணே பட்டுடும்!





• தேவனாம்பட்டினம் கடற்கரை...

தேவலோகம் ஆகுமா தேவனாம்பட்டினம்?

கடலூரை ஒட்டியுள்ள தேவனாம் பட்டினம் கடற்கரையைச் சுற்றுலா மையமாக்கத் திட்டம் தீட்டியிருக்கிறது அரசு. திட்டம் சரியானது தானா? அதனால் அங்குள்ள மீனவர் குப்பத்திற்கு இடைஞ்சல் ஏற்படுமா? இதோ நமது நேரடி விசிட்.....

கடலூரிலிருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில், அழகான கடற்கரை இருக்கிறது. நாகரிகத்தின் செயற்கைக் கவர்ச்சி எதுவும் கைநீட்டாத கடற்கரை. கலெக்டர் பங்களா, டி.எஸ்.பி. வீடு எல்லாம் இருக்கும் சாலையின் தொடர்ச்சி, கடற்கரையில்தான் கொண்டு போய் விடுகிறது.

சென்னைக் கடற்கரையைப் போலவே கரையின் சமதளமான மணல் பரப்பு மிகுந்து கடற்கரை அழகாக இருக்கிறது என்றாலும், அதன் சுற்றுப்புறம் மனதை ஈர்க்கும் கவர்ச்சியாக இல்லை. கிட்டத்தட்ட சென்னை எலியட்ஸ் பீச்சின் பழைய மாதிரியான தோற்றம். அருகிலேயே அரசு பெரியார் கல்லூரிக் கட்டடம் தெரிகிறது. கடற்கரையை ஒட்டி நீண்ட மண்டபம், குளிக்க வருகிறவர்கள் உடைகளை வைக்க!

முதல் நாள் பிற்பகலில் மூன்று மணிக்குக் கடலுக்குள் போய் விட்டு அப்போதுதான் திரும்பியிருந்த சில மீனவர்கள், பிரம்மாண்டமான மூன்று மீன்களைக் கரையில் தூக்கிப் போட்டிருந்தார்கள். அருகே, அவர்கள் உபயோகித்த படகுகள் இரண்டும் இருந்தன. (''திமிங்கிலம் சைஸ்ல இருக்குதில்லே? மாட்டிக்கிட்டிருந்தா ஆளையே சாப்பிடும்!'')

கரைக்குத் திரும்பியிருந்த மூன்று மீனவர்கள், தாறுமாறாக இருந்த வலையைச் சீராக்குவதில் முனைந்திருந்தனர். அவர்களில் ஒருவர் புலேந்திரன்.

''இங்கே தேவனாம்பட்டினம் எது?'' என்று அவரை விசாரித்தோம்.

''இதுதான் தேவனாம்பட்டினம். ஆனால் கிராமம்... அதோ பாருங்க, அதுதான். அப்படியே சுத்திக்கிட்டு உள்ளே போகப் பாதை இருக்கு...''

''ஏதோ இந்த இடத்தைச் சுற்றுலா மையம் ஆக்கப் போகிறார்களாமே, உண்மைதானா?''

''சுற்றுலா மையம் வரப் போகுது என்பது உண்மைதான்!''

''அப்படின்னா மீனவர் குப்பம் இடம் மாற்றப்படுமா?''

''அதெல்லாம் இல்லீங்க!'' என்றார் புலேந்திரன். சற்று அருகே, நீண்ட மண்டபத்தையொட்டி, சற்றே மேடாக இருந்த பகுதி

யைச் சுட்டிக் காட்டி, "அங்கதான் ஏதோ கட்டடம் வரப் போகுதுன்னாங்க. மீனவர் குப்பத்துக்கு ஒண்ணும் ஆபத்து இல்லே!" என்றார். மேட்டின் மேல் ஒரு தூண் தெரிந்தது.

கிராமத்துக்கு உள்ளே போகும் சாலைக்கு வழிகாட்ட, கூடவே வந்தார் தையற்காரர் ராஜேந்திரன், சட்டை கூடப் போடாமல்.

சுற்றுலா மையம் வரப் போவது உண்மை தான் என்றும், அரசாங்க ஆட்கள் வந்து ஏதோ இடம் எல்லாம் பார்த்து விட்டுப் போனதாகவும் சொன்னார். "சனி, ஞாயித்துக் கிழமைகள்ல சாயந்திரம் இரண்டாயிரம் பேருக்கு மேல வருவாங்க சார்! ஜேஜேன்னு இருக்கும்!" என்றார்.

"அந்த மேட்டு மேல தூண் மாதிரி இருக்குதே, அது என்ன?"

"அது படகுகளுக்குச் சிக்னல் கொடுக்க, சார்! இங்கே தேவானம்பட்டினம் ஒண்ணு, இன்னொண்ணு சொத்திக்குப்பம் — இந்த ரெண்டு எடத்துலேயும் அந்தத் தூண் இருக்கும்...."

"பீச்சுக்கு யார் வருவாங்க?"

"உள்ளூர் ஆளுங்களும் வருவாங்க. வெளி ஆளுங்களும் நிறைய வருவாங்க. ரஷ்யர்கள் கூட வருவாங்க (ஓ. என். ஜி. சி. இஞ்சினியர்கள்)... முப்பது நாற்பது வண்டிங்க வரும்!" என்றார்.



தையற்காரர் ராஜேந்திரன்



கிராமத் தலைவர் ராமையா

கிராமத் தலைவர் ராமையா சொன்னார்:

"சுற்றுலா மையம் வரப் போவது உண்மைதான். வரட்டுமே, லாபந்தானுங்களே? ஆனா இப்படி இருபத்தஞ்சே லட்சம் ரூபாய் செலவழித்து, பத்தே ஏக்கர் நிலத்தைச் சீராக்கினாப் போதாதுங்க! நாப்பது, ஐம்பது ஏக்கர் எடுத்து, 45, 50 லட்சம் ரூபாய் செலவழிச்சா நல்லா இருக்கும். வசதி இருக்கும். நிறைய டூரிஸ்ட்டுங்க வந்தா நல்லதுதானுங்களே? ஊருக்குப் பெருமை தானே?" என்றார்.

"அப்படின்னா மீனவர் குப்பத்தை இட மாற்றச் சொல்வாங்களே, பரவாயில்லையா?"

"அப்படி எல்லாம் சொல்ல மாட்டாங்க. இப்ப குப்பத்துக்கும் பராமரிப்புப் போதாது. நல்லா அழகாச் சுற்றுலா மையம் வரட்டுமே?"

அதற்குள் ஒருவர் விடுவிடென்று வந்து, நம் காதருகே —

"எதிர்க்க மரம் எல்லாம் போட்டிருக்குதே, அங்கே இருபது முப்பது வீடுங்க இருந்துது. அவங்களைக் காலி செய்யச் சொல்லிட்டாங்க!" என்று கிசுகிசுத்தார். பார்த்தோம்.

வீடுகள் இருந்த சுவடே தெரியவில்லை!

ராமையாவிடம் கேட்ட போது, "சில பேருக்கு வேற எடம் கொடுத்துட்டாங்க. இன்னம் சில பேர் சொந்தக்காரர் வீட்டுல தங்கிக்கிட்டாங்க. அது ஒண்ணும் ஒரு பெரிய பிரச்னை இல்லீங்க..."

"அப்ப மத்த வீடுங்களையும் காலி பண்ணச் சொன்னா பிரச்னைதானே?"

"சுற்றுலா மையம் வந்துதுன்னா ஊருக்குத்தாங்க லாபம்! அதை நாங்க வரவேற்கறோம். முன்னே எழுபத்தஞ்சு லட்ச ரூபாய்க்கு ஒரு ஸ்கீம் போட்டாங்க. ஒரு எம்.பி. அதைத் தன்னோட ஊருக்குக் கொண்டு போயிட்டாரு!"

மீனவர்கள் அப்பாவிகளோ என்னவோ, எடுத்துக் கொண்ட இடத்துக்கு நஷ்ட ஈடு என்று எதுவும் கிடையாது!

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரிய அதிகாரி ஒருவரைச் சென்னையில் விசாரித்த போது, "எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த முயற்சிக்கு புரொவிஷன் கொடுத்திருக்கிறோம். இடத்தை எல்லாம் போய்ப் பார்த்துத் தேர்ந்தெடுத்து விட்டோம்," என்றார். "ரெஸ்ட்டாரண்ட் வசதியுடன் கூடிய, தங்குமிடம் எல்லாம் இருக்கும். பஸ்கள் ரெகுலராகப் போகும்!" என்று தெரிவித்தார்.

— சாருகேசி

புகைப்படங்கள்: யோகா

இரண்டாவது சூரியன்

5

"உனக்குத் தமிழ்க் கவிதையைப் பற்றித் தெரியலை. பானுமதி. ஒரு தமிழ்க் கவிதையில் யாப்பு எத்தனை முக்கியம்னு தெரியலை. இந்த உலகத்துல. ஏன், நம்ம உடம்புல கூட ஒரு தாள கதி இருக்குது. தாளம் இல்லாத எதுவும் இல்லை."

மறுநாள் இரவு அவனே ஆரம்பித்தான். நேற்றுக் கத்தியதற்கு மன்னிப்புக் கேட்கும் குரலில் பேச ஆரம்பித்தான்.

"ஒரு விஷயம் மனசுல பதியற வண்ணமா எப்படி சொல்ல முடியும். எதுகை, மோனை வச்சுச் சொன்னாத்தான் மனசுல பதியும்., தமிழ் நாட்டு ஒப்பாரில கூட எதுகை, மோனை இருக்கு. மருந்து சொல்ற பாட்டுல கூட சீர் இருக்கு. கவிதைல வேணாம்னா எப்படி?

"யாப்பிலக்கணம் படிக்காத சோம்பேறிங்க, தமிழ் சரியா வராதவனுங்க, புதுக் கவிதைன்னு கூத்தடிக்கிறானுங்க. அவனுங்ககிட்ட நல்ல விஷயம் இருக்குது. என்ன புண்ணியம்? சொல்லத் தெரியலை. வெண்பா மாதிரி எழுதணும்னு கூடச் சொல்லலை... ஓர் ஓசை நயம் வேணாம்? உரைநடையா எழுதிட்டுக் கவிதைன்றானுங்க..."

பானுமதி பேசாதிருந்தாள். என்ன பேசுவது என்று தெரியவில்லை.

"என்ன கோபமா... நீ என்னைக் கழுதைன்னு திட்டு. பொறுத்துக்குவேன். கவிதைல மட்டும் என் போக்குக்கு விட்டுரு."

எங்கே இந்த ஆளைப் பிடித்து வைத்துக் கொண்டோம் என்று யோசித்தாள். ஒரு கவிதையைப் பாராட்டிப் பேசியதற்கே கன்னென்கிறவனை மறுத்துப் பேசினால் என்ன ஆவான்?

"என்ன கோபமா?"

"ஒண்ணுமில்லீங்க."

"உனக்குக் கவிதைல இன்ட்ரஸ்ட் வந்துச்சுன்னா சொல்லு. கத்துத் தரேன். என்ன, கத்துக்கிறியா?"

"கத்துக்கறேங்க."

"உணர்ச்சியை மொழி வழியே ஒழுங்கு படுத்தறதுதான் கவிதை. உணர்ச்சியை ஒழுங்குபடுத்தாத கவிதை ஒண்ணு இருக்கு. எது தெரியுமா?"

"புதுக் கவிதையா..." சொல்ல வாய் எடுத்தவள் சட்டென்று அழுத்திக் கொண்டாள்.

"இது..." மேலே பாய்ந்தான். "இங்க தான் ஒழுங்குமுறையே இல்லை. ஆம்பளை—பொம்பளைக்கு மரியாதையே இல்லை. பொம்பளைக்கும் ஆம்பளையாண்ட மரியாதை தேவையில்லை. அவன் காலு இவள் மேல படும். இவ காலு அவன் மேல படும். மத்த நேரத்துல என் மேல காலு பட்டா கண்ணுல ஒத்திக்குவே... இப்போ... காலு மேல காலு பட்டாத்தான் ஒரு இதுவே..." சிரித்தான்.

பானுமதி ஒரு மன இடைவெளியை உணர்ந்தாள். அதே நேரம் அவன் இறுக்கத்தில் கிடந்தாள். வலித்தது. கண்களை இறுக மூடிக் கொண்டாள். மூடின கண்ணுக்குள் நீர் திரள ஆரம்பித்து, கடைக்கோடி கண் வழியே வழிந்தது.

"என்ன அழுவுறியா?"

"இல்லீங்க."

"ஆனந்தக் கண்ணீரா.. எங்கியோ படிச்சிருக்கேன். கடைக்கோடி கண் வழி கண்ணீர் வந்தால் அது ஆனந்தத்தின் அறிகுறி. அப்படித்தானா?"

மல்லாந்து கிடக்கிற போது கண்ணீர் மேடேறி எப்படி கன்னத்தில் வழியும்?

"யப்பா.. பொம்பளைன்றது போதை தான். காமம் எண்ணுகிறபோதே போதை தரும்னான் வள்ளுவன். கரெக்ட்டுன்னு தோணுது. ராத்திரி உன் கூட இருக்கறதை விட பகல்ல எங்கனா உட்கார்ந்திருக்கிற போது ராத்திரிய நினைச்சுக்கிட்டா... அடேங்கப்பா மெய்மறந்து போவுது. உனக்கும் அப்படித்தானா?"

தோலும் தசையும்தானா பெண். உள்ளே எலும்புக் கூட்டுக்குள்ளே உள்ள ஹிருதயம் தெரியாதா உனக்கு.

"என்ன நானே பேசிக்கிட்டிருக்கேன். ஒன்றுமே சொல்ல மாட்டேன்றியே."

"உங்க மாதிரி இத்தினி விஷயம் எனக்குத் தெரியாதுங்க."

"அத்தச் சொல்லுடி மகராசின்னானாம். இப்பப் புரிஞ்சுதா உன் எம்.எஸ்.ஸி.

பாலகுமாரன்

கெமிஸ்ட்ரி ஒண்ணும் இல்லைன்னு.''

''ஆமாங்க.''

''விஞ்ஞானம் விஷயம்தான். இல்லேங்கல. ஆனா அந்த விஞ்ஞானம் வளர மொழி அவசியம். மொழி இல்லைன்னா எதுவுமே இல்லை. மனுஷாளுக்கு மனுஷாள் தொடர்பில்லை. உறவு இல்லை. அப்புறம் ஆடு மாடுதான்.''

''ஏங்க...?''

''சொல்லு.''

''கண்கள் கலந்தன. கருத்தொருமித்தனர்... அப்படின்னு சொல்றாங்களே.. அது என்ன?''

''ஆய் மடக்கிறியா. மாடத்துல சீதை நிக்கிறா. தெருவுல இராமன் போறான். சட்டுனு நிமிர்ந்து பார்த்தாப் பொம்பளை... அடன்னு அங்க பார்க்கறாரு. அடன்னு அந்த அம்மாவும் பார்க்குது. கண்கள் கலந்தன. என்னடா ஒரு மாதிரியாப் பார்க்கறானேன்னு அந்த அம்மா நினைக்குது. என்னப்பா இது குட்டி ஒரு சைஸாப் பார்க்குதுன்னு அவரு நினைச்சாரு. அந்தக் கருத்துல ஒருமிச்சுட்டாங்களே தவிர. இரண்டு பேர் பார்வையும் ஒரே மாதிரியா இருந்ததே தவிர. கருத்தொருமித்தனர்னா எல்லாம் புரிஞ்சு போச்சுன்னு அர்த்தமா. எல்லாம் புரிஞ்சு போன பொம்பளைய அந்த ஆள் ஏன் நெருப்புல நில்லுடின்னார். காட்டுக்குப் போயிடுன்னார். இடைவெளி இருந்திருக்குது. அவனை இவளுக்குப் புரியலை. இவளை அவனுக்குப் புரியலை. நாலு பேருக்கு முன்னாடி சண்டை போட வியேகண்டி ஒரு பனிப் போர் அங்கியும் இருந்திருக்குது.''

''அப்போ ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்க முடியாதுங்களா?''

''புரிஞ்சுக்க விடுவமா... உன்னைப் பத்தி எனக்கு முழுக்கப் புரிஞ்சுட்டா ஈடுபாடு குறைஞ்சுடும். என்னைப் பத்தி உனக்குத் தெரிஞ்சுட்டா மதிப்புக் குறைஞ்சுடும். தலைவரோட அடுத்த மூவ் என்னன்னு தெரியாதப்பதான் கட்சி கட்டுப்படும். தெரிஞ்சுட்டா ஆபத்து. தெரிஞ்சவன் தலைவனாயிடுவான். மூடின கைதான் பலம். உள்ளே கத்தி வச்சிருப்பானா, காசு வச்சிருப்பானா... தெரியாது.''

''புருஷன் பொண்டாட்டிக்குள்ள கூடவா?''

''பெத்த தாய்க்கும் புள்ளைக்கும் நடுவுல கூடத்தான்... தலைவரு கூட்டத்துக்கு எங்கம்மாவ ஒரு தடவை கூட்டிட்டுப் போயிருந்தேன். அன்னிக்குக் கவியரங்கம். ஆனா அம்மா கிட்ட எதுவும் சொல்லலை.



முத வரிசைல உட்கார வச்சுட்டுத் தலைவர் காதுகிட்டச் சொன்னேன். 'தலைவரே எங்கம்மா முத முத என் கூட்டத்துக்கு வந்திருக்காங்க. இரண்டு வார்த்தைச் சொல்லுங்களேன்.' நான் கவிதை படிச்சதும் தலைவர் கவிதைலயே பாராட்டினார்.

'கதிரை மறைத்த கற்பின் கனலில்
காவியம் கேட்டதுண்டு — ஒரு
கதிரைக் கருவில் தாங்கிய தாயை
சபையில் காணுகிறேன் — இச்சபையில்
காணுகிறேன்.
தாய் முன்னிருக்கத் தனயன் படித்தான்
தங்கத் தமிழ் கவிதை; அவனை
மடியில் போட்டுப் பாடிய தாயின்
எச்சில் இந்த விதை — ஈர எச்சில் இவன்
கவிதை'ன்னாரு.

''கூட்டம் மொத்தமும் எழுந்து எங்க அம்மாவைப் பார்த்துக் கை தட்டிச்சு. அரண்டு போயிட்டாங்க. வெளிய வரத்துக்குள்ளற போறும் போறும்னு ஆயிடுச்சு அம்மாவுக்கு. அன்னிக்கு என்னைத் தூக்கித் தலைல வச்சுக்கிட்டவங்கதான். இன்னி வரைக்கும் கீழ இறக்கலை. இதுல என்ன தமாஷ்னா எங்கம்மாவுக்கு ஒரு பாட்டுக் கூடத் தெரியாது. பேய் மாதிரி கத்துமே ஒழிய...''

தந்திரம். தந்திரம். ஆளைக் கவிழ்த்து, மிதித்து மிதித்துத் தரையோடு தரையாக்கி நோவு தெரியும் முன்னரே சாகடித்து விடுகிற தந்திரம். எல்லா இடங்களிலும் எல்லார் மீதும் பிரயோகப்படுத்துகிற தந்திரம்.

பாவம் அந்தக் கிழவி. 'வணக்கம்' என்று கை குவித்தால் கூட பதிலுக்குக் கை குவிக்கத் தெரியாத கிராமத்துக் கிழவி. ஆயிரம் பேர் எழுந்து நின்று கை தட்டினால் செத்துப் போயிருப்பாள். எதற்கு, என்ன, ஏன் என்று எதுவும் புரிந்திருக்காது. பாராட்டறாங்கன்னுதான் புரிந்திருக்கும். குருட்டுப் பிச்சைக்காரன் கிண்ணத்தில் ஓசையெழ ஒரு காசைப் போட்டு அதிலிருந்து ஒரு ரூபாய்த் தாளை உருவிக் கொள்ளும் தந்திரம் இது. திருட்டுத்தனம். இதற்கு ஒரு சந்தோஷம். கர்வம். அப்பா... மனிதர்கள் ஏன் இப்படி குரூரமாய்ப் போனார்கள். இதற்கு எப்படி இலக்கியம் என்று பேர் வைத்தார்கள். இலக்கியம் பொய்யா. கவிதை, கதை, கட்டுரை எல்லாம் பொய்யில் பிறந்தவையா... நடனம், நாடகம் கூடப் பெரிதுபடுத்திச் சொல்கிறவைதானே... உள்ளதை உள்ளபடி காட்டாது, உறுமிப் பயமுறுத்துகிறவை தானே. உவமானம் என்கிற பெயரில் உருவகம் என்கிற விஷமத்தில் நேரிடையாய்ச் சொல்லாது சுற்றி வளைத்துக் குழப்புகிறவைதானே.

இலக்கியம் பொய்யா. பொய்யின் விளைவா.. ஆமெனில் இவன் யார்.. இங்கு இதுவரை எழுதியவர் எழுதிக் கொண்டிருப்பவர் யார்? எல்லாரும் பொய்யர்கள். வலிக்கிறது என்பதை 'ஐயகோ வலிக்கிறது' என்று கத்துகிறவர்கள் தந்திரம் மிக்கவர்கள். தந்திரம் பழகுகிறவர்கள். எதற்கு இந்தத் தந்திரம்? எவர் பொருட்டு இந்தத் தந்திரம். ஏன் இந்த வித்தை?

தனக்குத் தெரிந்ததைச் சொல்வதை விட, நான் சொல்கிறோம் என்கிற மமதை. நான் சொல்கிற செய்தியைப் பின்னுக்குத் தள்ளி விட்டுத் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்கிற ஆர்வம். 'அடடா... என்னமாக் கவிதை எழுதறான் பார்' என்று பாராட்டுக் கேட்கும் ஆர்வம். இதற்கு மொழி பழகுவானேன்? கையூன்றிக் கரணம் அடிக்கலாமே... கம்பியில் நடக்கலாமே... 'எல்லோரும் தரையில் நடக்கிறீர்கள். நான் கம்பியில் நடக்கிறேன் பார். எல்லோரும் காலால் நடக்கிறீர்கள். நான் கையால் நடக்கிறேன் பார்...' என்று சொல்லலாமே!

கரெக்ட். செப்பிடு வித்தைக்காரர்கள். மோடி மஸ்தான்கள். கவிதை எழுதுபவனும் இதை எழுதுபவர்களும் கண்கட்டு வித்தைக்காரர்கள். முட்டாள் மட்டுமே இவர்களுக்கு மயங்குவான். கை தட்டுவான்.

''வா இந்தப் பக்கம்.''

''வந்தேன்.'' பத்து வயதில் பார்த்த மோடி வேலை ஞாபகம் வந்தது.

''இந்தக் கூட்டத்தில் இருக்கிற ஜனங்களின் நட்சத்திரப் பலாபலன் கணக்கிட்டுக் கேட்டால்...''

''சொல்வேன்.''

''அவங்க கையில கட்டியிருக்கிற வாட்சு இடுப்புல இருக்கற வேட்டிக்கரை, விரல்ல போட்டிருக்கிற மோதிரம், சட்டைல குத்தியிருக்கிற பேனா, பென்சிலு கலர் கேட்டா.''

''சொல்வேன்.''

''வா. இந்தப் பக்கம்.''

''வந்தேன்.''



"மூடியிருக்கிற ஆள் மேல மை வச்சு ஒரு பனை உயரம் தூக்கிக் காட்டறேன். ஐயாமாரே.. அம்மாமாரே... நான் ஒண்ணும் கேட்கலை. ஒருவேளை நாஷ்டா.. ஒரு ராவுக்குச் சோறு. ஆளுக்குப் பத்து பைசாத் தூக்கிப் போட்டுச் சாப்பிடறான்னா, சலாம் போட்டு வாங்கிக்குவேன். வா, இந்தப் பக்கம்."

"வந்தேன்."

உடுக்கு அடித்து காசு வாங்கிக் கொள்வான். உள்ளங்கை விரித்து மை டப்பாவில் வசியம் செய்வான். ஒரு கொசுவலையின் நீள அகலத்தில் மூடியிருந்த துணி மெல்ல சிறிது மேலெழும். இன்னும் கை உயர்த்த இன்னும் மேலெழும். கூட்டம் சிலிர்த்துப் போய்க் கை தட்டும். துணி விரிப்பைத் தரை தொட்டிருக்கிற உயரம்தான் தூக்குவான். ஒரு பனை உயரம் நிச்சயம் அந்த மூடின துணி உயராது.

"எப்படிடா தூக்கறே?" அப்பா ஒரு முறை கூப்பிட்டுக் கேட்டார்.

"ஒரு நூறு ரூபா கொடு. மந்திரிச்சுத் தரேன் தாயத்து. இந்தக் கை மேல கட்டு. அந்தக் கை மேல கட்டு. கழுத்துல கட்டு. அரணாக் கவுத்துல கட்டு. ஜேபில வை. கால்ல கட்டாதே. கால்ல கட்டாதே. ரத்தம் கக்கிச் செத்துப்பூடுவே."

"உள்ளேர்ந்து அந்தப் பிரம்ப எடுடீ... யாரைப் பார்த்துடா ரத்தம் கக்குவேன்றே?" அப்பா வேஷ்டி மடித்து அவன் சட்டையைப் பிடித்தார். மோடி காலில் விழுந்தான்.

மெல்லிய கம்பி மடிப்புகள். குடை போல் பிரியக்கூடிய கம்பி மடிப்புகள். அந்தப் பையன் முன்னரே எடுத்துச் சட்டைக்குள் செருகிக் கொண்டு போய்ப் படுத்துக் கொள்வான். துணி மூடியதும் மெல்ல உருவிப் பிரித்து வைத்துக் கொள்வான். குரல் கொடுக்கக் குடைக் கம்பியை மேலே தூக்குவான். பையன் அகலத்துக்குத் துணி எழும்பும். ஒருபோதும் துணி தரை தாண்டாது. தாண்டினால் பையன் தரையில் படுத்திருப்பது தெரிந்து விடும். அவன் விவரம் சொல்ல விட அதிசயப்பட்டது.

அப்பா வாய் விட்டுச் சிரித்தார்.

"ஏண்டா ஊரை ஏமாத்தறீங்க?" என்று அப்பா ஒரு ரூபாய் கொடுத்தார்.

"மந்திரம் கால். மதி முக்கால்" என்று சொன்னார். ஆனால் இலக்கியம் வெறும் புத்தி விளையாட்டு.கவிதை என்பது கம்புச் சண்டை. கதை என்பது புலி வேஷம். நாடகம் என்பது உறியடி உற்சவம். நாட்டியமென்பது நீர் விளையாட்டு. ஹோலிப் பண்டிகை.

ஆக மொத்தம் திருவிழா ஆட்டம்தான். அதே விதமான பொழுதுபோக்குக் கூட்டம்தான். டபார் டபார் என்று சிலம்பு மோதுமே தவிர, சிறிது கூட காயப்படாது. தாவித் தாவி புலி ஓடுமே தவிர யாருக்கும் பயம் கிடையாது. குழந்தைகள் மட்டுமே அலறும். துணியில் கட்டின தேங்காய்க்கு எகிறி எகிறி இருபது பேர் கம்பு வீச, இரண்டு மணி நேரம் பொழுது போகும். பீச்சுக் குழலில் நீர் தெறிக்க, நெளிந்து ஓடுகிறதெல்லாம் நாட்டியம். நீர் சொட்டச் சொட்ட ஆள் பார்க்கிற பரவசம்; இளிப்பு.



"ராப்பகலா கண் முழிச்சு ஒரு வழியா கல்லூரிப் படிப்பை முதல் வகுப்பிலே பாஸ் பண்ணிட்டே...; அப்புறம் என்ன செய்யப் போறே...?"

"நல்ல அரசாங்க உத்தியோகத்திலே சேர்ந்து, 'நிம்மதியாத் தூங்கணும்...!'"

— மயிலாடுதுறை ஸ்வாமி.

இவை நிஜமோ? நிஜம் எது? இலக்கியம் நிஜம் சொல்லுமோ.. கலைகள் காட்டுமோ. நிஜம் விஞ்ஞானம் காட்டும். விஞ்ஞானம் சொல்லித் தரும்.

இதனால் இது விளைவது. இது அது வாயிற்று என்று அறுதியிட்டு உறுதி சொல்லும். எப்படி என்று புலப்படுத்தும். தெரியாததைத் தெரியாது என்று கை விரிக்கும். தெரிந்ததுக்குப் படம் போட்டுக் காட்டும். விஞ்ஞானம் பொய் சொல்லாது. கெமிஸ்ட்ரி கூடவோ குறையவோ என்று கதை அடிக்காது. மில்லி கிராம் மில்லி கிராமாய் அளவு காட்டும். குளிரில் உள்ள உஷ்ணத்தைத் தேடிக் கொண்டு வரும். நீரில் உள்ள நெருப்பை வெளியே காட்டும்.

"இப்ப தெரிஞ்சுக்கிட்டியா உன்னோட எம்.எஸ்.ஸி. கெமிஸ்ட்ரி ஒண்ணுமில்லைன்னு...."


பானுமதிக்குச் சிரிப்பு வந்தது.

"என்ன சிரிக்கறே... உனக்கும் ஜோர் ஏறிடுச்சா.. ஆமா பசலை படர்ந்ததுன்னா எப்படி இருக்கும்? உனக்கு அப்படிப் படர்ந்து நான் பார்த்ததில்லையே..."

அருகே படுத்திருந்த பானுமதி மறுபடி கண்களை மூடிக் கொண்டாள். "எனக்குத் தெரியாது" என்றாள். தெரிந்ததை எவருக்குச் சொல்ல முடியும். புரிந்து கொள்ள முயல்பவருக்குத்தானே.. அது எப்படி என்று மறுக்கிறவரிடம் என்ன பேச.. பேசி என்ன பயன்? ஆனால் இவளிடம் பேசாது போனதும் தவறு. மூத்தவன் பிறந்த பிறகுதான் இது தெரிந்தது.

(தொடரும்).







சுமதிக்குக் கல்யாணம்

தெரு முனையில் சுமதி மாருதியைப் பார்த்து விட்டாள். கண்ணை அள்ளிக் கொள்ளும் ஆலிவ் பச்சையில் வெங்கடாஜலபதி ஸ்டிக்கர் ஒட்டின பெரியப்பாவின் மாருதி. பெரியப்பா வந்திருக்கிறார். மூன்றாவது முறையாக வந்திருக்கிறார். முதல் முறை வந்த பொழுது சுமதி சின்னப்பெண். வைத்தியம் பார்க்கக் காசில்லாமல் அம்மா பவானியின் உடம்பை மடியில் போட்டுக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது பெரியம்மா வரவில்லை. இரண்டாவது முறை பெரியம்மாவுடன் பெரியப்பா வந்த பொழுது கஸ்தூரியை மணையில் வைத்துப் பாடிக் கொண்டிருந்தார்கள். பெரியம்மா தாம்பாளம் எடுத்து கஸ்தூரிக்குப் பட்டுப் பாவாடை, கால்பவுனில் ஒரு மூக்குத்தி, கூடவே 501 ரூபாய் பணம் எடுத்து வைத்தாள்.

“மூக்குத்தி எப்பவும் கண்ணில் பட்டிண்டிருக்கும் கஸ்தூரி. நீ பெரியவள் ஆனதுக்காக இதைப் போட்டு விடலை. பத்தாவது பரீட்சையில் ஸ்கூல் ஃபர்ஸ்ட் வந்தியாமே அதுக்கு. மூக்குத்தி கண்ணில் படறச்சே எல்லாம் நான் என் அப்பனைப் போல இல்லை, வேற ஜாதி; வேற வித்துங்கற நினைப்பு உனக்குத் தோணிண்டே இருக்கணும்னு போட்டு விடறேன். உங்கப்பனால அழிஞ்ச குடும்பம்டி இது. அதை நிமிர்த்தணுங்கற வெறியை எப்பவும் உனக்கு இது ஞாபகப் படுத்தணும்.”

பெரியம்மா போட்டு விட்ட மூன்றாவது மாசம் அம்மா மூக்குத்தியைக் கழற்றி அப்பாவிடம் கொடுத்து விட்டாள். ரெண்டாவது தெருவில் கடன்காரனை நிறுத்திட்டு வந்திருக்கிறேன் என்று சொன்ன, அல்லது வற்புறுத்திய அப்பாவை மீற முடியாமல் அம்மா கஸ்தூரியின் மூக்குத்தியைக் கழற்றிக் கொடுத்தாள்.

இது மாதிரி அம்மா கழற்றிக் கொடுத்த நகைகளைக் கணக்குப் பார்க்கவில்லை. குறைந்தது ஐம்பது பவுனைத் தாண்டும். அப்பாவிடம் எல்லாக்கெட்ட பழக்கங்களும் இருக்கின்றன. குடிப்பார். இதோ வந்துடறேன் என்று வெளியில் கிளம்பி

சத்தியப்ரியன்

ராத்திரி எட்டுமணி தாண்டினால் அடித்துச் சொல்லலாம் அப்பா வரும்பொழுது மேல் துண்டால் வாய் பொத்தியபடிதான் வீட்டுக்குத் திரும்புவார். சில நாட்கள் வாசுவும், அம்மாவும் ஆட்டோவில் அப்பாவைத் தெருவிலிருந்து பொறுக்கிக் கொண்டு வர வேண்டியிருக்கும். சீட்டாட்டமும், ரேஸூம் உண்டு. ஒவ்வொரு முறையும் ரேஸிலும், சீட்டிலும் பணம் தோற்கும் பொழுது ''அடுத்த தடவை எல்லாத்தையும் மீட்டுடறேன்'' என்பார். இது மாதிரி நிறைய அடுத்த தடவைகளைச் சுமதி பார்த்து விட்டாள்.

அப்பாவுக்கு நிலையான உத்தியோகம் இல்லை. ஊர் சுற்றிலும் கடன் மட்டும் ஏராளம் உண்டு. பாட்டிக்கு நிலம், நீச்சு, நகை, லால்குடியில் சொந்த வீடு எல்லாமே அப்பாவின் பொறுப்பின்மையில் அழிந்து போனது. கேள்வி கேட்ட ஒரே அண்ணனும் பகையாய் மாற, பெரியப்பா தனியானார். சுயமாய்ப் படித்து, முன்னேறி, தில்லை நகரில் சொந்த வீடும், மாருதியுமாய் பெரியப்பா வேறு உலகத்திற்குப் போய் விட்டார்.

சுமதி வேலைக்குப் போக ஆரம்பித்ததிலிருந்துதான் வீடு இன்னும் சீரழியாமல் இருக்கிறது. சுமதி அம்மாவிடம் கொடுக்கும் சம்பளத்திற்குக் கணக்குக் கேட்கமாட்டாள். ஒரு சேமிப்புக் கிடையாது. பத்து வருஷ கவர்மெண்ட் உத்தியோகத்தில் போனஸ் உண்டு; இரண்டு தடவை அரியர்ஸ் கொடுத்தார்கள். பளிச் சென்று கட்டிக் கொள்ளச் சுமதியிடம் நல்லதாக ரெண்டு புடைவை கிடையாது. சொல்லிச் சொல்லி அம்மாவுக்கு இரண்டு ஜோடி தங்கவளையல் பண்ணிப் போட முடியவில்லை.

''நகை வேண்டாம் சுமதி. குடிக்கும், ரேஸூக்கும் உங்கப்பாவுக்குக் கழற்றிக் கொடுத்துக் கொடுத்தே நகைன்னா எனக்குப் பயமா இருக்கு'' என்று அம்மா அடிபட்ட குரலில் சொன்னாள்.

பண்டிகை கிடையாது; விசேஷம் கிடையாது; இத்தனைக்கும் மேலாகச் சுமதிக்குக் கல்யாணம் கிடையாது. கஸ்தூரிக்கும், சுமதிக்கும் நான்கு வருஷ இடைவெளி. பின்னால் சித்ராவும், வாசுதேவனும். வாசு இன்னும் ப்ளஸ்டூ கூட முடிக்கவில்லை.

''இது என்னடி சுமதி வெள்ளையா?''

''தலை முடி.''

''உன்னோடதா?''

''ஆமாம்.''

''அதுக்குள்ளையா வெள்ளையாயிடுத்து?''

''இருபத்தெட்டு வயசுக்கு ஒண்ணு தானேன்னு சமாதானப் பட்டுக்கோம்மா.''

அம்மா கலங்கினாள்.

''கன்னிக்கடன் பெரிசு சுமதி.''


''அப்பா ஊர் பூரா வெச்சிருக்கும் கடனை விடவா?''

''உனக்குன்னு ஒரு கல்யாணம் ஆற வரைக்கும் எனக்குத் தூக்கம் கிடையாது.''

''அப்பொ உனக்கு ஆயுசு பூராத் தூக்கம் கிடையாதும்மா.''

''என்ன பேச்சுடி இது?''

''நடுத்தர வர்க்கத்து ஆண்களுக்குக் கல்யாணம் சுலபம்மா. வேலை பாக்கற பொண்டாட்டின்னா இன்னும் வரவும் கூட. கீழ் மட்டக் குடும்பத்துல மூத்த பொண்ணாப் பொறந்துட்டாக்கல்யாணம்கிடையாதும்மா. கல்யாணத்துக்கப்புறம் மாசா மாசம் அம்மா வீட்டுக்கு நான் சம்பாதிக்கற பணத்தைக் கொடுக்கறேன்னு சொன்னா எந்த புருஷன்மா சரின்னு தலையாட்டுவான்? பெண் என்னிக்குமே ஒரு படி கீழதாம்மா. ஆண்தான் தலை. தலைக்கு ஏத்த மாதிரி தான் உடல் அமையும். நான் ஒவ்வொருத்தன் காலிலியும் விழுந்துட்டு, மாசம் எங்க வீட்டுக்கு எழுநூறு ரூபாய் பணம் அனுப்புவேன்; சம்மதமானா என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு வியாபாரம் பேச முடியாது. என்னை இப்படியே விட்டுடு. கொஞ்ச நாளைக்கு உடம்பு படுத்தும். அப்புறம் அடங்கிடும்.''



அடங்கவில்லை. மாறாக உடம்பு தலை விரித்தாடியது. மோட்டார்பைக்கில் இன் பண்ணிக் கொண்டு விர்ர்ரென்று போகும் ஆண்களை "கடங்காரன்! அடிபட்டுத்தான் சாகப் போறான்" என்று திட்டினாள். வழியில் நெருக்கமான ஜோடிகளைப் பார்த்தால், "வெட்கங்கெட்டதுகள்! ரூம்ல அவுத்துப் போட்டுட்டு நில்லுங்கோளேன், யாரு கேக்கப் போறா?" என்று பழித்தாள்.

கூட வேலை பார்க்கும் மணிமேகலை கூப்பிட்டுச் சொன்னாள்.

"நீ கல்யாணம் பண்ணிக்கோ சுமதி."

"ஏன் மேகலா?"

"வயசையும், உடம்பையும் தனித்தனியாப் பிரிக்கிறது கஷ்டம்."

"நான் கல்யாணம் பண்ணிண்டா என் குடும்பம் தெருவுல நிக்கும். அப்பா எல்லாரையும் கிண்டியில் எடைக்குப் போட்டுட்டு வந்துடுவார்."

"அப்பாகிட்டச் சொல்லு."

"என்னன்னு? எனக்குத் தாங்கலை. ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிவைன்னா கேட்க? கேவலமில்லியா அது?"

"பொறுப்பா ஒரு உத்தியோகம் தேடிக்கச் சொல்லு."

"இருபத்தஞ்சு வருஷத்துக்கப்புறமா? அம்மா சொல்லியே கேக்காத ஜன்மம் அவர் மேகலா."

இருந்தாலும் அப்பாவிடம் போய் நின்றாள். ரேஸ் இல்லாத நாளில், குடிக்காத நாளில் என்று நாள் பார்த்து, நாள் பார்த்து அப்பா முன்னால் போய் நின்றாள்.

"என்னம்மா சுமதி வேணும்?"

"உனக்கு எப்பப்பா பொறுப்பு வரும்?"

"சுமதி......" அம்மா அழுத்திச் சொன்னாள்.

"தப்புத்தாம்மா. சத்தம் போட்டு மூஞ்சிக்கு நேர இதுவரை நான் கேட்டதில்லை. அது தப்பு, அநாகரீகம்னு தெரியும். எனக்கு வயசு இருபத்தொம்பது ஆறதுப்பா. எப்போ கல்யாணம் பண்ணி வைக்கப் போறே?"

கேட்ட இரண்டாவது நாள் அப்பா வீட்டை விட்டுப் போய்விட்டார். "எங்க போனாரோ தெரியலியே" என்று புலம்பின அம்மாவை "கிண்டி குதிரைல நம்பிக்கை இல்லாம ஊட்டிக்குப் போயிருப்பார்" என்றுசமாதானப் படுத்தினாள். பத்து நாட்களில் அப்பா திரும்பி வந்தார். கூடவே அறுநூறு ரூபாய்க்கு ஒரு கடன் லிஸ்ட் கொடுத்தார். அதன் பிறகு சுமதி கல்யாணத்தைப் பற்றிப் பேசவே ஆரம்பிக்கவில்லை.

போனவாரம் பெரியப்பா சுமதியை லஸ் ஸிக்னல்பக்கத்தில்நிறுத்தினார். பெரியம்மா எட்டிப் பார்த்து "நல்ல வரனா வந்திருக்கு சுமதி. இது விஷயமா அம்மாகிட்டப் பேசணும். வர்ற வெள்ளிக்கிழமை வீட்டுக்கு வர்றேன்னு அம்மாகிட்டச் சொல்லு" என்றாள்.

இன்றைக்கு வெள்ளிக்கிழமை.

உள்ளே நுழைந்ததும் பெரியம்மா வாய் நிறைய வா என்று கூப்பிட்டாள். பூ எடுத்துக் கொடுத்தாள்.

பெரியப்பா, "புத்திசாலிப் பொண்ணு" என்று தட்டிக் கொடுத்தார்.

அம்மா உள்ளே கூட்டிக் கொண்டு போய் விஷயம் சொன்னாள்.

"பெரியப்பாவுக்குத் தெரிஞ்ச பையனாம். நல்ல வைதீகக் குடும்பமாம், பையன் சி.ஏ. முடிசுட்டுச் சொந்தமா ஆடிட்டிங் கன்செர்ன் வெச்சிண்டிருக்கானாம்."

"வரதட்சணை கேட்டானாம்மா?"

"கட்டின புடைவையோட பொண்டாட்டி வந்தாப் போதுமாம்."

"அப்புறம்?"

"ரொம்ப இரக்க சுபாவமாம். கல்யாணத்துக்கப்புறமும் பெண்ணின் சம்பாத்யத்தில் ஒரு பகுதியைத் தன் பெற்றோருக்குக் கொடுப்பதில் அவனுக்கு ஆட்சேபணை இல்லையாம்."

"ஆச்சரியமா இருக்கே....!"

"ஆனா....."

சுமதி பெரியப்பாவைப் பார்த்தாள்.

"பையனுக்கு நெர்வஸ் ப்ராப்ளம் உண்டும்மா."

"நெர்வஸ் ப்ராப்ளம்னா?"

"காக்கா வலிப்பு மாதிரி அப்பப்போ வருமாம்...."

ஒரே ஒரு நிமிஷம் சுமதிக்கு உள்ளே ஆடியது. இருந்தாலும் ஒரு குடிகாரனின் மகளாய் இருப்பதைவிட அது ஒன்றும் சகித்துக் கொள்ள முடியாததில்லை என்ற நிதர்சனமும் அவள்முன் விரிய "சரின்னு சொல்லிடுங்கோ பெரியப்பா" என்றாள்.




தலைமை ஆசிரியர்: அட்மிஷன் நேரத்தில் டொனேஷன் தொகையைக் கேட்டுச் சிலர் மயக்கம் போட்டு விழுந்துடறாங்கன்னு முன் ஜாக்கிரதையா டாக்டரை ஏற்பாடு பண்ணியும் நிலைமை மோசமாயிடுச்சு.

ஆசிரியர்: ஏன், என்ன ஆச்சு?

தலைமை ஆசிரியர்: டொனேஷன் தொகையைக் கேட்டு அந்த டாக்டரே மயக்கம் போட்டு விழுந்துட்டாரு!

— ஏ. கருணாநிதி.





40 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் 'சிறிய' அளவிலேயே இயங்கி வந்திருப்பது ...

... உங்கள் நம்பிக்கையை 'மிகப்பெரிய' அளவில் பெறுவதற்காகத்தான்!



40 ஆண்டுகளுக்கு முன்னர் நாங்கள் மிகவும் எளிமையாகத்தான் தொடங்கினோம். ஆனால் எங்களுக்கு ஒரு உறுதியான கொள்கை இருந்தது. அது, கவனம்... உறுப்பினர்களைத் தேர்வு செய்வதில் காட்டிய எச்சரிக்கை. ஏனெனில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டுமே நாங்கள் முக்கியமாக நினைக்கவில்லை. அதற்கு நல்ல பலன் இருந்தது. பாடுபட்டுத் தேடிய தங்கள் பணம் எங்களிடம் பாதுகாப்பாக இருக்கும் என்று உறுப்பினர்களுக்கு பூரண நம்பிக்கை வந்தது. அந்த நம்பிக்கை இன்று உறுதியாய் வேரோடித் தழைத்திருக்கிறது. இன்று எங்களைப்பற்றி எங்கள் உறுப்பினர்கள் சொல்லும் ஒரே வார்த்தை... நம்பகம்!

நுட்பமான முறையில், எல்லாத் தகவல்களையும் ஆழ்ந்து விசாரித்த பின்னரே ஒரு புதிய உறுப்பினர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார். இது, உறுப்பினர்கள் தங்கள் பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்க உதவுகிறது.

மற்ற உறுப்பினர்களின் பணத்திற்கு முழுமையான பாதுகாப்போடுதான் ஒவ்வொரு முறையும் ஏலத்தொகை வெளியிடப்படுகிறது. இயற்கையாகவே இந்தத் தொழில் சறுக்கல்கள் நிறைந்தது என்று நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். எனவே, நாங்கள் விவேகமற்ற முறையில் விரிவாக்கத்திற்குத் துடிப்பதில்லை.

சிட்பண்டுகளில் முன்னோடியான **பாலுஸ்ஸெரி சிட்பண்ட்ஸ்** ஒரு இயக்குநர் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. தொழில் துறையின் வளர்ச்சிக்கும் எங்கள் பங்கு சிறிதல்ல.

சமநிலையும் விவேகமும்... அதுதான் பாலுஸ்ஸெரி.

40 ஆண்டுகள் இடைவிடாத உழைப்பில் மலர்ந்த நம்பிக்கை

BALUSSERY CHIT FUNDS
OVER FOUR DECADES OF SERVICE

தி பாலுஸ்ஸெரி பெனிஃபிட் சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை மற்றும் நிர்வாக அலுவலகம்:
''பாலுஸ்ஸெரி பில்டிங்ஸ்''
30 சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
கிளைகள்: பம்பாய், பங்களூர், கல்கத்தா, புதுடெல்லி.



அத்தியாயம் 23

படைகள் வந்தன!

தஞ்சைமாநகரம் அன்று முழுதும் ஒரே அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. புயலையும் மழையையும் அவற்றினால் நேர்ந்த சேதங்களையும் மக்கள் அடியோடு மறந்து விட்டார்கள். "ஈழங் கொண்ட வீராதி வீரரும் சோழ நாட்டு மக்களின் இதயங்கொண்ட இளவரசருமான பொன்னியின் செல்வர் நாகைப் பட்டினத்தில் புயல் அடித்த அன்று வெளிப் பட்டு விட்டார்; பின்னர் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்; அவரைச் சிங்காதனத்தில் ஏற்றி வைத்துச் சக்கரவர்த்தியாக முடிசூட்டும் நோக்கத்துடன் பெருந்திரளான மக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்" என்னும் செய்திகள் முதலில் வதந்திகளாகக் காற்று வாக்கில் வந்தன. பின்னர், நேரில் இளவரசரை நாகைப் பட்டினத்தில் பார்த்தவர்களே வந்து சொன்னார்கள். இந்தச் செய்தி காரணமாக, இரண்டு தினங்களுக்கு முன் வெளியிலே அடித்த புயலைப் போலவே தஞ்சை நகர மாந்தரின் உள்ளத்தில் உத்வேகப் புயல் அடிக்கத் தொடங்கியது. தஞ்சை நகரம் என்றும் கண்டறியாத அளவில் இளவரசருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மக்கள் தீர்மானம் செய்தார்கள். கோட்டைக்கு வெளியிலேயிருந்த புறநகரத்தின் வீதிகளை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். கூட்டங் கூட்டமாகத் தெருக்களிலே நின்று பேசலானார்கள். மேள தாளங்கள், தாரை தப்பட்டைகள் முதலிய வாத்தியங்கள் சேகரிக்கப்பட்டன. ஆடல் பாடல்களில் தேர்ந்தவர்கள் இந்த விசேஷ சந்தர்ப்பத்தில் தங்கள் ஆற்றல்களையெல்லாம் காட்டி விடுவது என்று எண்ணி ஆயத்தம் செய்யலானார்கள். மாதர்களும் இளஞ்சிறார்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் விதங்களைப் பற்றிச் சிந்தித்தார்கள். மற்றும் பல அவசரக்காரர்கள் இளவரசரை வரவேற்பதில் தாங்கள் முந்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், தஞ்சையிலிருந்து நாலா திசைகளிலும் சென்ற சாலைகளில் கொஞ்ச தூரம் முன்னதாகச் சென்று காத்திருக்கத் தொடங்கினார்கள். அப்படி முன்னதாகப் புறப்பட்டவர்களை வேறு சிலர் பார்த்துப் பரிகசித்தார்கள்.

புறநகரம் இந்தப் பாடு பட்டதென்றால், கோட்டைக்குள்ளேயும் ஏதோ முக்கியமான சம்பவங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்

அமரர் கல்கி

பதற்கு விரைவிலேயே அறிகுறிகள் தென்பட்டன.

காலையில் வழக்கம்போல் கோட்டை வாசல் திறந்தது. கறிகாய், தயிர், மோர் விற்பவர்களும் அரண்மனைகளில் அலுவல்களுக்குச் செல்வோரும் வழக்கம் போல் கோட்டைக்குள் சென்று கொண்டிருந்தார்கள். புயல் — மழையினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி முறையிட்டுக் கொள்ள விரும்பியவர்கள் இன்று ஒரு சிலர்தான் வந்தார்கள். அவர்களும் கோட்டைக்குள் சென்றார்கள். வழக்கம்போல வேளைக்காரப் படையும் கோட்டைக்குள் பிரவேசித்தது.

பின்னர், கோட்டை வாசற் கதவுகள் எல்லாம் சட சடவென்று சாத்தப்பட்டன. பெரிய பெரிய இரும்புத்தாள்களைக் கொண்டு கதவுகளை இறுக்கும் சத்தமும் பூட்டுக்களை மாட்டிப் பூட்டும் சத்தமும் கேட்கத் தொடங்கின. பிற்பாடு வந்தவர்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப் பட்டார்கள். முற்பகல் நேரத்தில் இம்மாதிரி கோட்டைக்கதவுகளைச்சாத்தித்தாளிடும்காரணம் என்னவென்று ஜனங்கள் பேச ஆரம்பித்த சமயத்தில் இன்னொரு அதிசயம் நடந்தது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைக் கடப்பதற்கு ஏற்பட்ட பாலமும் தூக்கப்பட்டது. அதற்குப் பிறகு யாரும் கோட்டை வாசலை நெருங்குவதற்கே முடியாமல் போய் விட்டது.

கோட்டையின் பிரதான வாசலாகிய வடக்கு வாசலுக்குச் சமீபமாக இருந்தவர்கள் மேற்கு வாசலையும் தெற்கு வாசலையும் பற்றி விசாரித்தார்கள். அந்த வாசல்களும் வடக்கு வாசலைப் போலவே சாத்திப் பூட்டப்பட்டன என்றும், பாலங்கள் தூக்கி விடப்பட்டன என்றும் அறிந்ததும் மிக்க வியப்படைந்தார்கள்.

''இது என்ன? யுத்தம் ஒன்றும் நடக்கவில்லையே? பகைவர்களின் சைன்யங்கள் படை எடுத்து வருவதாகத் தெரியவில்லையே? அப்படிப் படையெடுத்து வருவதற்கு ஆற்றல் வாய்ந்த பகைவர்கள் வடக்கே, தெற்கே, மேற்கே, கிழக்கே, — எங்கும் சமீபப் பிரதேசத்தில் இல்லையே? அப்படி ஒருவேளை வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து பகைவர்கள் திடீர்ப் பாய்ச்சலில் வந்து விடுவதாக இருந்தாலும் கொள்ளிடத்தையும் காவேரியையும் மற்றுமுள்ள நதிகளையும் தாண்டி இப்போது எப்படி வர முடியும்? அந்த மாநதிகளில் வெள்ளம் பூரணப் பிரவாகமாக அல்லவா போய்க் கொண்டிருக்கிறது?'' — இவ்விதமெல்லாம் தஞ்சைக் கோட்டையின் புறநகரத்தில் வசித்த ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். ஒரு வேளை பொன்னியின் செல்வரைக் கோட்டைக்குள் பிரவேசியாமல் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றனவோ என்று சிலர் கேள்விகளைப் போட்டுக் கொண்டு ''அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று மறுமொழி கூறிக் கொண்டார்கள். இந்த வதந்தி பரவப் பரவ, நகர மாந்தரின் உத்வேகம் அதிகமாயிற்று. ''விஜயாலய சோழரின் வம்சத்தில் வழி வழியாக வந்த இளவரசரைக் கோட்டைக்குள்ளே வராமல் தடுப்பதற்கு இந்தப் பழுவேட்டரையர்கள் யார்? அப்படிப் பழுவேட்டரையர்கள் உண்மையில் முயல்வதாயிருந்தால், கோட்டை மதில்களையே இடித்துத் தகர்த்துவிட வேண்டியதுதான்!'' என்னும் தோரணையில் பேசுவோரும் இருந்தனர்.

வதந்தி என்னும் மாயா பூதம் எப்படிக் கிளம்புகின்றது, எப்படி அவ்வளவு விரைவில் பிரயாணம் செய்கின்றது என்பது யாராலும் கண்டு பிடிக்க முடியாத மர்மமான காரியந்தான். திடீரென்று இன்னொரு பயங்கரமான வதந்தி மக்களிடையே பரவத் தொடங்கியது. வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மரணம் நேர்ந்து விட்டது என்பதுதான் அவ்வதந்தி. ''சக்கரவர்த்தி காலமாகி விட்டாராமே? அது உண்மையா?'' என்று முதலில் கேட்டார்கள். அன்று அதி காலையில் வால் நட்சத்திரம் ஒரு நிமிடம் ஜோதி மயமாக ஒளி வீசிவிட்டுப் பூமியை நோக்கி விழுந்து மறைந்ததைப் பார்த்தவர்கள் சிலர், அதையே அத்தாட்சியாகக் கொண்டு சுந்தர சோழர் காலமானதை ஊர்ஜிதம் செய்தார்கள். ''இது உண்மையாயின், மேலே என்ன நடக்கப் போகிறது?'' என்பது பற்றிக் கவலையுடன் விவாதிக்கப் பட்டதும் இயல்பேயல்லவா? இராஜ்ய உரிமை சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்படுமா? சிற்றரசர்கள் இரு கட்சியாகப் பிரிந்து நின்று சண்டையிடுவார்களா? இத்தகைய உள்நாட்டுச் சச்சரவுகள் காரணமாகச் சோழ சாம்ராஜ்யமே சின்னா பின்னமாகிவிடுமா?





நூறு ஆண்டுகளாகத் தழைத்து ஓங்கி வளர்ந்து வந்த சாம்ராஜ்யத்தில் மீண்டும் பகைவர்களின் படைகள் உட்புகுமா?

இவ்விதமெல்லாம் ஜனங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே "அதோ படை வருகிறது!" என்ற கூக்குரல் ஒன்று எழுந்தது. பலரும் அங்குமிங்கும் ஓடிச் சென்று பார்த்தார்கள். உயர்ந்த கட்டடங்களின் மீதும் உயரமான மரங்களின் மீதும் ஏறிப் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்தவர்கள் கண்ட காட்சி ஒரேயடியாக வியப்பையும், திகைப்பையும் அளிப்பதாக இருந்தது.

தஞ்சையிலிருந்து மேற்கேயும், தென் மேற்குத் திசையிலேயும் புறப்பட்டுச் சென்ற மூன்று பெரிய சாலைகள் அக்காலத்தில் இருந்தன. ஒன்று கொடும்பாளூர் வழியாக இராமேசுவரம் போகும் சாலை; மற்றொன்று மதுரை வழியாகத் தென் பாண்டிய நாட்டுக்குச் சென்ற சாலை; இன்னொன்று உறையூர் வழியாகக் கருருக்கும் சேர நாட்டுக்கும் சென்ற நீண்டு அகன்ற சாலை.

அன்று பிற்பகலில் மேற்கூறிய மூன்று சாலைகள் வழியாகவும் படைகள் அணி வகுத்து வந்து கொண்டிருந்தன. அவற்றில் முன்னால் வந்த அணிகள் கண்ணுக்குத் தெரிந்தனவே தவிர, பின்னால் அந்த அணி வரிசைகள் எங்கே முடிகின்றன என்பதே தெரியவில்லை. அவ்வாறு அப்படை வீரர்களின் அணிகள் பின்னால் பின்னால் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தன.

நல்ல வேளையாக, அப் படைகளின் முன்னணியில் பெரிய புலிக் கொடிகள் பறந்து கொண்டிருந்தபடியால் பகைவர்களின் படைகள் என்று சந்தேகிக்க இடம் ஏற்படவில்லை. சோழ சாம்ராஜ்யத்துச் சைன்யங்கள் தான் அவை! ஆனால் எதற்காக வருகின்றன? எங்கிருந்து வருகின்றன?

இன்னும் சற்றருகில் அப் படைகள் நெருங்கி வந்த போது, புலி உருவம் தாங்கிய கொடிகளில் சிறிய அளவில் பதித்திருந்த இலச்சினைகளும் கண்ணில் பட்டன. அவற்றிலிருந்து, கொடும்பாளூர் தலைமைக்கு உட்பட்ட பராந்தக சோழப் பெரும் படையும், தென் பாண்டிய நாட்டிலிருந்த தெரிந்த கைக் கோளர் பெரும் படையும், ஈழத்துப் போரில் ஈடுபட்டிருந்த அரிஞ்சய சோழப் பெரும் படையும் சேர்ந்து வந்து கொண்டிருந்தன வென்று தெரிய வந்தது. இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம், தென் திசைச் சேநாதிபதியான பூதி விக்கிரம கேசரியே மேற் கூறிய படைகளுடன் வந்து கொண்டிருக்கிறார் என்பது தஞ்சை நகர மாந்தர்களுக்குத் தெரிந்து போய் விட்டது. இதிலிருந்து, சைன்யங்கள் எதற்காக வருகின்றன என்பதை ஊகித்து உணர்வதும் எளிதாயிற்று. கொடும்பாளூர்ப் பெரிய வேளாரான பூதி விக்கிரம கேசரி, ஈழத்துப் பட்ட சிறிய வேளாரின் திருமகளாகிய வானதியைப் பொன்னியின் செல்வருக்கு மணம் புரிந்து கொடுத்து, அவரையே சோழ நாட்டுச் சிம்மாதனத்தில் ஏற்றி வைக்க விரும்புகிறார் என்பது சோழ நாட்டில் எல்லாருக்கும் தெரிந்திருந்த செய்தியேயாகும். கிழக்கேயிருந்து இளவரசர் அருள்மொழி வர்மர் பொது ஜனங்களின் ஆரவாரத்துடன் அழைத்து வரப் படுவதும், மேற்கேயிருந்து சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி மாபெரும் சைன்யத்துடன் அதே சமயத்தில் தஞ்சையை நோக்கி வருவதும் ஒன்றுக்கொன்று பொருத்தமாயிருந்தன.

பழுவேட்டரையர்களும் அவர்களுடன் தோழமை பூண்ட சிற்றரசர்களும் மதுராந்தகருக்குப் பட்டம் சூட்டப் பிரயத்தனம் செய்கிறார்கள் என்பதை ஏற்கெனவே மக்கள் அறிந்திருந்தார்கள்.

ஆதலின் அவர்களுடைய அன்புக்கு உகந்த அருள்மொழிச் செல்வரைச் சிங்காதனம் ஏற்றுவதற்காகவே கொடும்பாளூர்ப் பூதிவிக்கிரம கேசரி தமக்கு உட்பட்ட மாபெரும் தென்திசைப் படைகளுடன் வருகிறார் என்று தஞ்சை நகர மக்கள் ஊகித்துக் கொண்டார்கள். இதனால் அவர்களுடைய உற்சாகம் மேலும் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. சமுத்திரம் போல் பொங்கிவந்த படை வீரர்கள் அனைவரையும் வரவேற்று உபசரிக்கவும் விருந்து அளிக்கவும் அவர்கள் சித்தமானார்கள்.

தஞ்சை நகரில் அக்காலத்தில் பல பெரிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்கள் இருந்தன. கொடும்பாளூர் மணிக் கிராமத்

தார், திருப்புறம்பயம் வலஞ்சியர், உறையூர்த் தர்ம வணிகர், நானா தேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் ஆகிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்களில் அன்று பிற்பகலிலிருந்தே ஆயிரக் கணக்கானவர்களுக்கு உணவு அளிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

இதை அறிந்ததும் நகர மாந்தர்களின் உல்லாசம் அதிகமாகி விட்டது. அங்குமிங்கும் திரிவதும் கூடிக் கூடிப் பேசுவதுமாக இருந்தார்கள். அவர்களில் நூற்றுக்கு நூறு பேரும் அருள்மொழி வர்மரின் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தபடியால், வரப்போகும் சம்பவங்களைப் பற்றிப் பேசுவதில் ஒளிவு மறைவு ஒன்றும் அவசியமாகக் கருதவில்லை. படை வீரர்கள் தஞ்சையை அணுகி வந்து ஆங்காங்கே கூடாரம் அடித்து முகாம் போடத் தொடங்கியதும், நகர மாந்தர்கள் அந்த முகாம்களுக்கே சென்று வீரர்களுடன் சல்லாபம் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

சூரியன் மறைந்து நன்றாக இருட்டுவதற்குள்ளே தஞ்சை நகரின் மூன்று பக்கங்களையும் சேனா வீரர்கள் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். நாலாவது பக்கத்தில் வடவாறு தஞ்சைக் கோட்டையையொட்டிச் சென்றபடியாலும், வடவாற்றில் பெரு வெள்ளம் போய்க் கொண்டிருந்தபடியாலும், அந்தப் பக்கம் வீரர்கள் போவதற்கு வசதியாக இல்லை. அதற்கு அவசியமுமில்லையென்று கருதி விட்டு விட்டார்கள்.

தஞ்சைக் கோட்டையின் பிரதான வடக்கு வாசலை முன்னம் நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா? முதன் முதலாக, நந்தினி தேவியைத் தொடர்ந்து வந்தியத் தேவன் கோட்டைக்குள் பிரவேசித்த வாசல் அதுவன்றோ? அந்தக் கோட்டை வாசல் கண்ணுக்குத் தெரியும்படியான இடத்தில் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியின் ஜாகை அமைக்கப்பட்டது.

இருட்டி ஒரு ஜாமம் ஆனபிறகு சேநாதிபதி கோட்டையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தமது ஜாகைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு முன்னாலேயே அங்கே ஏறக்குறைய நூறுபேர் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்களில் வேளிர் படைத் தலைவர்களும், கைக்கோளர் படைத்தலைவர்களும், பாண்டிய மண்டலத்தின் தலைவர்களும், கொங்கு நாட்டுத் தலைவர்களும் இருந்தார்கள். ஈழ நாட்டுப் போரில் வெற்றி கண்ட சோழர் படைத் தலைவர்களும் பலர் இருந்தார்கள். இவர்களைத் தவிர பற்பல வர்த்தகர் மகா சபைகளின் தலைவர்கள் இருந்தார்கள். முக்கியமாக, 'நானா தேசத்திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்' என்று உலகமெல்லாம் புகழ் பெற்ற வர்த்தக மண்டலத்தின் தலைவர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் அயல் நாடுகளுடன் கப்பல் வாணிகம் செய்யும் பெரும் தன வந்தர்கள். வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களைக் காவல் புரிவதற்காகத் தாங்களே யுத்தக் கப்பல்களை அனுப்பக் கூடிய வசதி வாய்ந்தவர்கள். இவர்களைத் தவிர, தஞ்சாவூர் நகரத்தைச் சேர்ந்த ஐம்பெருங் குழுவினரும் எண்பேர் ஆயத்தின் தலைவர்களும் அழைக்கப்பட்டு அந்தக் கூடாரத்தில் வந்து கூடியிருந்தார்கள்.

அத்தியாயம் 24

மந்திராலோசனை!

ஆரம்பத்தில் வழக்கமான யோக க்ஷேம விசாரணைக்குப் பிறகு கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அங்கே கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கூறலுற்றார்:—

"நான் யார் யாருக்குத் தூது அனுப்பினேனோ, அவர்களில் ஏறக்குறைய எல்லாரும் வந்து இங்கே கூடியிருக்கிறீர்கள். திருக்கோவலூர் முதுகிழவரான மலையமான் அரசர் மட்டும் வரவில்லை. அவர் வர முடியாததற்குத் தக்க காரணம் இருக்கும் என்றே நினைக்கிறேன். மிகவும் அபாயகரமான காரியம் என்று பலரும் கருதக் கூடிய காரியத்தைப் பற்றி யோசிக்க நாம் இங்கே வந்திருக்கிறோம். சோழ குலத்தாரிடமும் சுந்தர சோழ சக்கரவர்த்தியிடமும் நாம் எல்லாரும் எவ்வளவு பக்தி கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்தது. அதை எவ்வளவோ தடவை எவ்வளவோ காரியங்களில் நிரூபித்திருக்கிறோம். ஆனாலும் நாம் சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாக இங்கே கூடியிருக்கிறோம் என்று நம் எதிரிகள் குற்றம் சாட்டக் கூடும். சக்கரவர்த்தியை எதிர்த்து யுத்தம் செய்யப் படை திரட்டி வந்திருக்கிறோம் என்று கூட அவர்கள் சொல்லலாம். ஆனால் சக்கரவர்த்தியின் விருப்பம் இன்னதென்பதை நாம் நேர்முகமாகத் தெரிந்து கொள்வதற்









குச் சில காலமாக வசதி கிடைக்கவில்லை. சக்கரவர்த்தியை நாம் தனிப்படப் பார்க்க முடிகிறதில்லை. அவருடைய அந்தரங்க விருப்பத்தை அறிய ஒரு நிமிஷங்கூட அவரிடம் தனித்துப் பேச முடிவதில்லை. ஏன் என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. சக்கரவர்த்தியின் தேக சுகத்தை உத்தேசித்து அவரைத் தஞ்சைக் கோட்டையில் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் பழுவேட்டரையர்கள் அவரைச் சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் எல்லாரும் என்ன கருதுகிறீர்களோ, தெரியவில்லை..."

சேநாதிபதி இந்த இடத்தில் சிறிது நின்றதும், ''ஆம், ஆம்,'' ''அதுதான் உண்மை!'' ''சக்கரவர்த்தியைச் சிறையில்தான் வைத்திருக்கிறார்கள்'' என்று அக் கூட்டத்தில் பல குரல்கள் எழுந்தன.

''உங்கள் ஆமோதிப்பிலிருந்து நாம் எல்லோரும் ஒத்த உணர்ச்சியும் ஒரே நோக்கமும் கொண்டவர்கள் என்று ஏற்படுகிறது. விஜயாலய சோழர் காலத்திலிருந்து எத்தனையோ ஆயிரமாயிரம் வீரர்கள் தங்கள் இன்னுயிரைப் போர்க் களத்தில் பலி கொடுத்து இந்தச் சோழ சாம்ராஜ்யம் இந்த மகோந்நத நிலைக்கு வந்திருக்கிறது. சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளவே நமக்கெல்லாம் பெருமையாயிருக்கிறது. அப்படிப்பட்ட சோழ குலத்துக்கும் சாம்ராஜ்யத்துக்கும் எவ்விதக் குறைவும் ஏற்படாமல் பாதுகாப்பதற்கே நாம் இங்கே கூடியிருக்கிறோம்; சக்கரவர்த்திக்கு எதிராகச் சதி செய்வதற்கு அல்ல. சக்கரவர்த்தியின் எதிரிகள் அவரை மூன்று வருஷ காலமாகச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவருக்கு உடல் நிலை சரியாக இல்லை என்று காரணம் சொல்கிறார்கள். தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த திருமேனியரான விஜயாலய சோழர், எண்பதாவது பிராயத்தில் திருப்புறம்பயம் போர்க்களத்தில் வந்து இரண்டு கைகளிலும் இரண்டு கத்திகளை ஏந்திச் சக்ராகாரமாகச் சுழற்றி அவர் புகுந்து சென்ற விடமெல்லாம் எதிரிகளின் தலைகளை மலை மலையாகக் குவித்தார்! அத்தகைய வீரர் வம்சத்தில் பிறந்த சுந்தர சோழர் தேக அசௌக்கியத்தைக் காரணமாகச் சொல்லிக் கொண்டு வெளியில் வரவே மறுக்கிறார் என்றால், அது நம்பக்கூடிய காரியமா? சக்கரவர்த்தியைச் சிறை வைத்திருக்கும் துரோக சிந்தனையாளர், பில்லி சூனிய மாய மந்திர வித்தைகளைக் கொண்டு அவருக்குச் சித்தக் குழப்பத்தையும் உண்டாக்கி விட்டார்கள் என்று தோன்றுகிறது. சக்கரவர்த்தியின் சித்தம் சரியான நிலையில் இருந்தால், நமக்குப் பீமார்ஜுனர்களைப் போன்ற இரண்டு வீராதி வீரப் புதல்வர்கள் இருக்கும் போது, போர்க்களத்தையே கண்ணால் கண்டறியாத மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட விரும்புவாரா?......''

இப்போது பலர் ஒரே சமயத்தில் ''சக்கரவர்த்தியின் விருப்பம் அது வென்று நமக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்கள்.

''நமக்கு நேர்முகமாகத் தெரியாது தான். பழுவேட்டரையர்கள் கட்டி விட்ட கதையாக இருக்கலாம். ஆனால் நம் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் கூட அதை நம்புகிறார்.....''

''அநிருத்தரும் அவர்களோடு சேர்ந்திருக்கலாம்; யார் கண்டது?'' என்றார் கூட்டத்



தில் ஒருவர்.

"அப்படியும் இருக்கலாம். அதன் உண்மையை அறிந்து கொள்வது நாம் இங்கே கூடியிருப்பதன் ஒரு முக்கிய நோக்கம். இன்றையதினம் இத்தஞ்சை மா நகரில் உலாவிவரும் வதந்தியை நீங்களும் அறிந்திருப்பீர்கள். நான் அதை நம்பவில்லை. சக்கரவர்த்தியை உயிரோடு தரிசிக்கும் பாக்கியம் நமக்கெல்லாம் கிடைக்கும் என்றே நம்பியிருக்கிறேன். அப்படி அவரைத் தரிசிக்கும் போது பட்டத்தைப் பற்றி அவருடைய விருப்பம் என்னவென்பதை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வோம். ஒரு வேளை சக்கரவர்த்தியே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டும் விருப்பத்தைத் தெரிவித்தார் என்றால், அதை நீங்கள் எல்லாரும் ஒப்புக் கொள்வீர்களா?....."

"மாட்டோம்! மாட்டோம்!" என்ற பெருங் கோஷம் எழுந்தது.

"நானும் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஏனென்றால், சக்கரவர்த்தி தெளிவுள்ள சித்தமுடையவராயிருந்தால் அவ்விதம் ஒரு நாளும் தெரிவிக்க மாட்டார். பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலேயே பட்டத்து உரிமை பற்றி விஷயம் தீர்ந்து முடிவாகி விட்டது. சுந்தர சோழரும் அவருடைய சந்ததிகளுமே தஞ்சைச் சிங்காதனம் ஏற வேண்டும் என்று அந்த மன்னர் உயிர்விடும் தறுவாயில்கூறியதை நானே என் செவிகளினால் கேட்டேன். கேட்டவர்கள் இன்னும் பலரும் இங்கே இருப்பார்கள். காலஞ் சென்ற மகானாகிய கண்டராதித்தர் தம் குமாரனுக்கு இராஜ்யம் ஆளும் ஆசையே உண்டாகாத விதத்தில் அவனை வளர்க்க முயன்றார். அவருடைய தர்மபத்தினியாகிய பெரிய பிராட்டியார், — சிவபக்தியே உருக் கொண்டவரான செம்பியன் மாதேவடிகள், — மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டக்கூடாதென்பதில் பிடிவாதமாயிருப்பதை நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம். இதற்கெல்லாம் ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். அப்படியிருக்கும் போது, சுந்தர சோழர் ஏன் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட ஆசைப்படுகிறார்? அவர் சித்தம் சரியாயில்லை என்பதற்கு இன்னும் ஓர் உதாரணமும் கூறுகிறேன். வீர பாண்டியனைக் கொன்று பாண்டிய சைன்யத்தை நிர் மூலம் செய்த பிறகு, பாண்டியனுக்கு உதவி செய்ய முன்வந்த ஈழத்து அரசனைத் தண்டிப்பதற்காக என் சகோதரன் படை எடுத்துச் சென்றான். அவனுக்கு உதவியாகப் போதிய சைன்யங்களையும் தளவாடங்களையும் அனுப்பத் தவறி விட்டோம். அதனால் அவன் போர்க் களத்தில் வீர மரணம் எய்த நேர்ந்தது. சோழ நாட்டின் வீரப் புகழுக்கு நேர்ந்த அந்தக் களங்கத்தைத் துடைத்துக் கொள்ளும் பொருட்டு நானும் பொன்னியின் செல்வரும் சென்றோம். ஈழத்துப் படைகளை நிர்மூலமாக்கினோம். அநுராதபுரத்தைக் கைப்பற்றினோம். மகிந்தனை மலை நாட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்ளச் செய்தோம். தனாதிகாரி பழுவேட்டரையர் எங்களுடன் ஒத்துழைக்கவில்லையென்பது உங்களுக்கெல்லாம் தெரியும். உங்களில் இங்கே வந்திருக்கும் வர்த்தக மகா ஜனத் தலைவர்கள் உணவுப் பொருள்களை அனுப்பிப் பேருதவி செய்தீர்கள். ஆனாலும் நம் வீரர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தது. அவ்வளவையும் அவர்கள் பொறுத்துக் கொண்டு மகிந்தன் படைகளை நிர்மூலமாக்கியது எதனால்? சோழ குலத்து மா வீரர்களுக்குள்ளே ஈடில்லா மா வீரராகிய பொன்னியின் செல்வர் அளித்த உற்சாகத்தினாலேதான்! அப்படிப்பட்ட வீரப் புதல்வனுக்குத் தந்தையாகிய சக்கரவர்த்தி அளித்த பரிசு என்ன? இராஜத் துரோகம் செய்து விட்டதாக அபாண்டம் சுமத்தி இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிட்டதுதான்! சித்த சுவாதீனம் உடைய ஒருவர் இவ்வாறு கட்டளை பிறப்பித்திருக்க முடியுமா?...."

"சேநாதிபதி! மறுபடியும் சக்கரவர்த்தியின் கட்டளையைப் பற்றியே பேசுகிறீர்கள். சக்கரவர்த்திதான் அக்கட்டளையை அனுப்பினார் என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று சபையிலிருந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

"அதற்கு அத்தாட்சி ஒன்றுமில்லை. அதன் உண்மையைப் பற்றி நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பியுந்தான் இங்கே நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். சக்கரவர்த்தியின் சம்மதமின்றி இத்தகைய கட்டளை பிறந்திருக்கக் கூடுமானால், இந்தச் சோழ சாம்ராஜ்யம் எவ்வளவு பயங்கரமான நிலைமையில் இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். பின்னால் நிகழ்ந்தவற்றையும் எண்ணிப் பாருங்கள். சிறைப்படுத்த வந்த வீரர்கள் இளவரசரைச் சிறைப்படுத்த மறுத்து விட்டார்கள். இளவரசர் தாமாகவே தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து பார்த்திபேந்திர பல்லவனுடைய கப்பலில் ஏறி வந்தார். அந்தக் கப்பல் புயலில் சிக்கிக் கொண்டதாம். அப்போது இளவரசர் கடலில் மூழ்கி மாண்டதாக ஒரு வதந்தி புறப்பட்டது. இதை நான் நம்பவேயில்லை. பொன்னியின் செல்வனைச் சமுத்திரராஜன் அபகரித்திருக்க மாட்டான் என்று உறுதியாக நம்பினேன். அந்தக் கப்பலில் வந்த மற்ற எல்லாரும் உயிர் பிழைத்

அருள்வாக்கு

கொஞ்சம் விச்ராந்தியாயிருக்கலாமென்று பீச்சில் போய் உட்காருகிறோம்; அல்லது மொட்டை மாடியில் போய் உட்காருகிறோம். நமக்கு அன்று பூர்ணிமை என்று தெரியாது. ஆனால் தலையைத் தூக்கிப் பார்த்தால் பூர்ண சந்திரன் வெண்ணெய்க் கட்டி மாதிரி அழகாகத் தெரிகிறது; குளுகுளுவென்று சந்திரிகையைக் கொட்டுகிறது. நாம் ஆசைப்படாமலே ஆனந்தம் கிடைக்கிறது. ஆனாலும் இந்த ஆனந்தமும் எத்தனை நாழி சாச்வதம்? அது உள்ளளவும் கூட அதாவது ராத்திரி பூரா நம்மால் அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறதா? உசந்தால் ஒரு மணி நேரம் பார்க்கிறோம். ஆனாலும் இன்றைக்குப் பார்த்ததில் 'ஹாபிட்' மாதிரி கொஞ்சம் ஏற்பட்டு விட்டது. நாளைக்கும் சந்திரனைப் பார்க்கிறோம். ஆனால் அது இன்று மாதிரி இல்லை. கொஞ்சம் மூளியாகத்தானிருக்கிறது. இன்று பூர்ணமாகப் பார்த்து விட்டதாலேயே நாளைக்கு மூளியாகப் பார்க்கும் போது என்னவோ போலிருக்கிறது. 'எப்போ பூர்ணிமை வரும்? எப்போ வரும்?' என்று இன்னும் ஒரு மாசத்துக்கு அப்புறம் அதே நாள் வருகிற வரைக்கும் ஓர் ஆசை அடித்துக் கொண்டேயிருக்கிறது. அதாவது முதலில் பூர்ணிமைக்காக ஆசைப்படா விட்டாலும் அதைப் பார்த்து ஆனந்தப் பட்டபின் ஆனந்தமே ஆசையை உண்டாக்கி விடுகிறது. இப்படி எதிர்பாராமல் தானாகவே ரொம்ப ஆனந்தமாக வருகிறவையும், பிற்பாடு அது வராதா, வராதா என்று எதிர்பார்க்க வைக்கிற ஆசையை ஏற்படுத்தி விடுகிறது.

ஈசுவர தர்சனம் க்ஷண காலம் கிடைத்து அவன் மறைந்து போய் விட்டானானால் அப்புறம் அந்த தர்சன ஆசை பக்தனை பைத்தியமாக, வெறியாக ஆக்கி விடுகிறது. அதை ஓர் உத்தமமான விரஹ தாபமாகச் சொல்கிறார்கள். அந்த பாவத்திலேதான் மாணிக்கவாசகர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் எல்லாம் கதறு கதறு என்று கதறி மூர்ச்சை போட்டு விழுந்திருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் இப்படியே (ராமகிருஷ்ண) பரமஹம்ஸரைச் சொல்கிறார்கள்.




— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

திருக்கும் போது இளவரசர் மட்டும் எப்படிக் கடலில் மூழ்கி மாண்டிருக்க முடியும்?— ஆகையால் இளவரசர் கரை ஏறியதும் அவரைச் சிறைப்படுத்தச் சதி நடந்திருக்க வேண்டும். அந்தச் சூழ்ச்சியை அறிந்து கொண்ட இளவரசர் தப்பிச் சென்று எங்கேயோ பத்திரமாயிருக்கிறார். சரியான சமயத்தில் வெளிப் புறப்பட்டு வருவார் என்று நம்பியிருந்தேன். உங்களில் பலரும் அப்படி நம்பியதாகத் தெரிவித்தீர்கள். நமது நம்பிக்கை நிறைவேறியது. நாகைப் பட்டினத்தில் புயல் அடித்த அன்று இளவரசர் வெளிப் பட்டார் என்பதாகவும், சோழ நாட்டு மக்கள் அவரை விஜய கோலாகலத்துடன் வரவேற்றுத் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்கள் என்பதாகவும் அறிந்தோம். அவர்களுக்குப் பக்க பலமாக இருக்கும் உத்தேசத்துடனேயே நாமும் இவ்விடம் வந்து சேர்ந்தோம். ஆனால் வஞ்சகச் சூழ்ச்சிக்காரர்கள் மறுபடியும் தங்கள் கை வரிசையைக் காட்டி விட்டார்கள்....."

"என்ன? என்ன?" என்று பலர் கவலைக் குரலில் கேட்டார்கள்.

"நான் இந்தக் கூட்டத்துக்கு வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் அச்செய்தி கிடைத்தது. இன்று காலையில் திருவாரூரிலிருந்து இளவரசர் புறப்படவிருந்த சமயத்தில், அவர் ஏறி வந்த யானைக்கு மதம் பிடித்து யானைப் பாகனைத் தூக்கி எறிந்து விட்டதாம். யானை தெறி கெட்டு ஓடி விட்டதாம். அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் இளவரசரும் காணாமற் போய் விட்டாராம்!....."

"ஐயையோ!" "இது என்ன விபரீதம்?" "தெய்வமும் வஞ்சகர்களின் கட்சியில் இருக்கிறதா?" — என்று இப்படிப் பலர் அங்கலாய்க்கத் தொடங்கினார்கள். அவர்களைச் சேநாதிபதி கையமர்த்தி அமைதியா



தமது புல்லெட் மோட்டார் சைக்கிளில் 3.5 குதிரை சக்தி பெட்ரோல் இஞ்சினை நீக்கிவிட்டு 5 குதிரை சக்தி கொண்ட டீசல் இஞ்சினைப் பொருத்தினார் கோவை கே. பார்த்திபன். இஞ்சினை ஒரு ஃபேன் பெல்ட், ரசாயனப் பூச்சி கொல்லி மருந்து அடங்கிய டேங்க், மற்றும் ஒரு ரப்பர் குழாய் ஆகியவற்றுடன் இணைத்தார்.

இப்போது ஊர் ஊராகச் சென்று, பூச்சி கொல்லி மருந்து ஸ்பிரே செய்து ஏக்கருக்கு ரூ. 25 கட்டணம் வசூலிக்கிறார்.

மோட்டார் சைக்கிளைத் திருத்தி அமைக்க ஆன செலவு 9000 ரூபாய். ஒரு நாளைக்கு ரூ. 100 லாபம் பெறுவதாகக் கூறுகிறார் பார்த்திபன்.

உயரமான மரங்களின் மீது கூட ஸ்பிரே செய்யுமளவு சக்தி மிக்கதாக இந்த இயந்திரம் இருப்பதால் பார்த்திபனுக்கு ஏக மவுசு!

யிருக்கச் செய்தார்.

''செய்தியை முதலில் கேட்டதும் நானும் கதிகலங்கிப் போனேன். ஒரு வாறு சமாளித்துக் கொண்டுதான் இந்தக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தேன். இளவரசர் அருள்மொழி வர்மர் போர் முனையில் எத்தகைய நிகரில்லாத வீரம் உடையவரோ, அப்படியே அறிவாற்றலிலும் நிகரற்றவர். வஞ்சகர்களின் சூழ்ச்சி வலையில் அவ்வளவு சுலபமாக அகப்பட்டுக் கொண்டு விடமாட்டார். சீக்கிரத்தில் அவரைப் பற்றி நல்ல செய்தி ஏதேனும் கிடைக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்கிடையில் நாம் என்ன செய்ய வேண்டும், இந்த இக்கட்டான நிலைமையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்!''

இவ்விதம் சேநாதிபதி தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்ததும், மற்றவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்துக்கள் முக்கியமான விஷயங்களில் ஏறக்குறைய ஒரு மாதிரியாகவே இருந்தன. சில்லறை விவரங்களில் மட்டுமே மாறுபட்டன! அங்கே உள்ளவர்களின் பிரதிநிதிகள் நாளைய தினம் சக்கரவர்த்தியை நேரில் சந்தித்துப் பேச வசதி கோர வேண்டும் என்றும், அதற்கு வாய்ப்புக் கிடைத்தால் சக்கரவர்த்தியிடம் ''மதுராந்தகன் சோழ சிங்காதனம் ஏறுவதை நாங்கள் விரும்பவில்லை'' என்று தெளிவாகத் தெரிவித்து விடவேண்டும் என்றும் பலர் கூறினார்கள். ''ஒன்று, பழுவேட்டரையர்களுடைய சர்வாதிகாரப் பதவிகளிலிருந்து சக்கரவர்த்தி அவர்களை நீக்கி விட வேண்டும்; அல்லது சக்கரவர்த்தி தஞ்சாவூரை விட்டுப் பழையாறைக்குப் போய்விட வேண்டும்'' என்று இன்னும் சிலர் வற்புறுத்தினார்கள்.

''ஆதித்த கரிகாலருக்கு ஏற்கெனவே யுவராஜ்ய பட்டாபிஷேகம் ஆகியிருப்பதால் அவரே அடுத்த பட்டத்துக்கு உரியவர்; அவராகப் பட்டம் வேண்டாம் என்று மறுதளித்தால், அடுத்தபடி சிங்காதனத்துக்கு உரிமையாளர் அருள்மொழி வர்மர்தான். இதைச் சந்தேகத்துக்கு இடம் வையாமல் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவரையும் ஒப்புக்கொள்ளப் பண்ண வேண்டும்'' என்றார்கள் வேறு சிலர். சக்கரவர்த்தியைச் சந்திப்பதற்கே வாய்ப்புக் கிடைக்காவிட்டால், கோட்டைக் கதவுகளைத் திறப்பதற்கு மறுத்தால், கோட்டையை முற்றுகையிட வேண்டியது தான் என்று சிலர் சொன்னார்கள். ''முற்றுகை எதற்காக? உடனடியாகக் கோட்டைக் கதவுகளையும் மதில்களையும் தகர்க்கும்படி வீரர்களை ஏவ வேண்டியது தான்!'' என்று இன்னும் சிலர் கூறினார்கள். இளவரசரைப் பற்றிச் செய்தி வரும் வரையில் காத்திருப்பது நல்லது என்றும் ஆதித்த கரிகாலருக்கு ஆள் அனுப்பி அவரையும் தருவித்துக் கொள்ள வேண்டும் என்றும் சிலர் கருதினார்கள்.

''அதற்காகவெல்லாம் காத்திருப்பதில் என்ன பயன்? பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்திலுள்ள சுந்தர சோழப் பெரும் படை கொள்ளிடத்துக்கு அக்கரையில் மழநாட்டில் இருந்து வருகிறது. தற்சமயம் கொள்ளிடத்திலும் மற்ற நதிகளிலும் பெருவெள்ளம் போவதால் அப் படைகள் இங்கு வர முடியாது. ஆகையால் கோட்டையைத் தகர்த்துச் சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்களின் சிறையிலிருந்து மீட்பதற்கு இதுவே தக்க சமயம்'' என்று வற்புறுத்தினார்கள் வேறு சிலர்.

இவ்வாறு விவாதம் நடந்து கொண்டிருக்கையில், கூடாரத்தின் வாசலில் காவல் புரிந்து கொண்டிருந்த வீரன் ஒருவன் அவசரமாக உள்ளே வந்து சேநாதிபதியின் காதில் ஏதோ கூறினான். அவர் கூட்டத்தினரைப் பார்த்து, ''இதோ வந்து விடுகிறேன். சற்றுப் பேசிக் கொண்டிருங்கள்'' என்று சொல்லி விட்டு வெளியேறினார்.

(தொடரும்)



* ராஜ நாகத்தின் விஷம் எடுக்கும் விதம். வாயகன்ற கண்ணாடிக் குப்பி மீது உள்ள தோலில் நாகத்தின் பற்கள் பதிந்து இறங்கும் போது விஷம் கசிந்து சேகரிக்கப்படுகிறது (போட்டோ: கஜராஜ்).

ராஜநாகத்துக்கு 'ஏர்கூலர்' வசதி!

கிண்டி பாம்புப் பூங்காவின் பிராணிகள் மருத்துவரான டாக்டர் ஜகந்நாதன் தமது அனுபவங்களைச் சொல்லுகிறார்:

○○ பாம்புப்பண்ணையில் இருந்த ராஜ நாகம் ஒன்று இரையே உண்ணாமல் இருந்தது. இந்த நிலைமை பதினைந்து நாட்கள் வரை நீடிக்கவே, அதைக் கொஞ்சம் நுணுக்கமாய்க் கண்காணித்தோம். இரை. செரிப்பதில்தான் பிரச்னை என்று கண்டு பிடித்தோம். மருந்து கொடுத்ததில் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனாலும் ராஜநாகத்தின் வயிற்றில் ஏகப்பட்ட நாக்குப் பூச்சிகள். ராஜநாகத்தின் வயிற்றில் இவை எப்படி வந்தன என்று ஆராய்ந்தபோது ராஜநாகத்துக்கு உணவாய்த் தரப்படும், தண்ணீர்ப் பாம்புகள் வயிற்றில் நாக்குப் பூச்சிகள் இருப்பதும், அவை ராஜநாகத்தின் வயிற்றுக்குள்ளேயே தங்கி, பிரச்னையை ஏற்படுத்தியதும் தெரிந்தது. அதன்பின், தண்ணீர்ப் பாம்புகளின் வயிற்றிலிருந்து நாக்குப் பூச்சிகளை முற்றிலுமாய் வெளியேற்றிவிட்டு (மருந்து மூலமாய்) அதன்பின் அவைகளை ராஜநாகங்களுக்கு இரையாய்ப் போட ஆரம்பித்தோம்.

○○ பாம்புகளுக்குள் சண்டைகள் வருவதும் உண்டு. பெரும்பாலும் பல பாம்புகள் இருக்கும் கூண்டில், இரைகளை மொத்தமாய் இடும்போது, பாம்புகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொள்ளும். ஒரு சமயம், இரை எடுக்கின்ற விஷயத்தில்,



* நாகத்துடன் டாக்டர் ஜகந்நாதன் (போட்டோ: சோமு).

இரண்டு ராஜநாகங்களுக்கு இடையில் சண்டை ஏற்பட்டு, ஒன்றையொன்று தாக்கிக் கொண்டதன் விளைவாய், ஒரு பாம்பின் வாய்ப்புறத்தை ஒட்டிய பகுதியில் ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டு, ரத்தம் கொட்டியது. வெட்டுக்காயத்தைத்தையல்போட்டுச் சீர்செய்யலாம் என்றால், பாம்புகள் வாயை அடிக்கடி திறந்து மூடுவன ஆதலால் தையல் நிற்காது; நிலைமை மேலும் மோசமடையவே செய்யும். எனவே, அடிபட்ட பாம்பைத் தினமும் கூண்டிலிருந்து வெளியில் எடுத்து, அடிபட்ட காயத்தைத் தினமும் கழுவிச் சுத்தம் செய்து, மருந்து போட்டோம். ஒரு வாரத்தில் காயம் மறைந்தது. (தொட்டாலே பாம்பு கடித்து விடும் என்பது தவறான கருத்தாம். நாம் அதைத் துன்புறுத்தினாலொழிய அதுவே தானாகக் கடிக்காதாம்.)

○○ பாம்புகளுக்கு வரும் இன்னொரு பிரச்னை உண்ணி. காடுகளில் வசிக்கும் போது, கரடு முரடான இடங்களில் போகும் போது, உண்ணிகள் தானாகவே உதிர்ந்து விடும். பண்ணையில் அது சாத்தியமில்லை. எனவே, பாம்புப்பண்ணையில், உண்ணியினால் அவதிப்படும் பாம்புகளைத் தனியே எடுத்து, உண்ணி நீக்கிப் பவுடரைக்குழைத்து உடம்பு முழுவதும் பஞ்சு மூலம் பூசி விடுவோம். இது நல்ல பலனளிக்கும்.

○○ பாம்புகளுக்கு உடல் நிலை சரியில்லையெனில் மனிதர்களுக்கு மாதிரியே ஊசி போடுவோம்; மருந்து கொடுப்போம்! பாம்பை மல்லாக்கக் கவிழ்த்துப் போட்டு, ஊசிபோடுவோம். இதற்குச் சாதாரண சிரஞ்சியையும், மிகமெல்லிய ஊசியையும் பயன் படுத்துவோம். அதேபோல வாய் வழியே குழாயைச் செலுத்தி, அதன் வழியே மருந்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் 'புனல்' மூலமாய் உட்செலுத்துவோம்.

○○பாம்புப்பண்ணையில், ஸெஷல்ஸ் தீவுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பெரிய ஆமைகள் இரண்டு உள்ளன. அவற்றில் ஒன்று திடீரென சாப்பிடாமல் இருக்கவே, அஜீரணப் பிரச்னை இருக்கும் என்று நினைத்து வயிற்றைச் சுத்தம் செய்யும் பேதி மருந்தை அளித்தபோது, பிளாஸ்டிக் பைகள், ரப்பராலான சிறு பொருட்கள் எல்லாம் வெளியே வந்தன. இவை எப்படி ஆமையின் வயிற்றுக்குள்ளே போயின? பார்வையாளர்கள் ஆமைகளை நோக்கித் தூக்கி எறிந்தவை தான் அவை! செய்யலாமா இப்படி?

○○ உலகில் மிகமிகக் கொடிய நஞ்சு ராஜநாகத்துடையது தான். ஐந்து மி.லி. அளவுள்ள இதன் விஷம், யானையைக் கூட சில நிமிடங்களிலேயே சாகடித்துவிடும்!

○○ மிகவும் குளிர்ச்சியான சூழ்நிலையே பாம்புகளுக்கு ஏற்றது. எனவே, பாம்புப் பண்ணையில், வெயில் காலத்தில், கூண்டுகளுக்கு மேல் தண்ணீரில் ஊறிய சாக்குகளைப் போட்டுக் குளிர்ச்சியாக்குகிறோம். ராஜநாகத்துக்கு, 'ஏர்கூலர்' வைத்திருக்கிறோம்.

சந்திப்பு: மௌஷ்மி.



○○ ஜப்பானில் வேலை பார்க்கும் பெண்களுக்கெனத் தனிச் சங்கம் இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் வீட்டில் மனைவிக்கு அனுசரணையாக இருந்து வரும் கணவன், வேலை பார்ப்பதற்கு இடையூறு நேராமல் மனைவிக்கு ஒத்துழைப்புத் தரும் கணவன் எனச் சிறந்தவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுகிறது இச்சங்கம்.

○○ நம்பிக்கை உறுதியாக இருக்கும் போது பிரார்த்தனை நீண்டதாக இருக்கத் தேவையில்லை.

— அமெரிக்கா.

தொகுப்பு: எஸ். முகம்மது யூசுப்.

"வெந்நீர் கேட்டீங்களே அங்கிள்... இந்தாங்க."

"வேண்டாம்டா கண்ணா! உங்க அம்மா காப்பி குடுத்துட்டாங்க...!"

— சீர்காழி ஸ்ரீராம்.



எங்களின்
இதயபூர்வமான
வேண்டுகோள்!

போலிகளினால்
நீங்கள்
ஏமாறாதீர்கள்!!





டில்டிங் வெட்கிரைண்டர்கள்

LAKSHMI®

தயாரிப்பாளர்கள் :

ஸ்ரீ லக்ஷ்மி இண்டஸ்ட்ரீஸ்

56, தேவாங்க உயர்நிலைப் பள்ளி ரோடு
(அர்ச்சனா தியேட்டர் அருகில்)
கோயமுத்தூர் - 641 002
போன் : 48689
தந்தி : "பெல்ட் கிரைண்ட்"

அங்கீகரிக்கப்பட்ட எங்கள் டீலர்களிடம் மட்டுமே வாங்குங்கள்.

MADRAS
- **VIVEK & CO.,** R.H. Road, Ph : 76923, 75661.
- **VIVEK & CO.,** P.H. Road, Ph : 662462
- **VIVEK & CO.,** T. Nagar, Ph : 444129
- **RATHNA STORES,** 47, Pondy Bazaar, Ph : 442962
- **SUGUNA AGENCIES,** 160, Linghi Chetty St., Ph : 585558
- **SARASVATHI AGENCIES,** 40, Sembudoss St., Ph : 527932
- **TOWER POINT,** Anna Nagar.

PONDICHERRY
- **DING-DONG,** Ph : 23116

VELLORE
- **REJYO TRADERS,** Ph : 21646

TANJORE
- **NEW MODERN RADIO SERVICE,** Ph : 20688
- **MODERN RADIO SERVICE,** Kumbakonam, Ph : 20017

TRICHY
- **R.M.H. CORPORATION,** Ph : 26092
- **LAXMI CORPORATION,** Fort Station Road, Ph : 32792

VILLUPURAM
- **EAGAMMAI AGENCIES,** Ph : 2326

KALLAKURICHY
- **GANAPATHY CORPORATION,** 5-A, Salem Main Road

TUTICORIN
- **SHANTHI STORES,** Ph : 21061

SALEM
- **NIPPAN FURNITURE,** Ph : 63451.

KARUR
- **VEE VEE ENTERPRISES,** Ph : 22111

MANAPARAI
- **IDHAYAM ELECTRONICS,** Ph : 290

TIRUVANNAMALAI
- **VASAVI TRADERS,**

COONOOR
- **VARIETY HALL AGENCIES,** Ph : 6677

SASI / SLI / 2 / 89

5


"நிக்நெட்"

ஆல்வின் டாஃப்ளர் என்பவரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். 'ஃப்யூச்சர் ஷாக்' என்று ஒரு புத்தகம் எழுதி எல்லோரையும் ஒருவித அதிர்ச்சிக்குள்ளாக்கிப் பணம் பண்ணிக் கொண்டு போனார். அதன்பின் அவர் 'தர்ட் வேவ்' என்கிற புத்தகம் எழுதினார். அதில் அவர் சொல்லும் ஆதாரக் கருத்து வசீகரமானது.

மனித சரித்திரத்தில் மூன்று புரட்சிகளைப் பற்றி அவர் சொல்கிறார். விவசாயப் புரட்சி, தொழிற் புரட்சி அப்புறம் இப்போது நடந்து கொண்டிருக்கும் எலக்ட்ரானிக்ஸ் கம்ப்யூட்டர் இத்யாதிகளின் புரட்சி. இதற்கு அவர் இன்னும் பெயர் வைக்காவிட்டாலும் நான் அதை 'சிலிக்கன் புரட்சி' என்று சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினங்களில் நம்மிடையே வந்துள்ள எல்லா டெக்னாலஜி மாறுதல்களுக்கும் காரணம் சிலிக்கன் என்னும் தனிமத்தில் செய்யப்பட்ட 'சிப்' என்று சொல்கிற சில்லுதான். அதுதான் நம் கம்ப்யூட்டர்களுக்குள்ளும் டெலிவிஷன் செட்டுகளுக்குள்ளும் டெலிபோன்களுக்குள்ளும் இருக்கிறது. அதனால் இந்த யுகத்தைச் சிலிக்கன் புரட்சி என்று சொல்வது பொருத்தமாகும்.


இந்தப் புரட்சியினால் அடிப்படை அமைப்புக்கள் நம்மிடையே மாறிக் கொண்டு வருகின்றன. இந்த மாறுதல் வாழைப் பழத்தில் ஊசி போல நடந்து கொண்டு வருகிறது. பல பேருக்கு இந்த மாறுதல் புலப்படுவதில்லை. இந்த மாறுதல்களினால் நாம் பல நன்மைகள் பெற்றுக் கொண்டிருக்கிறோம். சில உரிமைகளை இழந்து கொண்டிருக்கிறோம்.

போன வாரம் சொன்னோமே, அது போல நம் இந்திய துணைக்கண்டத்தை முழுவதும் கம்பிகளாலும் கேபிள்களாலும் மைக்ரோவேவ் சாதனங்களாலும் இணைத்து எந்த ஓர் இடத்திலிருந்தும் மற்றொரு இடத்திற்கு டெலிபோன் பேச முடியும். அதே கம்பிகளின் மூலம் கம்ப்யூட்டர் செய்திகளையும் பரிமாறிக் கொள்ள முடியும். இது ஒரு மகத்தான மாறுதல்தான். இதனுடன் செய்தித் தொடர்புக்காக சாட்டிலைட்டுகளைப் பயன்படுத்த முடியும். நம்முடைய சொந்த சாட்லைட்டின் பெயர் இன்சாட் 1 பி. இதன் மூலம்தான் நாம் ராமாயணமும், மகாபாரதமும் மந்திரிகளின் முகங்களையும் பார்க்கிறோம். இந்திரா காந்தி ஹாஸனில் முதன் முறை இந்த ஸாட்லைட் வசதியைத் துவக்கி வைத்த போது, 'இந்த சாட்டிலைட்டு மூலம் நம் கிராமங்களின் கல்வியும் பொருளாதாரமும் மாற வேண்டும். விவசாயிகளுக்கு






* டாக்டர் சேஷகிரி



* என். ஐ. ஸியின் டெல்லி 'டிஷ்'

மழை நடவு போன்ற விவரங்கள் தரப்பட வேண்டும். அதற்காகத்தான் இத்தனை செலவழித்து சாட்டிலைட்டு என்றார்.

அந்த வாக்கு காற்றில் போய் விட்டது. இப்போது சாட்டிலைட் மூலம் நகர் சார்ந்த ஒரு மேலை நாகரிகத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிறோம். சோப்பு ஷேவிங் க்ரீம், முகப் பரு, களிம்பு விளம்பரங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். மறைமுகமாக நகரத்துக் குப்பை சமாசாரங்களைக் கிராமங்களுக்குக் காட்டி அவர்கள் ஆசைகளை விபரீதப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது வேறு விஷயம். உண்மையாகவே கிராமத்திற்குப் பயன்படக்கூடிய கம்ப்யூட்டர் திட்டம் ஒன்று இருக்கிறது. அதற்கு **NICNET** என்று பெயர்.



மத்திய சர்க்கார் அமைத்துள்ள **NATIONAL INFORMATICS CENTRE** என்ற ஒரு அமைப்பு பொறுப் பேற்றிருக்கும் திட்டம் நம் கிராமப் பொருளாதாரத்தின் ஆதார அமைப்பை மாற்றவல்லது.

N.I.C. 1975ல் துவங்கி இன்று இந்த துணைக்கண்டத்தின் மிகப் பெரிய கம்ப்யூட்டர் செய்தித் தொடர்புத் திட்டமாகியிருக்கிறது.

டில்லியில் புஷ்பா பவன் என்றொரு இடம் இருக்கிறது. அதில்தான் இந்த ஸ்தாபனத்தின் பெரிய கம்ப்யூட்டர் வைத்திருக்கிறார்கள். இருபத்தோரு கோடி ரூபாய் செலவழித்து வாங்கியிருக்கும் நான்கு ஜப்பான் கம்ப்யூட்டர்களின் இதயத்தில்தான் இந்தியாவின் 430 ஜில்லா மற்றும் மாநிலத் தலைநகர்களைப் பற்றிய செய்திகள், திட்டச் செய்திகள் அனைத்தும் சேகரித்து வைக்கப்படுகின்றன. புவனேஷ்வர், பூனா, ஐதராபாத் ஆகிய இடங்களில் இருக்கும் மினி கம்ப்யூட்டர்கள் ஜில்லாக்களில் இருக்கும் P.C. என்னும் குட்டி கம்ப்யூட்டர்களிடமிருந்து செய்தி வாங்கி ஸாட்டிலைட்டு மூலம் டில்லிக்கு அனுப்புகின்றன. இதற்காக அவர்கள் உபயோகிக்கும் ஸாட்டி

சுஜாதா

ஃபைபனரி நாட்டில் 167...

11.8.89 காலை தபாலில் நமது பார்வையில் பட்ட முதல் தபால் கார்டே சரியான விடையைக் கொண்டிருந்ததால் அதனை எழுதிய வி. சங்கர் ரூ. 25 பரிசு பெறுகிறார்.

விலாசம்:

வி. சங்கர்,
49, திருவேங்கடம் தெரு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை — 600 028.

முக்கிய குறிப்பு: சரியான விடை: 10100111. கல்கி 20.8.89 இதழில் சுஜாதா கட்டுரை தொடக்கத்தில் விடையைப் பிரசுரிக்கையில் ஒரு சைபர் விட்டுப் போனதற்கு வருந்துகிறோம்.

— ஆசிரியர்.

லைட் Intelsat. இதுதான் சோகம். இன்ஸாட் இல்லை, 'இண்டெல்ஸாட்' என்னும் வெளிநாட்டு ஸாட்டிலைட்டு. இதற்கு டெக்னிக்கலாகப் பல காரணங்கள் இருப்பினும் இந்திரா காந்தி இதைக் கேட்டால் கண்ணீர் சிந்தியிருப்பார். இருந்தும் இப்படி ஒரு நெட்வொர்க் மூலம் 238 ஜில்லாக்களை நேரடியாக டில்லியுடன் செய்திபூர்வமாக இணைத்து விட்டார்கள். இந்தியாவின் அனைத்து ஜில்லாக்களையும் இணைத்து விடுவார்கள்.

இதனால் நிகழக்கூடிய சமுதாய மாறுதல்கள் மிக மிக ஆதாரமானவை.

ஜில்லா பரிஷத்துக் கட்டடங்களின் மாடியில் ஸாட்டிலைட் டிஷ் என்று சொல்லப்படும் கிண்ணிகளைப் பார்த்திருக்கலாம். இவைதாம் அடுத்த நூற்றாண்டின் அடையாளங்கள். இதன் மூலம்தான் ஜில்லாவைப் பற்றிய செய்தி டில்லிக்குப் போகிறது. என்ன செய்தி என்பதில் இருக்கிறது இந்தத் திட்டத்தின் வெற்றி வாய்ப்பு.

எத்தனையோ திட்டங்களை மத்திய மாநில அரசுகள் போடுகின்றன. அந்தத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்று அறிந்து கொள்ள முக்கியமான தேவை தகவல் செய்தி. இந்தச் செய்தி தற்போது திட்டக்காரர்களிடம் தபால் மூலமும் காகிதம் மூலமும் போய்ச் சேருவதற்குள் பற்பல மாறுதல்களும் விகாரங்களும் அடைந்து உண்மையாகவே திட்டத்தின் விளைவுகளை அறிந்து கொள்வது, ஏறக்குறைய அசாத்தியமாகி விட்டது. வெள்ளத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். வெள்ள நிவாரணம் பெற அந்தந்த மாநில அரசுகள் மத்திய சர்க்காருக்குச் செய்தி தரும் போது மிகைப்படுத்துவது சகஜமாகி விட்டது. திட்டத்துக்குப் பணம் கேட்கும் போது சென்ற வருஷத்துக்குத் திட்டக் கணக்கு என்ன ஆயிற்று என்றால் ஏதாவது தப்புத் தப்பாக இத்தனை கிணறு வெட்டினோம், இத்தனை ரோடு போட்டோம் என்று தகவல்கள் வருஷ இறுதியில் தரப்படுகின்றன. பொய், தாலுக்கா லெவலிலிருந்து துவங்கி படிப்படியாக டில்லிக்குப் போய்ச் சேரும் போது, உண்மையை 'வெற்றிகரமாக மழுப்பி விடுகிறது. நேரடியாகத் திட்டக்காரர்களுக்குச் செய்தி கிடைப்பதில்லை.

ஸாட்டிலைட்டு செய்திப்பின்னல் இந்த முக்கியமான குறைபாட்டை நீக்கி விடும். திட்டங்கள் ஒவ்வொன்றையும் உண்மையாகக் கண்காணிக்க முடியும். ஏழைமை நீக்கமும், விவசாயம், வெள்ளாமை, கிராம வேலை வாய்ப்புக்கள், குடி தண்ணீர், பள்ளிகள் ஆரோக்கியம் இவையாவும் மாநில மத்திய அரசுகளின் ஒருங்கிணைந்த பொறுப்புக்கள். இவைகளைப் பற்றிய ஆதாரத் தகவல்களை கிராமத்திலேயே சிறுகச் சிறுகச் சேகரித்து, கிராம அபிவிருத்தி ஏஜென்ஸி மூலம் இடைப்பட்டவர்கள் இல்லாமல் நேரடியாகத் திட்டக்காரர்களுக்குச் செய்தி போவதால், அந்தச் சேகரிப்பில் கம்ப்யூட்டர் திறமையிருப்பதால், அந்தச் செய்திகளின் உண்மையைச் சரிபார்க்க முடியும்... கிராமத்தின் அபிவிருத்தியைப் பற்றிய உண்மையான நிலையை அறிந்து கொள்ளத்தான் இத்தனை விஸ்தாரமான அமைப்பு.

இந்தச் செய்திகளைச் சரியான முறையில் பயன்படுத்தும் போது நிஜமாகவே ஏழைமையான பிரதேசங்கள், அது எந்த மாநிலமாக இருந்தாலும், பயனடைய இயலும். அந்த வகையில் இந்தத் திட்டம் புரட்சிகரமானதுதான்.

''இது ஒரு தேசியத் திட்டம், மத்திய அரசுத் திட்டமல்ல'' என்கிறார் டாக்டர் சேஷகிரி; என்.ஐ.ஸி. திட்டத்தின் டைரக்டர். துடிப்புள்ள கம்ப்யூட்டர் விற்பன்னர்; தமிழர்.

இந்தத் திட்டம் வெற்றி பெற மாநிலங்களின் ஒத்துழைப்பு ரொம்ப முக்கியம். இங்கேதான் அரசியல் வருகிறது. பொதுவாக தென் மாநிலங்களிலிருந்து இந்தத் திட்டத்துக்கு அதிகம் எதிர்ப்பு இல்லையெனினும் உ.பி., பீஹார் ரொம்பத் தயங்குகிறது. மேற்கு வங்காளம் இந்தத் திட்டத்தைத் தொட மாட்டேன் என்கிறது. அவர்கள் பயம் எல்லாம் இந்த செய்தி தகவல்கள் தப்பான முறையில் பயன்படுத்தப்படும் என்பதே. இதற்காக மத்திய அரசும் மாநில அரசும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றன. மத்திய அரசு கேட்கிற தகவலை மாநில அரசு தர இசைவதாக. அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமுன் பெங்காலி யாரும் இந்தத் திட்டத்தில் தலையிடக் கூடாது என்று விநோதமான ஷரத்துக்களை உள்ளிட முயன்றது. இந்தத் திட்டம் அரசியலுக்கு அப்பாற்பட்டது என்று நிரூபிக்கச் சில வருடங்கள் ஆகும்.

ஆனால் எதிர்கால நல்வாழ்வுக்கு நம் கிராமங்களை அழைத்துச் செல்ல வேண்டுமெனில் இந்த நேரடிச் செய்தித் தகவல் திட்டம் நிச்சயம் தேவை. இல்லையெனில் நடுவாந்தரத்திலேயே எல்லாக் காசும் கரைந்து கி.பி. இரண்டாயிரத்திலும் கல்கி ராஜேந்திரன் சொன்னது போல, மைல் கணக்காகக் குடி தண்ணீருக்கு நடக்கத்தான் வேண்டியிருக்கும்.

இம்மாதிரி அபார மாற்றத்தினால் நாம் இழக்கப் போகும் உரிமைகளை அடுத்த இதழில் பார்க்கு முன் இந்த வாரக் கேள்வி கொஞ்சம் கஷ்டமானது. 'டிஸ்கவர்' இதழிலிருந்து பார்க்காமல் பதில் சொல்ல முயலுங்கள்.

அனிதா, ஆனந்த், நீங்கள் மூவரும் சீட்டாட உட்காருகிறீர்கள். ஒரு வினோதமான சீட்டாட்டம். எட்டே எட்டுச் சீட்டுத்தான்! நாலு ராஜா. நாலு ஜாக்கி. மற்றவையெல்லாம் உதிர்த்து விட்டு எட்டு கார்டுகளைக் கலைத்து ஆளுக்கு இரண்டு இரண்டு சீட்டுகள் விநியோகம்.

உங்கள் சீட்டுகளை நீங்கள் பார்க்கக் கூடாது. இரண்டையும் அப்படியே எடுத்து நெற்றியில் வைத்துக் கொள்ள வேண்டும். படம் பார்க்க! அதாவது உங்கள் கார்டுகளை நீங்கள் பார்க்க முடியாது. மற்ற இருவரும் பார்க்கலாம். பார்த்துத் தங்களிடம் இருப்பது எந்த இரண்டு சீட்டுக்கள் என்பதை யூகிக்க வேண்டும். இதுதான் விளையாட்டு!

யூகிக்க முடியவில்லை எனில் உடனே சொல்லி விட வேண்டும். பொய் சொல்லக் கூடாது.

அத்தனை சுலபமல்ல. முதல் ஆட்டம் பார்க்கலாமா? அனிதாவிடம் இரண்டு ராஜா. ஆனந்திடம் இரண்டு ஜாக்கி இருப்பதைப் பார்க்கிறீர்கள்.

இரண்டு பேரும் தத்தம் முறை வரும் போது சரியாக யூகிக்க முடியவில்லை. 'தகவல் போதாது' என்கிறார்கள். உங்களிடம் இருக்கும் சீட்டுக்கள் என்ன?

இரண்டு ராஜா?

இரண்டு ஜாக்கி?

இல்லை ராஜா ஜாக்கி?

சரியான விடை மட்டுமில்லை, அதற்கு உண்டான காரணத்தையும் எழுதினால் 'கம்ப்யூட்டரின் கதை' என்கிற என் புத்தகத்தைப் பரிசளிக்க விரும்புகிறேன்.


கல்கி காரியாலயத்துக்கு வந்து சேரும் முதல் சரியான விடைக்கே எனது பரிசு.

(தொடரும்)

"சொல்லக் கொதிக்குதய்யா நெஞ்சம்..."

'கழுதை கெட்டால் குட்டிச் சுவர்...' என்பார்கள். அதாவது, நல்ல கழுதைகள் கூட அல்ல; கெட்டுப் போன கழுதைகள் தான் ஒன்றுக்கும் உதவாத குட்டிச் சுவர்களோடு வாசம் செய்யும் என்று அர்த்தம். இப்படி கெட்டுப் போன கழுதைகளின் லிஸ்டில் நெல்லை – கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள விக்கிரமசிங்கபுரம் நடுநிலைப் பள்ளியில் பயிலும் சுமார் 550 மாணவ – மாணவிகளையும் அரசாங்கம் சேர்த்து விட்டது போல் இருக்கிறது!

இல்லையென்றால், மருந்துக்குக் கூட மேற் கூரைகள் இன்றி அங்கங்கே வாயைப் பிளந்து கொண்டு நிற்கும் (குட்டிச்) சுவர்களைக் கொண்ட கட்டடங்களில் குழந்தைகள் படித்துக் கொண்டிருப்பதை அரசாங்கம் எப்படிச் சகித்துக் கொள்ளும்? 'வானம் பார்த்த பூமி' என்கிற மாதிரி 'வானம் பார்த்த பள்ளி' என்றும் பள்ளிக் கூடங்கள் உண்டு என்பதற்கு இந்தப் பள்ளிக்கூடம் ஓர் உதாரணம்.



கூட்டட வசதியே இந்த லட்சணம் தான் என்கிற நிலையில், மற்ற வசதிகளைப் பற்றிக் கேட்பானேன்? சிறுவர்களுக்கு அத்தியாவசியமான உடற்பயிற்சிகளுக்கென்று சிறிய அளவிலேனும் ஒரு மைதானம் வேண்டாமா?

"பள்ளியின் பரிதாப நிலைமையைத் திருத்தி அமைக்க மாவட்ட கல்வி அதிகாரியை அணுகினால் அவர், "பள்ளிக் கூடம் அம்பாசமுத்திரம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்டது. அவர்கள்தான் சரி செய்ய வேண்டும்" என்கிறார். பஞ்சாயத்து யூனியனில் கேட்டால், 'பண வசதி இல்லையே என்ன செய்ய?" என்று கையை விரிக்கின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவரைப் போய்ப் பார்த்தால் "அரசுதான் ஆவன செய்ய வேண்டும்" என்று பெருமூச்சு விடுகிறார். இப்படி ஆளாளுக்கு எங்களைப் பந்தாடுகிறார்கள்" என்று விக்கிரமசிங்கபுரம் மக்கள் வேதனையோடு பொருமுகிறார்கள்.

இந்த நிலையில் இப் பள்ளிக்குப் 'பாரதியார் நினைவு நடுநிலைப் பள்ளி' என்று பெயர். ஒருவேளை, 'மகாகவி பாரதி தமது காலத்தில் ஏறத்தாழ இம்மாதிரி பரிதாபகரமான நிலையில்தானய்யா வாழ்க்கை நடத்தினார்...' என்பதை இளைய தலைமுறையினருக்கு எடுத்துக் காட்டுவதற்குத்தான் இப் பள்ளிக்குப் பாரதி பெயரை வைத்தார்களோ என்னவோ! வெட்கக்கேடு!

படமும், செய்தியும்:
குளச்சல் இப்ராஹீம்.

கல்லார் கண்பட்ட திரு

அன்றைய அதிகாலையில் கிணற்றைக் குனிந்து பார்த்து விட்டுப் பெருமூச்சு விட்டான் கதிர்வேலு. உள்ளே இறங்கிப் பார்த்தாயிற்று. இனி இந்தக் கிணற்றை ஆழப்படுத்த முடியாது; பாறை. நான்கு வருஷங்களுக்கு முன்னால் முதல் முறையாக மழை பொய்த்தபோது, இந்தக் கிணற்றில் தூர் வாரப்பட்டது. ஒரு வருடம் ஓடியது. தொடர்ந்து இரண்டாவது முறையும் மூன்றாவது முறையும் பொய்த்தது. மூன்று ஏக்கர் பொன் விளையும் பூமியில் ஓர் ஏக்கர் மட்டுமே பயிர்வைத்தான் கதிர்வேலு. அதற்கே தண்ணீர் பாய்ச்சத் தடுமாறிப் போய்விட்டான். இப்போது நான்காவது வருடமும் சேர்ந்து காய்கிறது. கிணற்றை இன்னும் ஆழப்படுத்த வேண்டியதுதான் என்று முடிவெடுத்தான்.

அவன், மனைவி அம்மாளு, சின்னப் பையன் ரத்தினம்; மூன்று பேரும் கடப்பாறையும் மண்வெட்டியுமாய்க் கிணற்றில் இறங்கினார்கள். ஒரு கெஜம் போனது. தண்ணீர் இல்லை. அன்றைக்குக் கதிர்வேலு தன் நெற்றி வியர்வையை ஆள்காட்டி விர



லால் வழித்தெறிந்து விட்டுக் கையில் இருந்த கடப்பாறையை ஓங்கிக் குத்திய போது, ''ணங்'' என்ற ஓசை. அது அவனுக்கு அபாய மணி; பாறை: அசையாத பாறை.

தோட்டா வைத்துத்தான் எடுக்க வேண்டும். அவன் கையில் ஐந்நூறு. கடன் ஆயிரம் என்று ரூபாய் சேர்த்து மூன்று நான்கு முறை தோட்டா வைத்து வெடித்தான். பாறைகள் சிதறின. புதிய பாறைகள் பிறந்தன!

இனியும் செலவு செய்ய அவனுக்குச் சக்தி இல்லை. மூன்று ஏக்கர் மண் அவனைப் பார்த்து அழுதது. அவன் மண்ணைப் பார்த்து அழுதான். பிறந்தது முதல் பயிர்த் தொழிலை மட்டுமே தெரிந்திருந்த அவனால் மேற்கொண்டு என்ன செய்யமுடியும்? திகைத்தான். நீண்ட நேரச்சிந்தனை. வெயில் சூடு மண்டையில் அடித்தபோது, ஓர் எண்ணம் தோன்றியது: 'குமரேசனைப் போய் பார்த்தால் என்ன?'

அடுத்த நாள் காலையிலேயே குமரேசன் வீட்டுக்குச் சென்றான், கதிர்வேலு. அந்தக் காலை நேரத்திலேயே வெளியே



போட்டிக் கதை — 1
(அறிமுக எழுத்தாளர்)

கிளம்பிக் கொண்டிருந்தான் குமரேசன். கதரில் வெள்ளை வேட்டி; மடிப்புப் பிரியாத சட்டை.

கதிர்வேலுவைப் பார்த்ததும், ''அட! என்ன கதிரு, இந்தப் பக்கம்?'' என்று கேட்டான்.

''உங்களைப் பார்க்கலாம்னுதான்.''

''அதுசரி; அதுவும் கருக்கல்ல....?''

''நீங்க தெனமும் நேரமே கிளம்பிடுவீங்க; அதான் நீங்க மொத பஸ்ஸைப் பிடிக்கறத்துக்கு முன்னால் உங்களைப் பார்க்கணும்னு....''

''ஏதும் முக்கியமான விஷயமா? எனக்கு பஸ்ஸுக்கு நேரமாயிடுச்சே'' என்று குமரேசன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

''நான் வேணும்னா கூட்டு ரோடு வரைக்கும் வர்றேன். உங்களை பஸ் ஏத்திட்டுத் திரும்பறேன்.''

''சரி, சைக்கிளை ஓட்டிக்க....'' என்று கதிர்வேலுவிடம் சைக்கிளைக் கொடுத்து விட்டு, சைக்கிள் காரியரில் பின்னால் உட்கார்ந்து கொண்டான் குமரேசன்.

அந்த கிராமத்துக்கும் மெயின் ரோடுக்கும் மூன்று கிலோ மீட்டர். மெயின் ரோடு என்பது கூட அடிக்கடி பஸ் போகும் தடமல்ல. அதன் வழியாக டவுனுக்குச் செல்ல அரசாங்கம் கருணை வைத்து மருந்து போல காலையில் ஒன்று, மதியம் ஒன்று, மாலை ஒன்று என்று 'ட்ரிப்' அடிக்க ஒரு பஸ் விட்டிருந்தது. அந்த பஸ்ஸைப் பிடித்துத்தான் டவுனிலுள்ள ஆஸ்பத்திரி, தாலுகா ஆபீஸ், யூனியன் ஆபீஸ் போன்றவற்றுக்குச் செல்ல வேண்டும்.


''என்ன கதிரு விஷயத்தைச் சொல்லு.''

கதிரு விஷயத்தை எப்படிக் கோவையாகச் சொல்வது என்று தெரியாமல், மாற்றி மாற்றித் தனக்குத் தெரிந்த வகையில், தான் கிணறு வெட்ட வேண்டிய நிலையில் இருப்பதைக் குமரேசனிடம் சொன்னான். ''கிணறு வெட்ட... கவர்மெண்டுல லோன் வாங்கித் தரணும், நீங்கதான்...'' என்றான்.

''கிணறு வெட்டற லோன் எல்லாம் இப்ப இல்ல கதிரு. வேஸ்டாப் போகுதுன்னு குடுக்கறதில்ல. எல்லா ஏரியாவுலயும் மலை மண்ணுக்கு மேல இருக்குப; நம்ம ஏரியாவுல மலை பூமிக்குள்ளாற இருக்குது. நீ எவ்வளவு வெட்டினாலும் பாறைதான், தண்ணி கெடைக்கப் போகுதா என்ன?''

''இல்லைண்ணே! இன்னும் ரெண்டு கெஜம் பாத்துடணும். வெறும் மண்ணா இருந்தா நானே ராப்பகலா வெட்டிப்புடு

“வாலறிவன்”



ஒரு வித்தியாசமான அனுபவம்!

கடந்த 13.8.89 அன்று சென்னை திருவத் இடலில் உள்ள சிற்றரங்கத்துக்கு (போர் நினைவுச் சின்னம் அருகில்) கூத்துப் பட்ட றையின் "நிரபராதிகளின் காலம்" நாட கத்தைக் காணச் சென்றேன். அன்று வேறு பல நிகழ்ச்சிகள் இருந்ததாலோ, என்னவோ, நாடகத்தைக் காண வந்த வர்கள் இரண்டே பேர்தான். (நானும் மற்றொருவரும்). இருந்தும் கூத்துப் பட்டறை யினர் நாடகத்தை நடத்தினர். எல்லாப் பாத்திரங்களுமே ஒரே நேரத்தில் மேடை யில் தோன்றும் இந்த நாடகத்தில் மேடை யில் ஒரு டஜன் நடிகர்களும் பார்வை யாளர்களாக இருவர் மட்டுமே இருந்தது எனக்குத்தான் ஒரு மாதிரியாக இருந்தது; நடிகர்களுக்கல்ல. ஏதோ ஒரு நிறைந்த சபையினருக்கு நடித்துக் காட்டுவது போன்ற ஆர்வத்துடனும், உண்மையுட னும் மிக நுணுக்கமாக நடித்தனர்.

— பி. ஆர். சுவாமி, சென்னை — 94.

வேன். பாறை வந்து சிக்கிடுச்சிங்களே.... தண்ணி வந்துடும்னு எனக்கு நம்பிக்கை இருக்குது."

விவரம் புரியாத ஆளுய்யா நீ. ஊர் உலகம் முழுசும் காஞ்சு போய்க் கிடக்குது. விவசாயம் பண்ண முடியுமா இப்ப? இதை யெல்லாம் விட்டுட்டு டவுன்பக்கம் வந்து, கூலிவேலை பாரு. நாளொண்ணுக்குப் பதினஞ்சு ரூபா கிடைக்கும். இதைக் கட்டிக் கிட்டு ஏன் மாரடிக்கற?"

கூட்ரோடு வந்து விட்டது. குமரேசன் இறங்கினான். கதிர்வேலு இறங்கி மூச்சு வாங்கினான். சைக்கிளை ஸ்டாண்டு போட் டான்.

"இல்லைண்ணே! நீங்கதான் ஏற்பாடு பண்ணணும். எனக்காவ...." என்றான் இணறி.

குமரேசன் யோசித்தான், "பிடிவாதமா இருக்கயே! நான் என்ன பண்றது. கிணறு வெட்ட லோன் இல்ல. ஆடு வாங்க லோன் இருக்கும்னு நினைக்கிறேன். எதுக்கும் யூனியன் ஆபீஸ்ல விசாரிச்சுச் சொல்றேன்."

கதிர்வேலு, "ஆடு வாங்கி நான் என்ன பண்ணப் போறேன். கிணறு வெட்ட ஏதா வது......"

"விளங்காத ஆளுய்யா நீ. ஆட்டு லோன் போட்டு, ஆடா வாங்கச் சொல்றேன். பணமா வாங்கிக் கிணறு வெட்டறது. எது கிடைக்குதோ அதை வாங்கி நமக்கு வேணுங்கற செலவைச் செஞ்சுக்கணும். அதெல்லாம் உனக்கு எதுக்கு? எதுக்கும் நான் யூனியன் ஆபீஸ்ல இந்த லோனாவது இருக்கான்னு தெரிஞ்சுக்கிட்டு வர்றேன். நீ சைக்கிளை மக்கடைல நிறுத்திட்டுப் போ... பஸ் வருது..."

பஸ் தூரத்தில் புழுதியை கிளப்பியவாறு வந்து கொண்டிருந்தது.

குமரேசன் திரும்பி வந்து, ஆட்டு லோன் இருக்கிறது எனத் தெரிவித்த பிறகு கூட ஆட்டு லோன் வாங்கி எப்படிக் கிணறு வெட்டுவது எனக் குழம்பினான் கதிர் வேலு.


ஆடு வாங்க என்று விண்ணப்பித்து, பாங்க்கில் பணமாக வாங்கிக் கொள்ள முடியும் எனக் குமரேசன் சொன்னான். அவன் செய்ய வேண்டிய வேலைகளையும் விளக்கினான்.

அங்கும் இங்கும் அலைந்து கொஞ்சம் கடன்வாங்கி ஒரு தொகையைக் கையில் வைத்துக் கொண்டான் கதிர்வேலு. ஐம்பது ரூபாய் 'கொடுத்து' மணியக்காரரிடம் 'சிட்டா அடங்கல்' நகல் எடுத்துக் கொண் டான். டவுனுக்குக் குமரேசனுடன் சென் றான். யூனியன் ஆபீஸுக்கு அழைத்துச் செல்லப் பட்டான்.

"இவர்தான் நம்ம ஜி. எஸ்." என்று அறிமுகப்படுத்தப் பட்டவருக்குக் குமரேசன் வணக்கம் கூறி நின்றான். குமரேசன் ஜி.எஸ். அருகில் உட்கார்ந்து தணிந்த குரலில் பேசினான். பத்து நிமிடங்களுக்குப்பின், "இதோ பாரு குமரேசா, லோன் முடிஞ்சு போச்சு. நீ இப்ப வர்றே. நான் விண்ணப் பத்தை பாங்க்குக்கு அனுப்பிடுவேன். நீ அங்க பார்த்துக்கணும். திரும்பி வந்தா என்னைக் கேக்கக் கூடாது" என்றார் ஜி.எஸ்.

"அதெல்லாம் என் பொறுப்பு சார்!" என்றான் குமரேசன்.

குமரேசன் சொல்லியதற்கு ஏற்ப, கதிர் வேலு யூனியன் ஆபீஸ் பக்கத்தில் இருந்த பெட்டிக்கடையில் ஐந்து ரூபாய் கொடுத்து லோன் விண்ணப்ப பாரம் வாங்கி வந்தான். ஜி.எஸ். அதை வாங்கி, நிரப்பிக் கதிர்வேலு விடம் கைநாட்டு வாங்கிக் கொண்டார்.


கவிஞரின்
நெஞ்சக் கற்பனை
காகித மீது:
டிசைன் கலைஞரின்
செவுக கற்பனை
நிகரிலா நேர்த்திப்
பருத்தித்
துணிமீது:
பருத்தி
பேண்டீஸ்
மாதர் ஜட்டி
படைப்பு: விஐபி
VIP
Feelings

அதன் பிறகு கதிர்வேலு குமரேசனுடன் யூனியன் ஆபீஸுக்கு இரண்டு மூன்று முறை வந்து போனான். விண்ணப்பம் பாங்க்குக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. திங்கட்கிழமை தவறாமல் அந்த அரசுடைமையாக்கப்பட்ட வங்கிக்கு ஆஜராகி வங்கி மேலாளருக்கு வெறுப் பேற்றினான்.

ஒரு நல்ல நாளில் வங்கி மேலாளரின் அறைக்குள் அனுமதிக்கப்பட்டு, கை கட்டிச் சுவரோரம் — அதன் மீது சாயாமல் நின்றான்.

"இதபாருப்பா, உனக்கு லோன் மொத்தம் ஆறாயிரம். அதில் அரசாங்க மான்யம் ரெண்டாயிரம். நீ திரும்பக்கட்ட வேண்டியது நாலாயிரம்."

"சரிங்க அய்யா!"

"இதில் அரசாங்க மான்யம் ரெண்டாயிரத்தை மட்டும்தான் உன் கையில கொடுப்போம்."

"அய்யா....."

"நாலாயிரத்தை உன் கணக்கில எங்க பாங்க்லயே வச்சிருப்போம். மூணு வருஷம் கழிச்சி எங்க கணக்குக்கு எடுத்துக்குவோம்."

"லோன் முழுசாக் குடுங்க அய்யா... நான் நாலாயிரத்தைத் திருப்பிக் கட்டிடறேன்."

"உன்னோட உத்தர வாதத்தை நம்பிக் குடுத்துட்டு, உன் பின்னால நாங்க வரணுமா? சும்மா என் நேரத்தை வீணாக்காதே. வேணும்னா ரெண்டாயிரத்தை வாங்கிக்கிட்டுப் போ. இல்லே, இப்பவே நடையைக் கட்டு."

கதிர்வேலு குழப்பமாகக் குமரேசனைப் பார்த்தான். குமரேசன் அவனைத் தனியாக அழைத்துவந்து, "யோவ், ரெண்டாயிரத்தை வாங்கிக்கிட்டு வாய்யா. இதுதான் இங்க வழக்கம். பாங்க்காரன் கடனைக் குடுத்துட்டு உன் பின்னாலயா அலைவான்?"

"இல்லண்ணே! லோன் மொத்தம் ஆறாயிரம்...."

"சட்டம் பேசறயா? மானேஜர் 'எங்க ஆடு?'ன்னுவான். அப்ப எங்க போய் ஆடுவே?"

வங்கி மேலாளர் எட்டிப்பார்த்து, "என்ன குமரேசன்?" என்றார். "ஒண்ணுமில்லீங்க ஸார்...." எனப் பதில் அளித்து விட்டு, கதிர்வேலுவை ஜாடை காட்டி உள்ளே அழைத்துச் சென்றான். ஏகப்பட்ட இடத்தில் பெருவிரல் ரேகைகளை வைத்த பிறகு காஷியரிடம் போய் பணம் வாங்கினான்.

பாங்க் வராந்தாவில் உட்கார்ந்து எண்ணிப் பார்த்தான்; ரெண்டாயிரம்.

"சரியாயிருக்கா?" குமரேசன்.

"சரியாயிருக்கு."

"சரி, அதுல நானூறு குடு." என்றான், தனிவாக. "மானேஜருக்கும், பீல்ட் ஆபீஸருக்கும்."

குமரேசன் உள்ளே போய் வந்தான்.



"அதுதான் ப்ளஸ் ஒன்னுக்குப் புத்தகமெல்லாம் வந்தாச்சே, அப்புறம் ஏன் பாடம் நடத்த ஆரம்பிக்கலையாம்?"

"இன்னும் நோட்ஸ் எதுவும் வரலையாம்!"

— ஆர். ரத்தினசாமி.

"வா போகலாம்," என்றான் கதிர்வேலுவிடம். கதிர்வேலு கவலையோடு இருந்தான். "நேரா யூனியன் ஆபீஸ் போகணும். ஜி.எஸ்., அதிகாரி எல்லாரையும் பாக்கணும். இல்லாட்டி மறுபடி நான் அந்தப் பக்கம் போக முடியாது."

கதிர்வேலு மேலும் கவலைப்பட்டான்.

அங்கும் கொடுத்தது போக மிஞ்சியது ஆயிரத்து நூறு.

பஸ் ஸ்டாண்டு வந்தார்கள். அப்போது குமரேசன் கதிர்வேலுவிடம் சொன்னான்.... அவனது வழக்கமான ரேட் பத்து சதவீதமாம். இருநூறு ரூபாயாம். கதிர்வேலு நல்லவன் என்பதால் முதலிலேயே வாங்கிக் கொள்ள வில்லையாம்.

கதிர்வேலு இருநூறு கொடுத்தான்.

பஸ் ஸ்டாண்டு ஓட்டலில் குமரேசனின் கணக்கு அதிகமாகி விட்டதாம். ரெண்டு மாசமாக "அக்கவுண்ட்" செட்டில் செய்ய வில்லையாம். நூறு ரூபாய் கைமாற்று வேண்டுமாம். திருப்பித் தந்து விடுகிறானாம்.

கதிர்வேலுவுக்கு வேறு வழி இருக்க வில்லை.

ஊரில் வந்து இறங்கி சில்லறைக் கடன்களில் பாதியை அடைத்து விட்டுக் கையில் இருப்பதை எண்ணிப் பார்த்தான். ஐந்நூறு. இதில் கிணற்றில் என்ன வேலை செய்யலாம் என்று கதிர்வேலு தூக்கத்தை மறந்து யோசனையில் கிடந்தான்.

தமிழ்நாட்டின் எங்கோ ஒரு குக்கிராமத்தின் மூலையில் துணுக்காக இருக்கும் கதிர்வேலு, வளமாக ஆடு வளர்த்து, வறுமைக் கோட்டுக்கு மேலே இழுக்கப் பட்டது உட்பட, அந்த வருடத்திய வறுமை ஒழிப்புத் திட்டம் பற்றிய செலவினம், இந்தியப் பாராளுமன்றத்தில், உறுப்பினர்களின் கை கலப்புடன் நடந்தேறியது!

என் உயிர்த் தோழன்

அத்தியாயம் 20
டில்லியும் புதிய கட்சியும்!

காரில் ஏறிச் சிந்தனையுடன் அமர்ந்த டில்லி, டிரைவரிடம் 'டேய் ஐ.ஜி. இன்னாடா ஐ.ஜி... நம்ம ஸ்டேட்டஸ் இன்னா... பவுசு இன்னான்னு இந்த ஊருக்குக் காட்ட வேணாமா? வண்டியை நேரா மினிஸ்டரு மகாலிங்கம் வூட்டுக்கு வுடு சொல்றேன். டில்லி பாபுவை இன்னா நெனைச்சிக்கினானுங்க இந்த பாடுங்க.. தீர்த்துடறேன் அவனுங்களை'' என்றவாறே வண்டியில் சாய்ந்து அமர்ந்தான். 'பின் நினைவு வந்தவனாய், ''டேய் வண்டியை மாம்பலத்து வழியா உடுறா. ஒரு மாலை ஒண்ணு வாங்கிக்குவோம்'' என்றவன் மாம்பலத்தில் வண்டியிலிருந்து இறங்கி நூற்றைம்பது ரூபாய்க்கு ஒரு ஆளுயர மாலையும் ஒரு டஜன் ஆப்பிளும் வாங்கிக் கொண்டு வண்டியை அமைச்சரின் வீட்டிற்கு விடச் சொன்னான்.

அமைச்சர் மகாலிங்கம் வீட்டிற்குள் டில்லியின் வண்டி நுழைந்ததும், அமைச்சரின் வீட்டு வாசலில் 'பாராவுக்கு' நின்றிருந்த போலீஸ் கான்ஸ்டபிள் வண்டியை நெருங்கி, ''யார் வேணும்?'' என்றார்.

டில்லி, வண்டியில் இருந்து இறங்கியவாறே, ''தம்பி அண்ணனைப் பார்க்க வந்துக்கறேன். டில்லின்னா அண்ணனுக்குத் தெரியும். எல்லா விசயத்தையும் உன் கைலேயே சொல்லணுமா. இல்ல அண்ணனோட பி.ஏ.வாண்ட மேட்டரைப் பேசலாமா?'' டில்லி நக்கலாகக் கேட்டான்.

டில்லியின் உடை அவன் அணிந்திருந்த கரை வேட்டி, மேல்துண்டு முதலியன அவன் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவன் என அந்த போலீஸ்காரரை நினைக்க வைத்தது. உண்மையில் 'டில்லி பாபு' போன்றவர்கள் அனைத்துக் கட்சிக் கரையிலும் வேட்டி, துண்டு வைத்துக் கொண்டு ஆட்சிக்கு எந்தக் கட்சி வருகிறதோ அதைச் சமயத்துக்கு ஏற்றவாறு மாற்றிக் கொள்ளும் பச்சோந்தி இனத்தவன் என்பது அந்த பாவப்பட்ட போலீஸ்காரருக்குத் தெரிய நியாயமில்லை. மேலும் உடலில் முக்கால் பாகத்துக்குக் கட்டுப்போட்டிருந்ததும் தாம்புக் கயிர் தடிமனுக்கு டில்லிபாபுவின் கழுத்தைச் சுற்றியிருந்த தங்கத்தாலான சங்கிலியும் தோரணையும் போலீஸ்காரரை ஆட வைக்க, அந்த போலீஸ் கான்ஸ்டபிள் தான் ஏதோ பிரதமரையே அடையாளந் தெரியாது நடந்து கொண்டதைப் போல் அவசர அவசரமாகச் சுதாரித்துக் கொண்டு, ''வாங்க ஐயா... ஐயா உள்ளேதான் இருக்காரு. ஆபீஸ் ரூம்ல பி.ஏ. சார் உட்காந்திருக்கார். அவர் கிட்டப் போய் மத்த விஷயத்தைப் பத்திப் பேசுனீங்கனா, அவரு விவரமாப் பதில் சொல்வாரு ஐயா...'' என்று படபடவென்று பொரிந்து தள்ளினார்.

ஆக வெளியில் நின்றிருந்த கான்ஸ்டபிளை ஒரு கலக்குக் கலக்கி விட்ட திருப்தியில், டில்லி, டிரைவரிடம் மாலையையும் ஆப்பிள்களையும் கையில் எடுத்துக் கொண்டு பின்னே வரச் சொல்லி விட்டு அடி விழுந்ததில் ஏற்பட்ட வலியையும் மறைத்துக் கொண்டு, ஒரு கம்பீர நடை போட்டு அமைச்சரின் வீட்டினுள் நுழைந்தான்.

டில்லி ஆபீஸ் ரூமில் நுழைந்த நேரம் வேறு யாருடனோ பேசிக் கொண்டிருந்த அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசி கிட்டத்தட்ட முக்கால்வாசிக்கு மாவுக் கட்டுக் கட்டப்பட்ட ஓர் உருவம் உள்ளே நுழைந்ததைக் கண்டு, ''யாரு சார் வேணும்?'' என்றார்.

டில்லி அசட்டையாக, ''என் பேரு டில்லி பாபு. நான் நம்ப கட்சித் தொண்டன். என்னைப் பத்தி நானே பெரிசாச் சொல்லிக்கக் கூடாது. நம்ப கட்சி ஆட்சிக்கு வரணும்னு நான் ராப்பகலாக் கஷ்டப்பட்டதெல்லாம் நம்ப 'ஐயாவுக்கே தெரியும். அய்யா நம்ப தொகுதிலேதான் நின்னாரு. அப்பவே அய்யாவுக்கும் நமக்கும் ரொம்ப நெருக்கம். அனாவசியமா அய்யாவுக்கு பேஜாரு குடுக்கக் கூடாதுன்னுதான் நான் அடிக்கடி வந்து அய்யாவைக் கண்டுக்கிறதில்லே. இப்ப நம்ம தொகுதில ஒரு சின்ன பிரச்னை. அதுதான் ஐயாவைப் பார்த்து ஒரு ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போவலாம்னிட்டு... ஐயாவுக்கு எதும்

பாரதிராஜா

வேலை இருந்தாச் சொல்லுங்க. நான் பின்னால் ஒருக்கா அவரு ஃப்ரியா இருக்கச் சொல்ல வந்து பாத்துட்டுப் போறேன்...'' என்றான்.

அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசி டில்லியைப் பற்றி நிறையவே கேள்விப் பட்டிருக்கிறாரென்றாலும் அவனை நேரில்—அதுவும் அடையாளம் கூடத் தெரியாத அளவுக்குக் கட்டுப் போட்டுப் பார்ப்பது இதுவே முதல் முறை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அதில் அமைச்சர்களாவிருப்போரின் சபலத்தின் வகையறிந்து, அதை சப்ளை செய்து, கூடிய சீக்கிரம் அவர்களின் 'குட்புக்'கில் முதல் இடம் பெறும் விஷயத்தில் டில்லியின் சாமர்த்தியம் அலாதியான ஒன்று. டில்லியின் மருடிக்கு மயங்காத மந்திரிகளும் உண்டு. ஆனால் டில்லி தனக்குச் சாதகமாக எல்லோருமே இருக்க வேண்டும் என்று என்றுமே பேராசைப் பட்டவனல்லன்! ஒரு கட்சியில் மந்திரி அந்தஸ்தை வகிக்கும் ஓரிரு புள்ளுருவிகளின் அந்நியோன்யத்தைச் சம்பாதித்து விட்டால் கூட, அதை வைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டு அவர்களின் மூலமே தனது பல்வேறு 'பிசினஸ்களுக்கும்' எந்தவிதமான இடையூறும் இராது பார்த்துக் கொள்வான்.

இப்படிப்பட்ட டில்லி இப்போது தங்கள் கட்சிக் கரை வேட்டி, மேல்துண்டு, ஆளுயர மாலை, பழங்களுடன் மந்திரியைப் பார்க்க வந்திருக்கிறான். அதுவும் மந்திரியின் தொகுதியிலேயே இருப்பவன். உடம்பெல்லாம் கட்டோடு வந்திருக்கிறானென்றால் என்ன பிரச்னையோ, ஏதோ என்று பதற்றப்பட்ட அமைச்சரின் உதவியாளர், ''உட்காருங்க சார். ஐயா மேலதான் இருக்காரு. ஒரு நிமிஷம் நீங்க வந்த விஷயத்தை அவர்கிட்டச் சொல்லிடறேன்...'' என்று சொன்னதோடு நிற்காது, அவர் இன்டர்காமை எடுத்து பஸ்ஸரை அமுக்கி விட்டுப்





○○ நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது எளிது. ஆனால், உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பது அரிது!''

— கதே.

— புத்தனாம்பட்டி சி. மணி.

பயபக்தியோடு காத்திருந்தார்.

அமைச்சர் மகாலிங்கம் ''யாரு?'' என்று கர்ஜித்தார்.

''சார் நான்தான் ராமன் பேசறேன் சார். இங்க டில்லிபாபுன்னு ஒருத்தர் உங்களைப் பார்க்கணும்னு வந்திருக்காரு. இங்க வெயிட் பண்ணச் சொல்லட்டுமா சார்...?''

ஒரு நிமிடம் பி.ஏ. சொன்னதைக் காதில் வாங்கி அதை மனத்தில் அசைபோட்ட அமைச்சர் ''வேணாம். இங்க மேலேயே அனுப்பி வை. நான் பேசிக்கறேன்.'' என்று சுருக்கமாகக் கூறி விட்டு பட்டனைத் தட்டி அந்த நவீன டெலிபோன் கருவியைச் செயலிழக்கச் செய்தார்.

அமைச்சர், ஒருவரை ஆபீஸ் ரூமில் பார்க்காது நேரே மாடிக்கே வரச் சொல்கிறாரென்றால் ஒன்று அவரால் மேலே அழைக்கப்பட்டவர் அமைச்சருக்கு நெருங்கிய உறவு வகையறாவாக இருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் அப்படி அழைக்கப்பட்டவர் மந்திரிக்கு எந்த வகையிலாவது ஆதாயமாக இருக்கக் கூடிய முக்கிய நபர்களில் ஒருவராயிருக்க வேண்டும். இதை நன்கறிந்திருந்த பி.ஏ. ராமன் அவசர அவசரமாக எழுந்து டில்லியிடம், ''சார் ஐயா உங்களை மேலேயே வரச் சொல்றாரு'' என்றார்.

பிறகு, தமக்கு அடுத்த லெவலில் இருக்கும் பி.ஏ. சந்திரசேகரைக் கூப்பிட்டு, ''இந்தா சாரைக் கூப்பிட்டுக்கிட்டு மேலே போங்க. ஐயா அவரை மேலேயே பார்க்கறேன்னு சொல்லியிருக்காரு...'' என்றார்.

சந்திரசேகர், படித்துக் கொண்டிருந்ததைப் போல் பாவனை செய்து கொண்டிருந்த ஃபைலை அவசர அவசரமாய் மூடி விட்டுச் சீட்டிலிருந்து எழுந்து, ''வாங்க சார்'' என்று வழிய... டில்லி, ''ஒரு நிமிஷம் தோ போவலாம்.'' என்றவன் முகத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த கட்டை அவசரமாகக் கழற்றினான். இப்போது அவனது முகம் குண்டும் குழியுமாய்ப் பொரித்த அப்பளம் போல் இருந்தது.

அமைச்சரின் அந்தரங்கக் காரியதரிசிகள் இருவருமே அதிர்ச்சியில் அதிர்ந்தது துல்லியமாய்த் தெரிந்தது. பி.ஏ. சந்திரசேகர் உணர்ச்சிவசப்பட்டார். ''என்ன சார் ஏதும் ஆக்ஸிடென்டா?''

''அது பற்றிப் பேசத்தான் மினிஸ்டரைப் பார்க்க வந்துருக்கேன்'' என்ற டில்லியின் பதிலில் இருந்த நக்கலில் தனக்கு என்ன வேலையோ அதை மட்டும் பார்த்துக் கொண்டு சமர்த்தாக இருக்கச் சொல்கிறார் என்பதைச் சட்டென்று புரிந்து கொண்டு, ''ஹி ஹி...'' என்று அசடு வழிந்த சந்திரசேகர், அவசரமாக டில்லிக்கு வழிகாட்ட முன்னே சென்றார்.

அவரைத் தொடர்ந்து டில்லி கையில் அந்த ஆளுயர மாலையையும், ஆப்பிள்களையும் சுமந்து பின்னே சென்றான்.

வெறும் பனியன் மற்றும் லுங்கியில் மிகவும் எளிமையாய் அமர்ந்திருந்தார் அமைச்சர் மகாலிங்கம். தமது கம்பீரமான தோற்றத்திற்குச் சற்றும் பிசிறடிக்காத அதே அளவு குரலையும் பெற்றிருந்த அவர், ''வா டில்லி பாபு. என்ன இவ்வளவு தூரம்?'' என்று வினவ, டில்லி அவசர அவசரமாக அவரருகில் சென்று, அந்த ஆளுயர மாலையை அவர் கழுத்தில் அணிவித்தான்.

''என்ன இது புதுப் பழக்கம்... மாலையெல்லாம், ம்?'' என்று விசாரித்த அமைச்சர், அப்போதுதான் டில்லியைச் சரியாகக் கவனித்தார்.

''இது என்ன டில்லி முகமெல்லாம் காயமா இருக்கு? உடம்பெல்லாம் கட்டு போட்டிருக்கே... என்ன ஆச்சு?'' அமைச்சர் அனுதாபத்தோடு கேட்டார்.

டில்லி கையிலிருந்த பழங்களை மேஜையில் வைத்து விட்டு, முன் தினம் கொய்யாத் தோப்பில் நடந்த அனைத்தையும் தேவி விஷயம் தவிர்த்து அவரிடம் அழுதவாறே கொட்டினான். அதன் பின், தான் போலீஸ் ஸ்டேஷனில் கேட்டு, தொடர்ந்து அஸிஸ்டென்ட் கமிஷனரைச் சந்தித்தும் எந்த விதப் பயனும் ஏற்படவில்லை என்பதையும் தெளிவாக எடுத்துச் சொல்லி விட்டு, அமைச்சரிடம் தனது கோரிக்கையை விளக்க ஆரம்பித்தான்.

''ஐயா உங்களுக்கே தெரியும். நான் அனாவசியமா யார் வம்புக்கும் போற ஆளு இல்லே. எனக்கு அந்த வருத்தம் கூட இல்லே. நம்ம கட்சி ஆளுங்களையே போலீஸ்லே இப்படி பண்றாங்கன்றத நெனைக்கச் சொல்லத்தான் மனசு தாங்க மாட்டேங்குது. பேஜாராகீது... இத்தக் கூட நாம செஞ்சிக்க முடியலேன்னா அப்பாலே நாம பவர்லே இருந்து இன்னா யூஸ்ன்றேன்? அவுதும் நம்ம கட்சிக்காரங்களை அடிச்சது யாரு? சாதாரண ஆளா? நாம கண்டுக்காம வுட? தருமன்.. இஸ்ட்ராங்கான எதிர்க்கட்சி பார்ட்டி. இத்தையே சாக்கா வெச்சிகினு நாம அவனைச் சாகவே அடிக்கலாம்... ஆனா இத்தெல்லாம் எதுவும் செய்ய முடியாது, நம்ம கவர்ன்மெண்டுக்கு இதெல்லாம் புடிக்காது... அப்டி இப்படின்னு நம்மளான்டையே

உதார் உடறானுங்க. நீங்கதான் ஐயா பக்குனு ஒரு வழி பண்ணணும்...'' — ஆவேசத்துடன் முடித்த டில்லி, சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

அனைத்தையும் கேட்டு முடித்த அமைச்சர் அமைதியாக ஆரம்பித்தார். ''டில்லி... எனக்கு இது ஒண்ணும் பெரிய விஷயமாவே தெரியலே. இதை இப்படியே துணைக் கமிஷனர் சொன்ன மாதிரி சும்மா வுட்டுட்டாத்தான் நல்லது. இதை அனாவசியமா நாம பாலிடிக்ஸ் பண்ணப் பார்த்தாக் கடைசிலே அசிங்கப்படறது நாமளாத்தான் இருப்போம். இது வெறும் ரெண்டு கட்சித் தொண்டருங்களுக்குள்ள ஏற்பட்ட ஒரு சாதாரணத் தகராறாவோ... இல்ல, ரெண்டு குப்பங்களுக்கு நடுவே இருந்த பகைலே உண்டான சண்டையாவோதான் வெளிலே தெரியும். இப்ப இந்தச் சாதாரண விஷயத்துக்கெல்லாம் நாம் பவரை யூஸ் பண்ணி, விஷயத்தைக் கௌறுனம்னா நாம பளே நம்ம தலைலே மண்ணை வாரிக் கொட்டிக்கற கதையாயிடும். அப்புறம் எப்ப எங்கன்னு காத்துக்கிட்டிருக்கிற எதிர்க்கட்சிக்காரனுங்க இதையே சாக்கா வைச்சுக் கறுப்புக் கொடி காட்டறதுலே ஆரம்பிச்சு.. நம்ப மேலே கல்லடிக்கிற லெவலுக்குப் பிரச்னையை வளர்த்துடுவாங்க. அதுமில்லாம இப்ப நம்ம சி.எம். காதுக்குப் போச்சுன்னா அவரு மனுசனாவே இருக்க மாட்டாரு. நமக்கு அந்தத் தொகுதியும் எப்பவுமே இழுபறிதான். இந்த லட்சணத்துலே அங்குள்ள எதிர்க்கட்சிக்காரத் தொண்டனுங்களை எல்லாம் அடிக்கறது கொல்றதுன்னு நீ சொல்றதெல்லாம் ஆகாத காரியம். அதனால இதை அப்படியே விடு. பின்னால் பார்ப்போம்...''

இதுவரை அவர் பேசியது டில்லியின் வெந்த புண்ணில் அவர் ஏற்றிய வேலாயிருந்த போதும் அவன் அனைத்தையும் பொறுமையாகக் கேட்டு விட்டு, ''ரொம்ப நன்றிங்க ஐயா... அப்ப நான் வர்றேன்...'' என்றான்.

''டில்லி நீ வேற எந்த விஷயமா இருந்தாலும் எப்ப வேணாலும் தாராளமா எங்கிட்டே வரலாம்...'' என்று கூறி வழியனுப்பி வைத்தார் அமைச்சர் மகாலிங்கம்.

கீழேயிறங்கிய டில்லி அதே வேகத்தில் வண்டியில் சென்றமர்ந்ததும் டிரைவர் வண்டியை ஸ்டார்ட் செய்து அமைச்சர் வீட்டை விட்டு வெளியேறி, ''ஐயா இப்ப எங்க போவட்டும்?'' என்று வினவ, டில்லி எரிச்சலில் ''சுடுகாட்டுக்கு போ. வேற எங்கடா போவே? வீட்டுக்குப் போடா...'' என்று கத்தி விட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

நீண்ட சிந்தனைக்குப் பின் தன் டிரைவரை நோக்கி, ''ஏண்டா, கட்சி ஆரம்பிக்கறதுக்கு என்னடா அவசியமாத் தேவை?'' என்று கேட்டான்.

டிரைவருக்கு டில்லியின் கேள்விக்கான அர்த்தம் புரியவே சற்று நேரமாகியது. பின் அவன் தெளிவடைந்து, ''ஐயா கட்சி ஆரம்பிக்கறதுன்னா அதுக்கு மொதல்ல நெறையப் பணம் வேணுங்க'' என்றான்.

''துட்டு எல்லாம் இருக்குது. என்னாண்ட நெறயவே இருக்குது. அதைத் தவிர வேற என்ன வேணும்னுதான் இப்ப எனக்குத் தெரியணும்...''

''கட்சின்னு ஆரம்பிக்கணும்னா... மொதல்ல ஒருசில அடிப்படைக் கொள்கைங்களும் என்ன லட்சியத்தை அடையக் கட்சி ஆரம்பிக்கப்படுதுங்கறதைப் பொது மக்களுக்கு...''

டிரைவர் மேலும் பேசுமுன் டில்லி, ''மூடுடா வாயை... ஏதோ கேட்டா ஏற்கெனவே ஏழு கட்சி ஆரம்பிச்சு எழுவது வருசம் ஆட்சியில இருந்துட்டு இப்பப் போனாப் போவுதுன்னு என்னாண்ட டிரைவர் வேலைக்கு வந்த மாதிரி பேசறேயே... உன்னையெல்லாம் ஒரு மனுசனா மதிச்சிக் கேட்டேன் பாரு... அதுக்கு என் புத்தியை ஜோட்டால அடிக்கணும்.. கட்சி ஆரம்பிக்கணும்னா கொள்கை வேணுமாம்...? கட்சி ஆரம்பிக்கணும்னா என்ன வேணும்னு என்னாண்ட கேளு. வொண்ணுமே வேணாம்ப்பா... அயகா.. சோக்கா... தளுப்பா... ஒரு பொண்ணு வோணும். அவ்ளதான்டா! அது என்னாண்ட நெறயவே கீது. பாரு... இந்த வாரத்துக்குள்ள ஒரு கட்சியே ஆரம்பிக்கறேன். அப்பாலே இவனுங்க தயவு எல்லாம் நமக்கு இன்னாத்துக்கு? என்னைத் தேடிக்கினு அவனுங்களை ஓடியாற வெக்கிறேன் பாரு...'' என்று ஆவேசமாகப் பேசினான் டில்லி.

(தொடரும்)

அடுத்த இதழில்...

கலைஞர் ஆட்சி கலைக்கப்படுமா?

— கவர் ஸ்டோரி





இன்றைய குருக்ஷேத்திரங்கள்

இராஜா பாலச்சந்தர்

விடுமுறை நாட்களுக்கே சொந்தமான சோம்பேறித்தனம் ஜெயந்தியின் காலை அலுவல்களுக்குக் குந்தகம் செய்யவில்லை.

வழக்கம்போல குளிர்ந்த நீரில் தலையோடு குளித்து, காலைச் சிற்றுண்டியை முடித்துவிட்டுத் தளர்வாகப் பின்னப்பட்ட கூந்தலோடு ஃபேனுக்குக் கீழே வந்து அமர்ந்து கொண்டாள் ஜெயந்தி. மேஜை மீது ஏற்கெனவே வைத்திருந்த வார இதழை எடுத்துப் புரட்டினாள்.

சினிமாப் பக்கத்தில் ஒரு முன்னணிக் கதாநாயகன் சிரிக்க, சட்டென அவளுக்கு ப்ரேம்குமார் ஞாபகம் வந்தான்.

அவனுக்குக்கூட இதேபோல வசீகரமான சிரிப்புத்தான். அவனது ஹீரோத்தனமான நடை, உடை, பாவனைகளைப் பல முறை ரசித்தவள் ஜெயந்தி. பழகவும் இனிமையானவன் அவன்.

அந்த ப்ரேம்குமாருக்குத் தான் நாளைக்குச் சரியான பதிலைக் கூறியே ஆகவேண்டும் என்பதை நினைக்கையில் மெல்லிய படபடப்பு.

எனவே, இன்று அதைப்பற்றி எப்படியும் அம்மாவிடம் பேசிவிட வேண்டும் என்ற திட்டத்துடன்தான் அமர்ந்திருந்தாள் ஜெயந்தி. பேசுவது கேட்கும் தூரத்தில் அப்பாவும் இருப்பது நல்லது.

சூழ்நிலை ஜெயந்திக்குக் கைகொடுத்தது.

பக்கத்து அறையில் ஏதோ ஆபீஸ் கணக்கைச் சரிபார்த்துக்கொண்டு இருந்தார் அப்பா. ஆக, மதியம் வரை அவர் இடத்தை விட்டு நகரப்போவதில்லை.

புத்தகம் படிக்கும் பாவனையோடு, தாயின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள் ஜெயந்தி. எப்படி லாவகமாகப் பேச்சுத் தருவது என்பது பற்றி மனத்துக்குள் ஒத்திகை பார்த்தாள்.

அடுப்பு வேலையில் மூழ்கியிருந்த அம்மா அதை முடித்துவிட்டு முன்னறைக்கு வர, சோபாவில் அமர்ந்திருக்கும் மகளைக் கண்டாள். "ஏண்டி ஜெயந்தி, துணி துவைக்

கனும்னு சொல்லிட்டு இப்படி புஸ்தகம் படிக்கிறயே? வெயில் அதிகமாகறத்துக்கு முன்ன போ.''

''இரும்மா, இந்தக் கதையை முடிச்சுட்டுப் போறேன்,'' என்ற ஜெயந்தி, கடைக் கண்ணால் தாயைக் கவனித்தாள். ''ஓ...! சூப்பர்ப்!'' என்றாள்.

''ஆமா, படிக்க உட்கார்ந்திட்டா உனக்கு மற்றதெல்லாம் மறந்துடும்.'' — வாழ்ந்து அனுபவித்த அம்மா இப்படி எதற்கெடுத்தாலும் அலுத்துக்கொள்வது சமீபகால குணபேதமாக இருந்தது.

''வெயிட் எ மினிட் மம்மி,'' எனக் குழைந்தாள் ஜெயந்தி.

''என்னடி? எனக்கு வேலையிருக்கு.''

''ஒரு நிமிஷம் இப்படி உட்காரேன்.''

''எதுக்கு?''

''இந்தக் கதையைப் பற்றி உன் அபிப்பிராயத்தைச் சொல்லு பார்க்கலாம்?'' என்று தந்தையின் கவனத்தைக் கவரும் நோக்கத்தோடு உரத்த குரலில் கூறினாள் ஜெயந்தி.

மகளை வினோதமாகப் பார்த்தபடி, அருகே வந்தாள் அம்மா. ''என்னடி கதைங்கற? என் அபிப்பிராயம்கற? எதுக்கு?''

''சும்மாதான். போரடிக்குது.''

''சரி, சீக்கிரம் சொல்லித் தொலை. என்ன கதை?'' ஆர்வம் அற்றவளாய்க் கேட்டாள் அம்மா.

''லவ் ஸ்டோரி.''

''ச்சீ... கர்மம். என்னடி பேச்சு? வெட்கமாயில்லை உனக்கு?'' என முகம் சுளித்தாள் அம்மா. இது அவள் உச்சரிக்காத வார்த்தை. அவளைப் பொறுத்தவரை உச்சரிக்கக்கூடாத வார்த்தையும் ஆகும்.

''சொல்ல வெட்கப்படற அளவுக்கு இது ஒண்ணும் கெட்டவார்த்தை இல்லையேம்மா?'' நாசூக்காகக் கூறினாள் ஜெயந்தி.

''இதெல்லாம் ரகசியமா வச்சுக்க வேண்டிய சமாசாரம்டி.''

''சரி, கதைக்கு வருவோம். சுமதி என்ற பெண்தான் இதுல கதாநாயகி. அவ ஒரு துணிச்சலான காரியம் செய்யறா.''

''என்ன?''

''தன்னோட வேலை செய்யறவனைக் காதலிக்கிறா. ஆனா, அவ வீட்ல அதுக்கு பலத்த எதிர்ப்பு. முடிவுல, சுமதி தான் காதலிச்சவனோடவே....''

''என்ன, ஓடிட்டாளா?''

''இல்லம்மா. குடும்பம் நடத்தற நோக்கத்தோடு தைரியமாப் புறப்பட்டுப் போயிட்றா.''

''அதுக்குப் பேருதாண்டி ஓடறது.''

''இல்லைம்மா,'' என வாய்வரை வந்துவிட்ட வார்த்தையை, வாதத்தைத் தவிர்க்கும் நோக்கத்தோடு விழுங்கினாள் ஜெயந்தி.

''அதுசரி, இந்த சுமதியோட செயல்ல உனக்கு உடன்பாடு உண்டா அம்மா?''

''ஏண்டி இந்தக் கேள்வியெல்லாம்?''

''அட, சும்மாதான்.'' சிரித்து மழுப்பினாள் ஜெயந்தி.

''அப்படி நடந்துக்கறவளை என் மகள்னே நான் சொல்லமாட்டேன். தலையில தண்ணியை ஊத்திக்கிட்டு என் பொண்ணு செத்துட்டதா நினைச்சுக்குவேன். ஏன்னா, நான் அப்படிக் கல்யாணம் பண்ணிக்கலை,'' என்று கூறிய அம்மாவின் குரலில் உணர்ச்சி மேலீட்டால் நடுக்கம் இருந்தது.

தன் நெறிதான் சரி என்ற அம்மாவின் கண்மூடித்தனமான பதிலைக் கேட்டு ஜெயந்திக்கு எரிச்சல்தான் ஏற்பட்டது. இனியும், இந்த விவகாரத்தைக் கிளறுவது அவளின் ஆத்திரத்தை அதிகப்படுத்தலாம் என எண்ணினாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசினாள் ஜெயந்தி.

''அது உன் காலத்துச் சூழ்நிலை அம்மா. இப்ப உலகம் ரொம்பவும் மாறிடுச்சே? குறிப்பா பெண்களின் நிலை அதிகமா உயர்ந்திருக்கு. பெற்றோர் காட்டியவனுக்குக் குனிஞ்சதலையோட கழுத்தை நீட்டிக் காலமெல்லாம் கஷ்டப்படறதுதான் பண்பாடுங்கற கட்டாய நிலை மாறி, இவன் என்னை உயிருக்குயிரா நேசிப்பான்கற புரிந்து கொள்ளுதலோட ஓர் ஆணைத் தன் வாழ்க்கைத்துணையாத் தேர்ந்தெடுக்கற சுதந்திர நிலைதான் சரியான நெறி முறைன்னு ஏற்கப்பட்டு விட்ட காலம் அம்மா இது.''

தீவிரமாகப் பேசிய மகளைக் கலவரமாகப் பார்த்தாள் அம்மா. பயம் கவ்விய விழிகளோடு உள்ளறைப் பக்கம் திரும்பினாள். ''ஏங்க, சீக்கிரமா இங்க வாங்களேன். இந்தப் பொண்ணு திடீர்னு என்னென்னவோ தப்புத் தப்பா உளர்றாளே...''

''கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்,'' என்றபடி அவசரமாக எழுந்து வந்தார் அப்பா. அவர் முகத்திலும் கோபம் கொட்டிக்கிடந்தது. மகளின் பேச்சை வரம்பு மீறியதாக முடிவு செய்த தோரணை தென்பட்டது. ''ஏன் இந்தத் தர்க்கம் ஜெயந்தி? எதையாவது சொல்வதற்கான பீடிகையா இது? காதலாம்... கத்தரிக்காயாம்... நீ எவனையாவது காதலிச்சுத் தொலைச்சுட்டியா?''

''ஐயையோ... என்னங்க சொல்றீங்க நீங்க? நம்ம பொண்ணு சீரழிஞ்சுட்டாளா? ஏண்டி, அப்பா சொல்றது நிஜமா? அப்படி ஏதாகிலும் சம்பவிச்சிருந்தா அந்த அவமானத்தை எங்களால தாங்கிக்கவே முடியாதுடி. வெளிய தலைகாட்ட முடியாம விஷம் குடிச்சுத்தான் செத்துப்போவோம்,'' என வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளாத குறையாகச் சப்தமிட்டாள் அம்மா.

''இல்லம்மா, நான் சும்மா பொழுது போறதுக்காகத்தான் இந்த பேச்சை எடுத்தேன். மற்றபடி, நான் யாரையும் காதலிக்கவுமில்லை; நீங்க விஷம் குடிக்கவேண்டிய அவசியமும் இருக்காது...'' என்று சுரத்தின்றிக் கூறினாள் ஜெயந்தி. அவள் மனம் உடைந்திருந்தது.

''அதானே கேட்டேன். என் மகளாவது, கெட்டுப் போறதாவது? நான் வளர்த்தது நல்ல வளர்ப்பாச்சே,'' எனப் பெருமைப் பட்டுக் கொண்ட அம்மாவைப் பார்க்க ஜெயந்திக்கு வேதனையாகவும், பரிதாப

மாகவும் இருந்தது.

கடற்கரை மணலை அளைந்து கொண்டு இருந்தாள் ஜெயந்தி. மனத்தில் படிந்திருந்த சோகத்தை மறைத்திருந்தாள்.

அவள் அருகே, அவளின் பதிலுக்காக ஆவலோடு காத்திருக்கும் ப்ரேம்குமார், "சொல்லுங்க ஜெயந்தி. எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு. உங்களுக்கும் என்னைப் பிடிச்சிருக்கிறதா ஒத்துக்கறீங்க. அப்புறம் ஏன் இந்த மௌனம்?" என்று கேட்டான்.

"என் பெற்றோருக்குப் பிடிக்கலையே ப்ரேம்," என வாய் திறந்தாள் ஜெயந்தி. கீழுதடு கடித்துக் கடல் நோக்கினாள்.

"எது?"

"காதல்."

"என்ன சொல்றீங்க ஜெயந்தி?"

"காதல் புனிதமானது என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை ப்ரேம். ஒருத்தரையொருத்தர் புரிஞ்சுக்கிட்ட பிறகு இணையற காதல் திருமணத்துலதான் எனக்கும் உடன்பாடு. என் உணர்வுகளுக்கு மதிப்பளிச்சு, எனக்கேற்ற நல்ல துணைவரா நீங்க இருப்பீங்க என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு ப்ரேம்: இருந்தாலும்...."

"தயங்காம சொல்லுங்க ஜெயந்தி."

"காதல்னாலே அதை ஏதோ அசிங்கமான காரியமாவும், அவமானப்படவேண்டிய துர்நடவடிக்கையாவும் கருதறாங்களே பழமையில ஊறிப்போன என் பெற்றோர்? அதுவும், கலப்புத் திருமணம்னா தன்மானம்கற பெயர்ல கயிற்றுல தொங்கக்கூடிய ரகம் அவங்க. இதுதான் என் தயக்கத்துக்கான ஒரே — ஆனால் பிரம்மாண்டமான காரணம்."

"அப்ப, உங்க முடிவு என்னங்கறதை நான் தெரிஞ்சுக்கலாமா ஜெயந்தி?" கேட்டவனுடன் ஏமாற்றம் சிநேகித்திருந்தது.

"என் பெற்றோருக்கு நான் மகள் என்பதுதான் முதல் உண்மை. அந்த ஸ்தானத்துக் கடமையை நிறைவேற்ற நான் முயற்சி செய்யவிரும்பறேன். இயற்கையான காதலை இழுக்கா நினைக்கிற அவங்களின் மனோபாவத்தை என்னால மாற்ற முடியும்னு திடமா நம்பறேன். அதுவரைக்கும் நீங்க எனக்காகப் பொறுத்திருக்க முடியும்னா, நான் ஓர் அதிஷ்டசாலிதான் ப்ரேம்."

"உங்க முயற்சி கடைசிவரை பலிக்கலைன்னா?"

சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள் ஜெயந்தி. பிறகு, ஒரு முடிவுக்கு வந்தவளாகப் புன்னகை செய்தாள். "தங்கள் காலத்து வேண்டாத பழக்கங்களைப் பாதுகாக்கற பொறுப்பு தங்களுக்கு இருக்கறதா என் பெற்றோர் கர்வத்தோட நினைக்கிறபட்சத்துல, என் காலத்துச் சமுதாய மறுமலர்ச்சிகளைத் துணிச்சலோடு ஏற்று ஆதரிக்க வேண்டிய என் கடமையை நான் நிச்சயமா நிறைவேற்றுவேன் ப்ரேம்..."

கூறியவளின் வார்த்தைகளில் கூர்மையும், உறுதியும் அபரிமிதமாகக் காணப்பட்டன.



"மன்னர் இன்னிக்குப் புழுங்கித் தவிக்கிறாரே... ஏன்...?"

"ஐஸ் வைக்கிற புலவர்கள் எல்லாரும் லீவ்ல போயிட்டாங்களாம்!"

— பி. ஜி. பி. இசக்கி.



"என் கணவர் சில சமயம் அர்த்தமில்லாத காரியமெல்லாம் செய்துக்கிட்டிருக்கார் டாக்டர்..."

"உதாரணமா...?"

"டிக்ஷ்னரியிலே உள்ள ஒரு வார்த்தைக்கு... பைபிளிலே அர்த்தம் பார்த்துக்கிட்டிருக்கார்...!"

— பெ. கலாசாமி.

"எங்க அண்ணனை நினைச்சாலே பொறாமையா இருக்குடா...!"

"என்னடா விஷயம்?"

"ப்ராகிரஸ் — ரிப்போர்ட் வர்ற சமயமெல்லாம் அவனுக்கு ஜுரம் வந்து... அடி வாங்காமல் தப்பிச்சுடறான்டா!"

— பெ. கலாசாமி.



ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு சேவா டிரஸ்ட் (Regd)
32/62, தெற்கு மாடவீதி, சென்னை — 600 019.

ஓர் வேண்டுகோள்!

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் ஆக்ஞைப்படி அவர்களின் அனுக்கிரகத்துடன் அவர்கள் முன்னிலையில் துவக்கப்பட்ட ஷெ டிரஸ்டின் ஆதரவில் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஜன்ம ஸ்தலமான விழுப்புரத்தில் உள்ள வேதபாட சாலைக்குத் தற்சமயம் பொருளுதவி செய்யப்பட்டு வருகிறது. இதுபோன்று ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஜன்மஸ்தலமான இருள்நீக்கியில் நடைபெற்று வரும் வேதபாட சாலைக்கு நிதியுதவி செய்யவும், ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஜன்மஸ்தலமான தண்டலத்தில் புதிதாக ஒரு வேதபாடசாலை நிறுவவும் ஷெ டிரஸ்ட் முயன்று வருகிறது.

இவற்றிற்காக ரூ. 30 லக்ஷம் நிதி திரட்ட ஷெ டிரஸ்ட் சார்பில் திட்டமிடப்பட்டுள்ளது. ஆஸ்திக அன்பர்கள் இக்கைங்கர்யங்களுக்குத் தாராளமாக நிதியுதவி செய்து உதவுவதன் மூலம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்களாகும்படி கோருகிறோம்.

— டிரஸ்டிகள்.

குறிப்பு: ஷெ டிரஸ்டிற்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரியிலிருந்து விதிவிலக்கு உண்டு.

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — VII

ராஜ்மோகன் காந்தி

4

நேரு காலமாகி விட்டார்! விடுதலைப் போராட்ட வீரர்களாக ஸி.ஆரும் அவரும் எவ்வளவு நெருங்கியிருந்தார்கள்! சுதந்திர இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் நெருங்கிய சகாக்களாக எவ்வளவு அந்நியோன்னியமாக இயங்கினார்கள்! அதே நேரத்தில் எத்தனை கருத்து மாறுபட்டும் பேசியிருக்கிறார்கள்! 1930களின் பிற்பகுதியில் காங்கிரஸ் ஆட்சி அமைப்பதா கூடாதா என்பதில், 1940களின் தொடக்கத்தில் பாகிஸ்தான் பிரிவினை விஷயத்தில், இன்னும் எத்தனையோ பல அம்சங்களில் அவர்களிடையே கருத்து மாறுபாடுகள் நிலவின. 'இவரா, அவரா' என்று தீர்மானிக்க வேண்டிய கட்டங்கள் கூட இருந்ததுண்டு. இல்லா விட்டால் மகாத்மா எதற்காக, ''ஜவாஹர்லால்தான் என் வாரிசு; ராஜாஜி அல்ல'' என்று கூறியிருக்க வேண்டும்? 1950களின் மத்தியில் அவர்கள் அரசியல் எதிரிகளாகவே செயல்பட்டனர். நேரு இறப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் அவர்களிடையே கடைசியாகக் கடிதப் பரிமாற்றம் நடந்தது. உச்சவரம்புக்கு அதிகமாக உள்ள நிலங்களை நஷ்டஈடு தராமலே அரசு எடுத்துக் கொள்வதை நியாயப்படுத்தக் கொண்டு வரப்பட்ட அரசியல் சாசனத் திருத்த மசோதா தவறானது என்று ஸி.ஆர். எழுதி, அதற்கு நேருவிடமிருந்து பதிலும் பெற்றிருந்தார். இருவருமே வழக்கம் போல, ''இப்படிக்கு, உங்கள் பாசம் மிகுந்த'' என்று கடிதத்தை முடித்திருந்தனர் என்றாலும் இந்தக் கடிதங்



• ''பண்புடன் நிராகரிக்கப்படும் அறிவுரை!''

நேரு: நேசம் மிக்க எதிரி!


களால் அவர்களிடையே இருந்த கருத்து வேற்றுமையைக் குறைத்து விட முடியவில்லை.

விமர்சனத்தை விரும்பாதவர், ஆனால் ஜனநாயகத்தை விரும்பியவர் நேரு. இந்திய அரங்கில் ஒளி சிந்திய, ஜாஜ்வல்யமான நட்சத்திரம். சாமானியர்கள் முதல் முக்கிய புள்ளிகள் வரை அனைவராலும் விரும்பப்பட்டவர். எல்லாவற்றுக்கும் மேலாகப் பண்பாடு அறிந்த தலைவர். அவர் மரணத்தையொட்டி ஸி.ஆரின் இரங்கல் செய்தியைப் பெறப் பத்திரிகை நிருபர்கள் துடியாக இருந்தனர். ஸி.ஆரால் பேச முடியவில்லை. எழுதித் தந்தார்.

''என்னை விடப் பதினோரு வருடங்கள் சிறியவர்; தேசத்துக்கு என்னை விடப் பதினோரு மடங்கு முக்கியமானவர்; தேச மக்களின் அன்பைப் பதினோராயிரம் மடங்கு அதிகமாகப் பெற்றவர், ஸ்ரீ நேரு. திடீரென்று நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். டில்லியிலிருந்து வந்த சோகச் செய்தியைக் கேட்க நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்; அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு வாழ்கிறேன்! அதிர்ச்சி காரணமாகச் சிதறியுள்ள என்னுடைய சுய அறிவை நான் இன்னும் முழுமையாகத் திரும்பப் பெறவில்லை. பொது வாழ்வில் அவர் கொள்கைகளில் தவறுகள் இருப்பதாகக் கருதி நான் கடந்த பத்து வருடங்

• ''தேசத்துக்கு என்னை விட முக்கியமானவர்''





* ''பூவுலகில் ஒரு தேவதை''

களாக அவருடன் சண்டை போட்டு வந்திருக்கிறேன். ஆனால் இந்தத் தவறுகளைத் திருத்தி அமைக்க நேரு ஒருவராலேயே முடியும் என்பதையும் நான் ஆரம்பத்திலிருந்தே உணர்ந்து வந்திருக்கிறேன். வேறு யாருக்கும் அந்தத் துணிவு வராது. இப்போது அவர் போய் விட்டார். எனது போராட்டத்தில் முன்னிலும் என்னைப் பலவீனப்படுத்தி விட்டுச் சென்று விட்டார். எங்கள் சண்டை ஒருபுறமிருக்கட்டும். ஓர் அன்புமிக்க நண்பர் போய் விட்டார். நம் அனைவரிலும் மிக மிகப் பண்பட்ட மனிதரான ஒருவர் மறைந்து விட்டார். கடவுள் மக்களைக் காப்பாராக.''

''என் தகப்பனாருக்கும் ராஜாஜிக்கும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் ஈர்த்த சில அம்சங்கள் உண்டு'' என்று இந்திரா காந்தி கூறியிருக்கிறார். ''அவர்கள் தீர்க்கதரிசிகள்; இன்றைக்கு நடக்க வேண்டியவை பற்றி மட்டும் சிந்திப்பவர்கள் அல்ல. அவர்கள் தீவிர தேசியவாதிகள்; அதே நேரத்தில் உலகளாவிய பார்வை உடையவர்கள். ஒவ்வொரு செயலிலும் தார்மீக ஒழுக்கம் இருக்க வேண்டும் என்று ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இருவருக்கும் பலதரப்பட்ட விஷயங்களில் ஈடுபாடு உண்டு. இலக்கியம், தத்துவம், அரசியல் இலக்கணம் ஆகியவற்றை அவர்கள் இருவருமே தெளிந்து அறிந்திருந்தார்கள். ஆனால் இருவருக்குமிடையே வேறு பல அம்சங்களில் மாறுபாடுகள் உண்டு என்பதைச் சொல்லத் தேவையில்லை.''

நேரு இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்னர் ஸி.ஆர். மற்றொரு நண்பரையும் இழந்திருந்தார். அறிவாளியான, மிருதுத் தன்மைமிக்க ராஜேந்திர பிரசாத். ஜனாதிபதி பதவியிலிருந்து அதற்கு ஓராண்டு முன்னர் ஓய்வு பெற்றிருந்தார் அவர். ராஜாஜியின் சுதந்திரக் கட்சி இயக்கம் அவரது பரிவு கலந்த, வியப்புமிக்க, பாராட்டைப் பெற்றிருந்தது. 1962 இறுதியில், ''மக்களின் ஆதரவைச் சுதந்திரக் கட்சி பெறுமானால், காங்கிரஸ் திட்டத்துக்கு ஒரு மாற்றாக அமையக்கூடிய வாய்ப்பு அதற்கு உள்ளது'' என்று பகிரங்கமாகவே ராஜேந்திர பிரசாத் பேசியிருந்தார்.

''நம்புதற்குரிய நண்பர், நல்லிதயம் கொண்டவர், பூவுலகில் ஒரு தேவதை'' என்று ராஜாஜி தமது இரங்கல் செய்தியில் ராஜன் பாபுவை வர்ணித்திருந்தார். ''எந்தக் கருத்து மாறுபாடும் எங்களிடையே பரஸ்பரம் இருந்த அன்பையும் தோழமையையும் குலைத்து விடவேயில்லை.''

மகாத்மாவின் பிரதம தளபதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, நேரு, ''நாங்கள் ஐவர்'' என்றுதான் எப்போதுமே சொல்வார். பட்டேல், பிரசாத், ஆசாத், ஸி.ஆர்., நேரு ஆகியோர்தான் அந்த ஐவர். ஸி.ஆரைத் தவிர மற்ற நால்வரும் இப்போது காலமாகி விட்டிருந்தனர். ஸி.ஆரின் உலகம் அடியோடு மாறி விட்டது.

எண்பத்தைந்து வயதில் ஸி.ஆர். முன்னெப்போதையும் விட சுறுசுறுப்பாக இருந்தார். இன்றைக்கும் யாருடைய உதவியும் இன்றி அவரால் முதல் வகுப்பு ரயில் பெட்டியில் 'அப்பர் பர்த்'தில் ஏறிப் படுக்க முடியும்! 'லோயர் பர்த்' அவருக்கு இல்லை என்று யாருமே சொல்ல மாட்டார்கள்தான். ஆனால் சுதந்திரக் கட்சி ஊழியர்கள், மிகுந்த ஆர்வத்துடனும் ஆவலுடனும் ஸ்டேஷன் பிளாட்ஃபாரங்களில் குழுமி விடுவார்கள். ஜன்னல் அருகே படுத்திருந்தால் அவர்களது அன்புக்குப் பணிந்து எழுந்திருக்கத்தான் வேண்டும். எல்லாவற்றிலும் ஒரு நியதியைக் கடைப்பிடித்தது போல் உடலுக்குத் தேவையான ஓய்வு தருவதிலும் குறியாக இருந்தார் ஸி.ஆர். இதுதான் 'அப்பர் பர்த்'தை அவர் விரும்பியதற்குக் காரணம்!

சாமர்த்தியமும் யாரையும் நோகச் செய்யாத சுபாவமும், உருவில் சிறியவரான லால்பகதூர் சாஸ்திரியை நேருவுக்குப் பிறகு பிரதமராக்கியிருந்தது. நேருவைப் போலவே இவரும் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். சாஸ்திரிக்குக் கடுமையான சொற்கள் தெரிந்திருக்கலாம்; ஆனால் அவற்றை அவர் என்றுமே பிரயோகித்தது கிடையாது! அவருக்குத் தமது அறிவுரைகளை சுயராஜ்யா கட்டுரைகளாக எழுதிய ஸி.ஆர்., கட்டுரையின் நகலை முன்கூட்டியே அவருக்கு அனுப்பி வைப்பார். அபூர்வமாகச் சில சமயம் லால்பகதூர் அந்த அறிவுரைகளை ஏற்று நடந்து கொண்டதும் உண்டு. ஆனால் பெரும்பாலான தருணங்களில் அறிவுரை நிராகரிக்கப்படவே செய்யும். ஆனால் மிகவும் பணிவான முறையில் நயம்பட ஸி.ஆருக்குக் கடிதம் எழுதித்தான் நிராகரிப்பார்!

(தொடரும்)

பரிசு பெற்ற சிறுகதைச் சிற்பிகள்!

இவ்வாண்டு அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ''அரும்பு'' என்ற சிறுகதையைப் படித்ததும் கண்ணில் நீர் திரையிடாத வாசகரே இல்லை என்பதைக் கல்கி காரியாலயத்துக்கு வந்த ஏராளமான கடிதங்கள் நிரூபித்தன. கதையைப் பாராட்டிய அனைவரும் கதாசிரியரை மட்டுமின்றி, சரியான கதையைத் தேர்ந்தெடுத்து, முதல் பரிசு அளித்து, வாசகருக்கு வழங்கிய நடுவர் குழுவையும் வாழ்த்தியிருந்தனர். மேலாண்மை பொன்னுச்சாமி இரண்டாவது தடவையாகக் கல்கி சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கிறார்! காமராஜர் மாவட்டத்தின் கடைக் கோடி கிராமமான மேலாண் மறை நாட்டில் பிறந்து வளர்ந்தவர். படிப்பு, ஐந்தாம் வகுப்பு வரைதான்! சிறிய பலசரக்குக் கடையும் விவசாயமும் வாழ்க்கை நடத்த உதவுகின்றன. இளம் வயதிலேயே வாழ்க்கைப் போராட்டம் நடத்த வேண்டிய நிலையில், இவரது கவனம் மார்க்சிஸ சித்தாந்தங்களில் ஈர்க்கப்பட்டது. இவரது 'சிபிகள்' சிறுகதைத் தொகுப்பு பாட நூலாக அமைந்திருப்பதும் இவரது சிறுகதைகள் எம்.ஃபில்லுக்காக ஆராயப்படுவதும் 'படிக்காத மேதை'க்குக் கிடைத்த பாராட்டுக்கள்.

இரண்டாவது பரிசு ஓர் அறிமுக எழுத்தாளருக்குக் கிடைத்திருக்கிறது என்பது சிறுகதைகள் எழுதுகிற, எழுத விழைகிற அனைவருக்குமே நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். பரிசுக்கு முற்றிலும் தகுதி உடைய சிறுகதையை எழுதியிருக்கிறார் முருகேஷ் என்பதை சிறுகதை மட்டுமல்ல, அதைப் பாராட்டி வந்த ஏராளமான கடிதங்களும் நிரூபிக்கின்றன. ''உயிர்க் குருவிகள்'' என்ற உணர்ச்சிமயமான சிறுகதையை எழுதிய முருகேஷுக்குக் கை கொடுத்திருப்பது ஏராளமான திருப்பங்களுடன் கூடிய அவரது வாழ்க்கை அனுபவங்களே! யார் கண்டது, இவை எதிர் காலத்தில் ஓர் அருமையான நாவலாகக் கூட அவர் எழுத்தாற்றலால் உருவாகக்கூடும்!

முருகேஷுக்கு நேர் மாறுதல் பட்டம்மாள். அன்பான மனிதர்கள், உறவினர்கள் தமது எண்ணங்களை மதிக்கும் கணவர் என்ற இந்த அழகிய சிறு வட்டத்திலிருந்து வெளிவராத (வெளிவர விரும்பாத) வாழ்க்கை நடத்துகிறவர். இவரது வாழ்க்கை அமைதியாகச் சென்றாலும் வெளி உலகையும் அதில் அவ்வப்போது வீசுகிற புயல்களையும் உன்னிப்பாகக் கவனிக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார். இல்லாது போனால் ''சபதம் செய்யாத பாஞ்சாலிகள்'' போன்றதொரு அருமையான சிறுகதையை எவ்வாறு எழுதியிருக்க முடியும்? இன்று மூன்றாவது பரிசு பெற்றிருந்தாலும் பட்டம்மாள் ஏற்கெனவே வேறு பல பத்திரிகைகளில் முதல் பரிசுகள் பெற்றவர்தாம். ஏராளமாக எழுதிக் குவித்திருக்கிறார் என்றாலும் கல்கிக்கு எழுதிய முதல் கதை இதுதான். அது பரிசுக் கதையாகவும் அமைந்து விட்டது!

நாற்பது சிறுகதைகள் பிரசுரமாகக் கண்டிருக்கும் முப்பத்திரண்டு வயது இளைஞர் சுப்ரபாரதி மணியன். ஆந்திராவில் பிரதமர் விஜயம் செய்த போது நாளிதழ்களில் வெளியான ஒரு செய்தியை அடிப்படையாகக் கொண்டு, நிலைக்களனைச் சாமர்த்தியமாகத் தமிழகத்துக்கு மாற்றி, ''வருகை'' என்ற தலைப்பில் அற்புதமான ஓர் அரசியல் சிறு கதையை வடித்து விட்டார். இவரது இரு நாவல்களும் பல சிறுகதைகளும் நூல் வடிவம் பெற்றுள்ளன. ஹைதராபாத்தில் வசிக்கும் இவர், வாசகர் வட்டம் நிறுவியும், 'கனவு' என்ற பெயரில் வெளிவரும் கவிதை ஏட்டின் ஆசிரியர் பொறுப்பு ஏற்றும் தமிழ்ப் பணியாற்றி வருகிறார்.

பரிசு பெற்ற சிறுகதைச் சிற்பிகளின் கலைத்திறன் மேலும் சிறக்கக் கல்கி வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

• மேலாண்மை பொன்னுச்சாமி





முருகேஷ்



• பட்டம்மாள்




• சுப்ரபாரதி மணியன்

'சந்தி சிரித்தல்' என்றால் என்ன?

நீங்கள் கேட்டவை — தராசு



ரௌத்திரம் கொண்டார்!



'முட்டைக் கமிஷன்'



கேள்வி — பதில்



சினிமாவில் நடிப்பாரா?



குற்றவாளியாக்க முயற்சி

* எம். சரவணகுமார், தஞ்சாவூர்.

? 'ரௌத்திரம் கொள்' என்ற கூற்றுக்கு அரசியல் உதாரணம் ஒன்று கூறுங்களேன்?

! ஆந்திர அரசு வெள்ள நிவாரணப் பணிக்கு மத்திய அரசின் உதவியை மிகவும் காலதாமதமாகக் கோரியதாகக் குற்றம் சாட்டுகிறார் பிரதமர். பக்கத்திலேயே முதல்வரை வைத்துக் கொண்டு அவர் இவ்வாறு பேச, பிரதமரின் கூற்று தவறு என்று சுட்டிக்காட்ட சான்றுகளை எடுத்துரைக்க முற்படுகிறார் முதல்வர் என்.டி.ஆர். உடனே ஆளுனர் ஜாடை காட்ட, பிரதமருடன் வந்த மத்திய அரசு அதிகாரி மைக்கை எடுத்துக் கொண்டு, 'இது கூட்டு பேட்டியல்ல; கேள்விகள் பிரதமருக்கு மட்டுமே' என்று குறுக்கிட்டுக் கூறுகிறார். இதைக் கேட்டதும் முகம் சிவக்கிறது என்.டி.ஆருக்கு. தாம் அவமானப்படுத்தப் பட்டதாகக் கருதுகிறார். இதன் பின்னர் அவர் கலந்து கொள்ளும் கூட்டங்களில் அவர் பேச்சு ''ரௌத்திரம் கொள்'' என்பதற்கு ஏற்பத்தான் அமைந்திருக்கிறது.

* கே. வேல்சாமி, மதுரை — 1.

? டீ. வி. யில் மகாபாரதம் பார்ப்பதுண்டா?

! பார்ப்பது மட்டுமல்ல; 'லேட்டஸ்ட் துகிலுரிதல் கட்டத்தை வீடியோ ரைட்ஸ் வாங்கித் தேர்தல் பிரசாரத்துக்கு ஜெயலலிதா பயன்படுத்திக் கொள்ளலாமே' என்று குருட்டு யோசனை செய்வதும் உண்டு!

* எஸ். புவனேசுவரி, தாத்தையங்கார் பேட்டை.

? திருச்சி மாவட்டத்தில் ஓர் ஊருக்குப் பள்ளி ஆசிரியை வேலைக்கான நேர்முகத் தேர்வுக்குச் சென்றேன். 'ரூ. 20,000 டொனேஷனும் கூடவே ராஜினாமாக் கடிதமும் எழுதிக் கொடுத்தால் வேலை கிடைக்கும்' என்றார்கள்! என்னைப்போன்ற ஏழைப் பெண்ணுக்கு இது எப்படிச் சாத்தியமாகும்? எனக்கு எப்போது வேலை கிடைக்கும்?

! இதைப் படித்து விட்டு அமைச்சரவை விழிப்புற்றுச் செயல்பட்டால் உடனே வேலை கிடைக்கும். 'தி.மு.க. ஆட்சி வந்ததுமே எல்லாம் சரியாகி விட்டது' என்ற மிதப்பில் அமைச்சரவை இருந்தால் பெண்களுக்கென்று நூறு சதவிகிதம் இடம் ஒதுக்கி சட்டம் இயற்றினாலும் உங்களுக்கு வேலை கிடைக்காது!

* கு. நாகராஜன், குருசாமிபாளையம்.

? 'தி. மு. க. ஆட்சி முடியும் போது முட்டைக்கென்றே தனிக் கமிஷன் அமைக்க வேண்டியிருக்கும்' எனக்காளிமுத்துகூறியுள்ளாரே?

! அது எதிர்கால ஜோஸ்யம்; ராபின் மெய்ன் வழக்கு நடப்பது நிகழ்கால நிச்சயம்.

* சாஸ்திரி வெங்கடேஷ், கோழிக்கோடு.

? 'இந்தியா டுடே'யின் தமிழ்ப் பதிப்பு தொடங்கப்பட்டிருப்பது பற்றி...?

! ஆங்கில இதழின் மொழிபெயர்ப்பாக மட்டும் இல்லாமல் மாநிலத்துக்கு முக்கியத்துவம் தருகிற முறையில் சில செய்திக் கட்டுரைகள் இங்கேயே தயாரிக்கப்பட்டுப் பிரசுரமாவது வரவேற்புக்குரியது. உதாரணமாக முதல் இதழில் இடம் பெற்ற எம். ஜி. ஆரின் உயில் பற்றிய கட்டுரையை, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கில 'இந்தியா டுடே'யில் வெளியிட, டில்லி தலைமையகம் யோசித்து வருகிறது!

* ஏ. ஜி. கல்யாணசுந்தரம், கோவை.

? கேள்வி பதில் பகுதி தமிழ்வாணன் அவர்களால்தான் பிரபலமானதாக நான் நினைக்கிறேன்; சரியா?

! பாபுராவ் பட்டேலை மறந்து விட்டால் நீங்கள் எண்ணுவது சரி.

* நல்லான் இராமசாமி, குருவிக்காரன் வலசு.

? ஒரு காலத்தில் பெருமையாகப் பேசப்பட்ட புதுக் கவிதை இன்று மரியாதையற்றுப் போய்க் கிடப்பதாகத் தோன்றுகிறதே?

! புதுக் கவிதை என்பதால் ஒன்று மரியாதைக்கு உரியதாக ஆகி விடாது. மரபுக் கவிதை என்பதால் ஒன்று மரியாதை இழந்து விடவும் செய்யாது. சொல்லப்படும் கருத்தும் அது கூறப்படுகிற விதமும் நம்மை நிமிர்ந்து உட்காரச் செய்தால் அந்தக் கவிதை நமது மரியாதையைப் பெற்றதாகி விடுகிறது.

* எம். பரந்தாமன், ஆம்பூர்.

? தமிழ்நாட்டில் கல்லூரிக் கல்வியின் தரம் தாழ்ந்து போகிறதே...?'

! ஒரு பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்ஷனுக்குப் போன அதிகாரி பையன்களுக்கு அறிவுரை வழங்கினார்: ''ஏழாவது படிக்கும் போது எழுநூறு திருக்குறளாவது தெரிந்திருக்க வேண்டும்; எஸ்.எஸ்.எல்.சி. வரும் போது ஆயிரம்; பிளஸ்டூ முடிக்கும் போது இரண்டாயிரம்!'' இதை வெறும் ஜோக்காக மட்டும் என்னால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

* திருமதி உஷாகிருஷ்ணமூர்த்தி, சென்னை.

? பத்மா சுப்பிரமணியம், யாமினி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சினிமாவில் ஏன் நடிப்பதில்லை?

! இனிமேலா! ஐயோடா!

* பி. வி. சீனிவாசன், சென்னை — 28.

? இப்போது தினசரிப் பத்திரிகைகளில் 'சந்தி சிரிக்கும் செய்திகளே அதிகம் வருகிறது' என்கிறார்களே, 'சந்தி சிரித்தல்' என்றால் என்ன?

! பஸ்ஸுக்காக மைலாப்பூர் டாங்க் கருகில் காத்திருக்கிறீர்கள். பொழுது போகணுமே? நண்பரிடம் பேச்சுக் கொடுக்கிறீர்கள். ஸி.பி.ஐ. தலைமை அதிகாரி காத்ரே மகனுக்கும் ரிலையன்ஸ் நிறுவனத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றி மிகவும் கஷ்டப்பட்டு உளவறிந்து ஆதாரங்களுடன் வெளியிட்ட எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிருபர் மாணிக்கவாரின் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து பேசுகிறீர்கள். அப்போது நண்பர், ''இதெல்லாம் ஒரு பெரிய உளவு வேலையா? இந்த நாட்டில் நூறு சதம் யோக்கியமான அதிகாரி அல்லது அரசியல்வாதி ஒருவரேனும் இருப்பதாக உளவறிந்து எந்த ஒரு நிருபரேனும் ஆதாரங்களுடன் நிரூபித்தால் அதுதான் அகடிதகடனா சாமர்த்தியம்!'' என்று சொல்கிறார். அதைக் கேட்டு நீங்கள் குபீரென்று சிரிப்பது இருக்கிறதே, அதுதான் நாட்டில் நடக்கும் ஆட்சி பற்றி 'சந்தி சிரிப்பது' என்பதாகும்.

* ஆர்.-கே. லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.

? தாமரைக்கனிக்கு ஒரு வருட சிறைத் தண்டனை கொடுத்திருப்பது குறித்து...?

! கோர்ட்டுக்குப் போனால் இன்னும் அதிகமாகக் கிடைத்து விடுமே என்று கலைஞர் கருணை காட்டியிருக்கிறாரோ என்னவோ!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? தேச விரோதக் குற்றவாளியாய் வி. பி. சிங்கை அடையாளம் காட்டும் முயற்சியில் இ. காங்கிரஸ் காட்டும் தீவிரம், தேர்தல் முடிவு குறித்த அச்சத்தின் பிரதிபலிப்புத் தானே?

! வேறென்ன? லேட்டஸ்ட் குற்றச்சாட்டு, அவர் மந்திரியாக இருந்த போது அயல் நாட்டு வங்கியில் பணத்தைக் குவித்தார் என்பது. பணம் கிடக்கட்டும், அகவுண்ட் இருக்கட்டும், அந்தப் பெயரில் ஒரு வங்கியே இல்லை என்பது தெரிய வந்திருக்கிறது!

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

எஸ். புவனேசுவரி,
26, சிவன் கோவில் தெரு,
தாத்தையங்கார் பேட்டை,
— 621 214, முசிறி (வட்டம்).

வட்டமேஜை

"வயிற்றெரிச்சலைக் கிளப்ப வேண்டாம்!"

* கிரிக்கெட் வீரர்களுக்கு விதித்த தண்டனை பற்றிய தலையங்கம் படித்தேன். கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு அவசரப்பட்டு எடுத்த முடிவினால் நஷ்டம் போர்டுக்கு மட்டுமல்ல; இந்திய நாட்டுக்கேதான். முன்பு அமர்நாத், பின்னி போன்றவர்கள் இல்லாததால் வெஸ்ட் இண்டீஸிடம் பெரும் தோல்வியடைந்தோம். இந்த நேரத்தில் இந்திய அணியில் ஸ்ரீகாந்த் தவிர ஏனையோர் புதுமுகங்களே. இவர்கள் எப்படி ஆடி ஜெயிப்பார்கள்? கிரிக்கெட் போர்டு தன் முடிவை மீண்டும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

வேலூர். லட்சுமி நரசிம்மன்.

* தலையங்கத்தில் கூறியுள்ள கருத்துக்களை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மேற்கிந்தியத் தீவுச் சுற்றுப் பயணம் செய்து, அதில் மிக மோசமான தோல்வியைப் பெற்ற பிறகு இந்திய கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் அனுமதியின்றி அமெரிக்கா, கனடா நாடுகளுக்கு விளையாடச் சென்றது தப்புத்தான். விளையாட்டு வீரர்களுக்குப் பொறுப்புணர்வு, கட்டுப்பாடு இவை அவசியம் தேவை. இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறைக்கு உட்பட்டு விளையாடுபவர்கள் — தாங்கள் எப்படியும் நடந்து கொள்வோம் என்றால் எப்படி? இந்தத் தண்டனை இவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்.

சென்னை — 80. எஸ். சங்கரநாராயணன்.

* பணத்தை அதிகமாகக் கேட்கும் பள்ளியை மிகச் சிறந்த பள்ளி என நினைத்து, அப்பள்ளியில் தம் பிள்ளைகளைச் சேர்த்தால் நன்றாகப் படிப்பார்கள் என்கிற எண்ணத்தில் சேர்க்கும் எண்ணற்ற பெற்றோர்களுக்குத் திரிவேணி அகாடமி கல்வி நிறுவனம் கற்றுத் தருவது சரியான பாடமாகும்!

லால்குடி. எம். இராஜேந்திரன்.

* அன்றாட அரசியல், நாட்டு நடப்புக்களில் அக்கறையுடன் யோசனை கூறும் சி. சுப்ரமணியம் போன்றவர்கள் திரிவேணி அகாடமியின் நிலை மாற அக்கறையுடன் முயற்சி செய்தால் பயனுள்ளதாக இருக்கும். இனியாவது செய்வார்கள் என்று நம்புவோம்.

வேலூர் — 13. கே. ஆர். தேவேந்திரன்.



* கடந்த 20.8.89 கல்கியில் வெளியான டீ.வி. — வீடியோ பக்கங்களில், "யதார்த்தமில்லையே" என்ற தலைப்பில் வெளியாகியிருந்த அனுபவம், ஆகஸ்ட் மாத 'ராஜம்' இதழில் ஏற்கெனவே வெளியாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி — 16. ஜானகி மைந்தன்

* ஒரு கிழவியைக் கூட வாசகர்களின் மனத்தில் இடம் பெறச் செய்து விட முடியும் என்பதை "வருகை" சிறுகதை மூலம் நிரூபித்துள்ள சுப்ர. பாரதி மணியனுக்கு வாசகர்கள் சார்பில் பாராட்டுக்கள்!

கடலூர் — 2. ஆர். வேணுமணி.

* டீ.வி. கதாநாயகன் ராஜீவ் காந்தியை, நீங்கள் வெளியிட்ட (அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு —!) சிறுகதையிலும் கதாநாயகனாக ஆக்கி ஏன் எங்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறீர்கள்?

சிதம்பரம். தங்க. குஞ்சிபாதம்.

* "கருணையில் தொடங்கி" — கட்டுரை சமீப காலங்களில் வெளிவந்த கட்டுரைகளில் மிக அருமை. அதை விட இக்கட்டுரை என்னைப் போன்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒரு புதுத் தெம்பு!

குமராட்சி. எம். பிரபு.

* மகளிர் சமத்துவத்துக்கும் விளக்கு பூஜைக்கும் தொடர்பு உண்டு என்பதை மிகத் தெளிவாக, எல்லோரும் புரிந்து கொள்ளும்படி விளக்கி விட்டீர்கள்.

சீர்காழி. ஜெயலக்ஷ்மி ஷண்முகம்.

* வாரா வாரம் நீர் போடும் கார்டூன்களைப் பார்த்துச் சிரித்துச் சிரித்து, எங்கள் வயிறு புண்ணாகி விடுகிறதய்யா! எங்கள் வயிற்றைப் புண்ணாக்குவதில் அப்படி உமக்கு என்ன சந்தோஷம்!!

கடலூர் — 1. எம். ரவிச்சந்திரன்.

* "பதறின்டு வருவான்" — மனத்தைத் தொட்ட சிறுகதை. அத்தையின் வார்த்தைகள் வாழ்நாள் முழுதும் மூர்த்தியைச் சங்கடப்படுத்திக் கொண்டே இருக்கும். இறந்த அத்தைக்காக நானும் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டேன்.

இராமநாதபுரம். எஸ். லதா.

* சாதாரணப் பொதுக் கூட்டத்திற்கே இருபது கார்களுடன் பவனி வரும் இன்றைய அரசியல் வாதிகளை நினைக்கும் போது, ஒரே காரில் மாற்றுக் கட்சி வேட்பாளருடன் சென்று தேர்தல் பிரசாரம் செய்த மறைந்த கே.வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் ஓர் அதிசயிக்கத்தக்க பிறவிதான்!

திருவனந்தபுரம் — 8. எஸ். அலமேலு.

* இவ் வாரம் வெளியான மூன்று சிறுகதைகளும் முக்கனிகளாகத் தித்தித்தன. பாராட்டுக்கள் பல!!

திட்டக்குடி. அ. சரவணராசன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 431543, 434157; 434190. ஆசிரியர் குழு அலுவலகம்: 434145.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 150/; விமானத் தபால் ரூ. 350/-.

அஷ்டலஷ்மி - 6



வெற்றி கொண்டாடி மகிழ்வீர்— சிட்டி யூனியன் வங்கியுடன்!

வெற்றியினும் மேலான வெற்றி இல்லை. சிட்டி யூனியன் வங்கியின் வெற்றி வரலாறுகளுக்குக் குறைவே இல்லை!

தனிப்பட்டவர், சிறு தொழில் புரிவோர், மற்றும் தொழிலதிபர்கள் சிட்டி யூனியன் வங்கியின் உதவியால் வெற்றி மாலை சூடியவர் எத்தனை எத்தனையோ பேர்!

உங்கள் எதிர்காலத்தை இன்றே திட்டமிடுங்கள்.

தேர்ந்தெடுக்கப் பல திட்டங்கள்:

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டங்கள்
- ரொக்கப் பத்திரங்கள்
- வாமன விஸ்வரூப வைப்புத் தொகை
- கால வரை வைப்புத் தொகை
- வெளிநாட்டில் வாழ்வோர் சேமிப்புக் கணக்கு

நாடுவீர் எம்மை—
பெறுவீர் நன்மை!

CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,

பதிவு அலுவலகம்: கும்பகோணம்—612 001.

CUB — உங்கள் வளர்ச்சிக்கேற்ற வங்கி.

MCS/CUB/301

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka

